பக்கங்கள்: இருபது+VI=24

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 புரட்டாதி 18 ஞாயிற்றுக்கிழமை (04.10.2009) UTHAYAN-A Live / National Tamil Daily கதிர்: 312

# ஐ.நா. சாசனத்தில் இலங்கையைப் பாதிக்கும் புதிய சரத்துக்களைப் புகுத்துவதற்கு முயற்சி

## ஒருபோதும் அனுமதியோம் என்கிறார் கெஹலிய



கொழும்பு, ஒக்ரோபர் 04

ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தில் இலங்கையைப் பாதிக்கும் புதிய சரத்துகளைப் புகுத்துவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட மனிதாபிமான நடவடிக்கைகளையும் ஐ.நாவின் 27 ஆவது பிரிவில் சேர்ப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியம் முயற்சித்து வருகிறது. இதனை எமது அரசாங்கம் ஒரு போதும் அனுமதிக்காது.

இவ்வாறு தெரிவித்தார் பாதுகாப்புத்துறைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல. கொழும்பில் தாம் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் வைத்து அவர் இதனைத் தெரிவித்தார். (20 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் இளைஞர்கள் ஐவர் நீர்கொழும்பில் கைது

கொழும்பு, ஒக்.4

நீர்கொழும்புப் பிரதேசத்தில் வெள்ளிக்கிழமை பொலிஸாரும், விமானப் படையினரும் இணைந்து மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளில், 5 தமிழ் இளைஞர்கள் கைதாகினர். கைதானவர்கள் நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (20 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி அகதி மக்களின் மீள்குடியேற்றம் குறித்து இலங்கைக்கு மீண்டும் இந்தியா அழுத்தம் கொடுக்கும்

### சென்னையில் அமைச்சர் சிதம்பரம் தகவல்



சென்னை,ஒக்.4

இலங்கையில் அகதி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள லட்சக் கணக்கான தமிழ் மக்களை மீளக்குடியேற்றுவது தொடர்பாக, இலங்கை அரசுக்கு மீண்டும் அழுத்தம் கொடுப்பது குறித்து பிரதமர் மன்மோகன் சிங்கும், வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். எம் கிருஸ்ணாவும் விரைவில் சந்தித்து ஆராய உள்ளதாக - மத்திய உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம் நேற்று இங்கு செய்தியாளரிடம் தெரிவித்தார்.

முதலமைச்சர் மு.கருணாநிதியை நேற்று அமைச்சர் சிதம்பரம் சந்தித்து நீண்ட நேரம் பேசினார்.

அதன் பின்னர் அவர் செய்தியாளர்களிடம் தகவல் தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது:-

இலங்கையில் இடம்பெயர்ந்த நிலையில் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்களின் மீள் குடியேற்றம் தொடர்பில் இந்திய மத்திய அரசாங்கம் நிச்சயம் நடவடிக்கை எடுக்கும். இந்த விடயம் தொடர் (20 ஆம் பக்கம் பார்க்க)

## சரண் அடைந்த இளைஞருக்கு மறுவாழ்வு

மட்டக்களப்பு, ஒக்.4

விடுதலைப் புலிகள் மற்றும் த.ம.வி.பு. அமைப்புகளிலிருந்து படையினரிடம் சரணடைந்து ஆயுதங்களையும் ஒப்படைத்த இளைஞர் யுவதிகளுக்கு வாழ்வாதார நிவர்ரண உதவிகள் வழங்கும் திட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் இத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். (20 ஆம் பக்கம் பார்க்க)

## நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்கக் கோரி நாடாளுமன்றில் பிரேரணை கொண்டுவர ஏற்பாடு

கொழும்பு, ஒக். 04

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்குமாறு கோரி அடுத்த மாதத்தில் எதிர்க்கட்சிகள் கூட்டாக நாடாளுமன்றத்தில் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பிக்க உள்ளதாகக் கூறப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் இதற்கான விவரங்களை ஆராய்வதற்காக விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள் (20 ஆம் பக்கம் பார்க்க)

## தனித்திருந்த ஆணின் கழுத்தை வெட்டிக் கொலை! நகைகள், பணம் கொள்ளை !! இராமாவிலில் கோரம்!!

யாழ்ப்பாணம், ஒக். 04

வீட்டில் தனித்து வாழ்ந்து வந்த ஆண் ஒருவரின் கழுத்தை வெட்டிக் கொலை செய்து, அவரது நகை மற்றும் பணம் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் கொடிகாமம், இராமாவில் பகுதியில் நடைபெற்றுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த கந்தையா கருணாகரன் (வயது47) என்பவரே படுகொலை செய்யப்பட்டவராவார்.

திருமணமாகாத பிரஸ்தாப நபர் தனது வீட்டில் இருந்தவேளை நேற்றுமுன் தினம் இரவு 8.30 மணியளவில் வீட்டுக்குள் புகுந்த இனந் தெரியாதவர்கள் அவரைக் கழுத்தில் வெட்டியபின் அவரது கழுத்தில் இருந்த 4 பவுண் சங்கிலி, 50 ஆயிரம் ரூபா பணம் ஆகியவற்றை அபகரித்துக் கொண்டு தப்பிவிட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (20 ஆம் பக்கம் பார்க்க)

## அகதிகளின் மீள்குடியமர்வை விரைவுபடுத்த ஐரோப்பிய ஒன்றியம் பஸிலிடம் வலியுறுத்து

பிரஸல்ஸ், ஒக். 04

வடக்கில் இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியமர்வை விரைவு படுத்துவதுடன் அபிவிருத்திப் பணிகளுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை அரசைக் கேட்டுள்ளது.

ஜனாதிபதியின் சிரேஸ்ட ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பஸில் ராஜபக்ச பிரஸல்ஸில் ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார ஆணையாளருடன் நடத்திய சந்திப்பின் போது மேற்கண்ட கோரிக்கை விடுக்கப்பட்டதாக பிரஸல்ஸில் உள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வு தொடர்பாக இந்தக் கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டது.

இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர் (20 ஆம் பக்கம் பார்க்க)

## முகாம்களில் தங்கிய யாழ். கர்ப்பிணிகள் விடுவிப்பு: ஆனால் சொந்த ஊர் திரும்ப முடியாமல் நிர்க்கதியில்!

வவுனியா, ஒக்.04

வவுனியா மனிக் முகாமில் தங்கியிருப்பவர்களில் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் கடந்த நான்கு நாள்களாக விடுவிக்கப்பட்டு பஸ்களில் ஏற்றப்பட்டு வவுனியா நகரப்பகுதியில் இறக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. அவ்வாறு இறக்கப்படுபவர்கள் யாழ்ப்பாணத்தைச் சொந்த இடமாக கொண்டவர்கள் என்றும் அவர்களுக்குப் போக்குவரத்து வசதி செய்யப்படாததால் பெரும் அசௌகரிய நிலைக்கு ஆளாகி உள்ளனர் என்றும் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார். (20 ஆம் பக்கம் பார்க்க)




இலங்கையின் முதற் தர SINGER தொலைக்காட்சிகள்

தற்போது விசேட சலுகைகளுடன் யாழ் மக்களுக்காக

www.singersl.com

எந்த மாதிரியிலுமாலான உங்கள் பழைய தொலைக்காட்சிக்கு விலைக்கழிவுடன் புத்தம் புதிய தொலைக்காட்சி

விசேட விலைக்கழிவு

திருப்தி இன்றேல் பணத்தினை மீளப்பெறும் வாய்ப்பு

கிளைகள்: யாழ்ப்பாணம் | நெல்லியடி | சுன்னாகம் | சாவகச்சேரி

SINGER Plus
MORE BRANDS-MORE CHOICE
யாழ் மண்ணின் பாரம்பரைத் தோழன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



ஸ்ரீலங்கா இராணுவத்தின் அறுபதாவது ஆண்டு விழாவையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட கண்காட்சி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று ஆரம்பமானது.

கண்காட்சியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வைபவ ரீதியாக நேற்றுப் பிற்பகல் திறந்து வைத்தார். அவரை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, பாதுகாப்புப் படைகளின் பிரதம தளகர்த்தர் ஜெனரல் சரத் பொன்சேகா, இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் ஜகத் ஜெயசூரிய ஆகியோரும் முப்படைகளின் தளபதியும் பொலிஸ் மா அதிபரும் வரவேற்றனர். கண்காட்சியை ஜனாதிபதி திறந்து வைப்பதையும் கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ள ஆயுததளபாடங்களையும் படங்களில் காணலாம்.

இக் கண்காட்சியைப் பார்வையிடுவதற்காக நேற்று 5000க்கும் மேற்பட்டோர் திரண்டதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது. இம்மாதம் 7 ஆம் திகதி வரை கண்காட்சி தொடர்ந்து நடைபெறும்.

# அணுகுண்டுச் சோதனைத் தடை; உறுதியாகப் பின்பற்றும் இந்தியா



புதுடில்லி, ஒக். 04

அணுகுண்டுச் சோதனை நடத்த விதிக்கப்பட்ட சுய தடையை உறுதியாக கடைப்பிடிப்போம் - என்று பிரதமர் மன்மோகன் சிங் கூறினார்.

இந்திய அணு சக்தித் திட்டங்களின் தந்தை ஹோமி பாபாவின் நூற்றாண்டு விழாவையொட்டி டில்லியில் கடந்த வியாழக்கிழமை அணு சக்தியை அமைதிப் பணிக்குப் பயன்படுத்துவது பற்றிய சர்வதேச மாநாடு நடந்தது. உலகம் முழுவதிலும் இருந்து வந்திருந்த விஞ்ஞானிகள் கலந்து கொண்ட இந்த மாநாட்டை தொடங்கி வைத்துப் பேசுகையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார். மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

அணுசக்தி படைத்த நாடு என்ற முறையில் அணு குண்டுச் சோதனை நடத்த தானாகவே இந்தியா சுயதடை விதித்துள்ளது. இதை நாங்கள் உறுதியுடன் கடைப்பிடிப்போம்.

அணு ஆயுதத் தொழில்நுட்பம் பரவுவதை தடுப்பதிலும் இந்தியா உறுதியாக இருக்கிறது. அணு ஆயுதமற்ற எந்த நாட்டுக்கும் அதுபற்றிய தொழில்நுட்பத்தை வழங்க மாட்டோம். ஆனால், அணு பரவல் தடை ஒப்பந்தம் (என்.பி.டி.) உலக அளவில் வெற்றிகரமாக செயற்படுத்தப் படவில்லை. இதில் சில குறைபாடுகள் உள்ளன. இந்த ஒப்பந்தம் பாரபட்சமின்றி செயற்படுத்தப்பட வேண்டும்.

அணு தீவிரவாதம் பெரிய சவாலாக உள்ளது. அணு ஆயுதங்களைப் பாதுகாக்க உலக அளவில் எடுக்கப்படும் முயற்சிக்கு உறுதுணையாக இருப்போம். அணு தீவிரவாதத்தைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐ.நா. சபையில் தீர்மானம் கொண்டு வந்தோம். அணு ஆயுதப் பாதுகாப்பு தொடர்பாக அடுத்த ஆண்டில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா மாநாடு நடத்த இருப்பதை இந்தியா வரவேற்கிறது - என்றார்.

## மீள் குடியேற்றம் தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 04

அரியாலைப்பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து வேறு பகுதிகளில் வசிக்கும் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பான கலந்துரையாடல் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெறும் இக்கலந்துரையாடலில் ஜே / 89 அரியாலை தென் கிழக்கு, ஜே / 90 அரியாலை கிழக்கு ஆகிய கிராமங்களிலிருந்து இடம்பெயர்ந்த மக்களை கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (10)

# கோவிந்தா, மாயவா என பக்தர்கள் கோஷமிட வங்கக்கடலில் வல்லிபுர ஆழ்வார் தீர்த்தமாடினார்

வடமராட்சி, ஒக்.04

வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சமுத்திரத் தீர்த்தோற்சவம் நேற்று பிற்பகல் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கோவிந்தா, கோபாலா, மாயவா என கோஷமிட கற்கோவளம் வங்கக்கடலில் நடைபெற்றது.

வசந்த மண்டபப் பூசை பகல் 12.45 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து சுவாமி உள்வீதி வலம் வந்து பி.ப 2.30 மணிக்கு சக்கரத்தாழ்வார், விநாயகர், மஹாலக்சுமி சகிதம் பாம்பு வாகனங்களில் கற்கோவளம் சமுத்திரத்தை நோக்கிப் புறப்பட்டனர்.

சமுத்திர கரையோரத்தில் உள்ள விஸ்ணு ஆலயத்தில் சுவாமிகள் தரித்து நிற்க கிரியைகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து தீர்த்தம் இடம்பெற்றது. கடலுக்குச் செல்ல இயலாத பக்தர்களின் வசதிகருதி ஆலய அறங்காவலர் சபையினரால் 'கடலுக்குச் சென்று திரும்புவதற்கு டிரக்டர் வண்டிச்சேவை ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. (1-5-236)

# இராணுவ வீரர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் படைச் சிப்பாய்கள் இருவர் பலியாகினர்

**மன்னார் முகாமில் சம்பவம்**

சக இராணுவ வீரர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு படைச் சிப்பாய்கள் நேற்றுக் கொல்லப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிமால் மெதி வக்க தெரிவித்துள்ளார். மன்னாரில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவத்தில் மற்றுமொருவர் காயமடைந்துள்ளதாகவும், கடுமையான காயம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் இரண்டு படைச் சிப்பாய்கள் உயிரிழந்துள்ளனர் என்றும் குறிப்பிடப்படுகிறது.

காயமடைந்தவர்கள் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். இந்த சம்பவம் குறித்து விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ)

# குருநாகல் குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பாக சந்தேகத்தில் படைவீரர் ஒருவர் நேற்றுக் கைது

கொழும்பு, ஒக். 4

குருநாகலில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்துக்குப் பின்னால் நின்று செயற்பட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் படைவீரர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அருகிலிருந்த இராணுவ விடுதி ஒன்றில் தமது பதவியை ராஜினாமா செய்த இவர், வானில் குண்டைப் பொருத்திவிட்டு தலைமறைவாகியிருந்தார் என விசாரணைகளிலிருந்து தெரிய வருகின்றது.

12 வயது சிறுமி ஒருவர் இச்சம்பவத்தில் உயிரிழந்தார். பாடசாலை மாணவர்கள் எண்மர் உட்பட 12 பேர் படுகாயமடைந்தனர். வான் உரிமையாளரின் வீட்டு முற்றத்தில் வைத்தே குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளது. வானை சாரதி செலுத்த ஆரம்பித்தவேளை, குண்டு வெடித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# வலிகாமம் வலய ஆசிரியர்களின் பெருவிளையாட்டு முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.04

வலிகாமம் கல்வி வலயத்தின் ஆசிரியர்களுக்கான பெரு விளையாட்டுக்கள் நாலு கோட்டங்களுக்கிடையில் நேற்று நடைபெற்றன.

இந்நிகழ்வுக்கு வலிகாமம் கல்வி வலயத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. குகநேசன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு போட்டியை ஆரம்பித்து வைத்தார்.

இப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு:-

**உதைபந்தாட்டம்**

சண்டிலிப்பாய்க் கோட்டம், தெல்லிப்பழைக் கோட்டம், உடுவில் கோட்டம்.

**துடுப்பாட்டம்**

சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில்.

**கரப்பந்தாட்டம்**

தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், உடுவில்.

**தாச்சி (ஆண்கள்)**

சண்டிலிப்பாய், தெல்லிப்பழை, உடுவில்.

**தாச்சி (பெண்கள்)**

சண்டிலிப்பாய், உடுவில்.

**வலைப்பந்தாட்டம் (பெண்கள்)**

சண்டிலிப்பாய், உடுவில். (1-5)

# தெரிவு செய்யப்பட்ட மாதர் சங்கங்களுக்கு சிறியரக மாவரைக்கும் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன

யாழ்ப்பாணம், ஒக். 4

யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு சிறிய ரக மாவரைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட உள்ளன.

விவசாயத்திணைக்களத்தின் ஏற்பாட்டில் நாளை திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு திருநெல்வேலியிலுள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் பெறுமான அதிகரிப்பு நடவடிக்கையில் ஆர்வத்துடன் ஈடுபட்டுவரும் 14 மாதர் கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள் இந்தத் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

[illegible] தெற்கு, நயினாதீவு தெற்கு, நெடுந்தீவு மேற்கு, வட்டு சங்கரத்தை, சண்டிலிப்பாய் மேற்கு, மாதகல் கிழக்கு, மல்லாகம் மத்தி, உடுப்பிட்டி மத்தி, வியாபாரிமூலை, குடமியன், தாவளை இயற்றாலை, நாவற்குழி கிழக்கு, கைதடி மேற்கு, ஏழாலை தெற்கு ஆகிய இடங்களைச் சேர்ந்த மாதர் கிராமிய அபிவிருத்திச் சங்கங்களே தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த இயந்திரங்கள் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியை பயன்படுத்தியும், நாமே பயிரிடுவோம் நாட்டைக் கட்டியெழுப்புவோம் திட்டத்தின் மூலமும் மாகாண விவசாயப் பணிப்பாளரால் கொள்வனவு செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயங்கள், பாடசாலைகள், சமூக நிறுவனங்கள் இளைஞர்களை அறவழிக்கு ஆற்றுப்படுத்த வேண்டும்


ஆதீனத்தின் முகப்பில்...

கோப்பாய், பழம் றோட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீனத்தின் குருமுதல்வர் சுப்பிரமணியமுனிய சுவாமிகளின் சீடரும், உலகின் பல பாகங்களுக்கும் சென்று ஆங்கிலத்திலும் தமிழிலும் இந்து மத தத்துவக் கருத்துரைகளையும், தியானப் பயிற்சிகளையும் வழங்கியதோடு, துன்பப்படும் மக்களுக்கு ஆறுதல் கூறி ஆற்றுப்படுத்தியும் வருபவர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள். இவர், பல்வேறு சமூகப் பணிகளை முன்னெடுத்து வருபவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அவர் உதயன் பத்திரிகைக்கு வழங்கிய விசேட செவ்வி இது.

*கேள்வி:* தாங்கள் இன்று உலகம் அறிந்த ஆன்மீகப் பெரியவராக விளங்குகிறீர்கள். தாங்கள் ஆன்மீக வழியில் மிகுந்த அக்கறை கொள்ள ஆரம்பத்தில் ஏற்பட்ட வாய்ப்புப் பற்றிக் கூறுங்கள்?

*பதில்:* எனது பெற்றோர் நிறைந்த இறைபக்தியுடையவர்கள். சிறுபராயத்தில் கோப்பாய் வீரபத்திரர் கோயில் வழிபாட்டில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்பட்டது. பாடசாலை மாணவனாக விளங்கிய வேளை கோப்பாய் வீரபத்திரர் கோயில் சூழலில் சைவச் சிறுவர் கழகம் செயற்பட்டது. அக்கழகத்தில் தலைவராகத் தொண்டாற்றும் வாய்ப்ப எற்பட்டகு. இக்கழகம் ஒருமுறை யோகர் சுவாமிகளின் சீடரான சுப்பிரமணிய சுவாமிகள் அளவெட்டியில் தங்கியிருப்பது அறிந்து வீரபத்திரர் ஆலயத்துக்கு அழைத்தார்கள். அன்றுதான் எனது சற்குருவைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. சுவாமிகளின் நிறைந்த ஆசி என்னை அவரது மீளா அடிமையாக ஆட்கொண்டது. அதன்பின் அவரை நாடித்தேடித் தொடர்பு கொண்ட வண்ணம் இருந்தேன். ஆன்மீக வாழ்வு அவரது ஆசியால் கிடைத்தது.

எனது ஆரம்பக் கல்வி கோப்பாய் நாவலர் வித்தியாசாலையிலும் இடைநிலைக் கல்வி கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் உயர்தரக் கல்வி யாழ்.மத்திய கல்லூரியிலும் அமைந்தது. எனது 17ஆவது வயதில் இந்த ஆன்மீகப் பயணத்தைத் தொடரும் வாய்ப்பு ஏற்பட்டது.

*கேள்வி:* அமெரிக்க ஹவாய் ஆச்சிரமத்தில் 14 வருடங்கள் தொடர்ந்து தங்கியிருந்து ஆத்மஞானம் பெற்ற தாங்கள் ஹவாய் ஆச்சிரம அனுபவம் பற்றிக் கூறுங்களேன்?

*பதில்:* 1988ஆம் ஆண்டு குருதேவரின் அழைப்பில் ஹவாய் சென்றேன். ஹவாய் புண்ணிய பூமி. மேற்குலக நாட்டில் எழுந்த முதல்சிவன் கோயில் எங்கள் குருதேவரால் அமைக்கப்பட்ட கோயில். இவ்வாலயத்தில் நடராசப் பெருமானுக்கு 24 மணிநேரமும் கதவு திறந்த நிலையில் தொடர்ந்து பூசை நடைபெறும். அழகான சிவன் கோயிலில் 3 மணித்தியாலயத்துக்கு ஒரு முறை பூசை இரவு, பகல் நடைபெறும். அங்குள்ள துறவிகள் நேர ஒழுங்கின் பிரகாரம் பூசை செய்வார்கள். உலகில் எங்கும் இல்லாத முறையில் இரவு, பகல் இடைவிடாது பூசை நடைபெறும். இங்கு குருதேவரால் ஆற்றுப்படுத்தப்பட்ட 24 துறவிகள் ஆச்சிரமத்தில் இப்பணிகளில் ஈடுபடுகின்றார்கள். இவர்களில் ஒருவனாக அடி[illegible] இணைந்து கொண்டமை என் வாழ்வில் பெரும் பாக்கியம். தியானப்பயிற்சி, யோகாசனப் பயிற்சி, பூசைப் பயிற்சி, தத்துவ வகுப்பு மட்டுமன்றி, ஒவ்வொரு சீடர்களுக்கும் ஒதுக்கப்பட்ட பணிகளை குருதேவரின் கண்காணிப்பில் செய்வதும் பெரும் பயிற்சி எனலாம்.

# மேற்கு நாட்டுப் பிள்ளைகளை அவர்களது உளநிலைக்குச் சென்று சமய உண்மைகளை அறியச் செய்யும் முயற்சியில் ஈடுபடுகின்றேன்


அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி,
செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுகன் ஆகியோருடன்....

ஆச்சிரம வாழ்வு மிகவும் அற்புதமானது. 751 ஏக்கர் நிலத்தைக் கொண்ட எங்கள் ஆச்சிரமத்தின் ஊழியராகப் பல்வேறு நிலைகளில் நாம் பணி செய்ய வல்ல வாழ்வு பெற்றோம். ஆசனத்தில் இருந்த நேரத்தை விட அல்லும் பகலும் வேலை செய்து செய்து ஆத்ம ஞானத்தைப் பருகியது தனித்துவமானது. இங்கு எவரும் ஊதியத்தில் பணி செய்வதில்லை. நாம் எங்கள் கடமைகளைச் செய்கிறோம்.

*கேள்வி:* ஹவாய் ஆதீன சற்குரு சிவாய சுப்பிரமணியமுனிய சுவாமிகளின் தொண்டு பற்றிக் கூறுக?

*பதில்:* யாழ்ப்பாணத்து யோக சுவாமிகளின் அருள் உபதேசம் பெற்ற குருதேவர் பல்வேறு ஆலயங்களையும் கல்லூரிகளையும் சமூக ஸ்தாபனங்களையும் மேலைத் தேசத்தில் நிறுவியுள்ளார். பல மேலைத்தேச வெள்ளை இன மக்கள் குருதேவரால் கவரப்பட்டு சைவசமய மேன்மையை அறிந்து இன்று சைவசமய ஆர்வலராக விளங்குவதை அனைவரும் அறிவார்கள்.

எமது ஆச்சிரமத்தால் வெளியிடப்படும் 'ஹிண்டுசியம் ருடே' என்ற சஞ்சிகையை படித்தவர்களுக்கு விளங்கும் குருதேவர்கள் ஆற்றிய பணிகளின் சிறப்பு. இன்று உலகளாவிய ரீதியில் குருதேவரின் பணிகள் அவர் சமாதி அடைந்த பின்பும் தொடர்கின்றன. அவரது ஆச்சிரம முதல்வராக இன்று சற்குருவேலன் சுவாமிகள் தொடர்கிறார்கள் (அமெரிக்க வெள்ளையர்). தற்போது சுவாமிகளின் ஆச்சிரமத்தில் குருதேவரால் தொடக்கப்பட்ட ''இறைவன் கோயில்'' என்ற பெரும் கருங்கற் சிவன் கோயில் திருப்பணி நிறைவாக நடைபெற்று வருகிறது.

*கேள்வி:* புலம்பெயர்ந்து வாழும் எங்கள் நாட்டைச் சார்ந்த மக்களுக்கு தாங்கள் ஆன்மீக வகுப்புகள், போதனைகள், ஆறுதல்கள் செய்து வருவதாக அறிகிறோம். அந்த அனுபவம் பற்றி....

*பதில்:* அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் வாழும் எம்மக்களின் பிள்ளைகள் பெரும்பாலும் ஆங்கில மொழியில் கற்று அந்நாட்டுப் பண்பாட்டின் சாயலை நாடி வருகிறார்கள். அவர்கள் வேண்டும் என்று அப் பண்பாட்டைப் பின்பற்றவில்லை. அவர்களின் வாழ்வியல் மற்றும் கல்விச் சூழல் அந்நிலைக்கு ஆட்படுத்துகிறன. இந்நிலையில் அவர்களின் பெற்றோர் தங்கள் சொந்தச் சமய மேன்மையை, ஆன்மீகத்தை போதிக்க முடிவதில்லை. இந்நிலையில்தான் நான் ஆங்கிலமொழி மூலம் அவர்களது உள நிலைக்குச் சென்று அவர்கள் சமய உண்மைகளை அறியச் செய்யும் முயற்சியைச் செய்து வருகிறேன். இதில் நிறைந்த வெற்றி கிடைத்தது.

குறிப்பாக பல இளைய தலைமுறையினர் ஆத்மீக நாட்டம் கொண்டவர்களாக, தலயாத்திரைகளை விரும்புபவர்களாக, சமூகப் பணிகள் செய்வதில் ஆவர்வமுடையவர்களாக எம்மவரின் பிள்ளைகள் மாறிவருவதை அவதானிக்கலாம்.


நவீன வலைப்பின்னல் தகவல் கருவிகளைப் பயன்படுத்திப் பல மேலை நாட்டில் வாழும் நம் மாணவர் சமயச் செய்திகளை, சந்தேகங்களைத் தெளிந்து கொள்வதில் அக்கறை காட்டி வருகின்றனர்.

# ஆச்சிரம வாழ்வு அற்புதமானது என்கிறார் தொண்டு நாத சுவாமிகள்



*கேள்வி:* உங்கள் தாயகத்தில் குறிப்பாக யாழ்ப்பா ணத்தில் வாழும் மக்களுக்கு தாங்கள் சொல்ல விரும்புவது.....?

*பதில்:* குறிப்பாக போரின் அனர்த்தங்களால் பல்வேறு துன்பங்களை அனுபவித்த மக்களுக்கு இறையருளால் ஆறுதல் கிடைக்கப் பிரார்த்திக் கிறேன். பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு கல்வி மட்டும் தேடிக் கொடுத்தரல் போதும் என்று நினைக்கும் பழக்கம் மாற வேண்டும். பிள்ளைகள் நல்ல பண்புள்ளவர்களாக வாழ்வதற்கு அவர்களுக்கு ஆன்மீகத்தையும் தேடிக் கொடுக்க வேண்டிய பொறுப்பு பெற்றோருடையதே. இரக்கமுள்ள மனித சமுதாயம் உலகெங்கும் உருவாகினால் எவருக்கும் துன்பமில்லை. கருணை, இரக்கம், பொறுமை, உதவும் தன்மை சமூகத்தில் அருகி வருவது கவலை தருகிறது. கோவில்கள், பாடசாலைகள், சமூக நிறுவனங்கள் ஆன்மீக வாழ்வுக்கு, அறவாழ்வுக்கு பிள்ளைகளை [illegible]ழிப்படுத்தி உதவ வேண்டும். இ[illegible] இன்றைய உடனடித் தேவை. ★



# ஹவாய் ஆலயத்தில் இரவு, பகல் இடையறாது பூசைகள்

செவ்வி: திருவழகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

வையத்துள் குழந்தையாய் 16 ★ 08 ★ 1938



வானுறையும் தெய்வமாய் 04 ★ 09 ★ 2009

### திருமதி மனோன்மணி தர்மலிங்கம்

மங்கையருள் மாணிக்கமாய்
வையத்துள் வைரமாய் ஒளிவீசி...
இடி இடிக்க மாளிகையோ
இடிந்தழிந்து போனது போல்
பத்தாவோடு உடன் கட்டை
பத்தினிகள் போவது போல

ஐயாவை எரித்த கட்டை
புகை ஆறும் முன்னாலே,
போனாயே பின்னாலே
யாரிடத்தில் ஆறிடுவோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய அன்னை
இராஜ இராஜேஸ்வரி (பேச்சி) அம்பாளை
வேண்டுகின்றோம்.

44/1, அம்பாள் வீதி,
நாயன்மார்கட்டு. (89517) குடும்பத்தினர்.

## 3 ஆம் ஆண்டு நினைவுநாள்



அமரர்
சின்னத்தம்பி
செல்வசீலன் (பாலா)
(அலோமாஸ்
உரிமையாளர், சுன்னாகம்)

அன்னை மடியில்
02.02.1953

ஆண்டவன் அடியில்
04.10.2006

''மரண பரியந்தம் உண்மையாயிரு,
நான் உனக்கு ஜீவ கிரீடத்தை அருளுவேன்''
மூன்றாண்டுகள் ஆனாலும் ஆறவில்லை - எம்மனம்
காலங்கள் கடந்தாலும் காலம் எல்லாம் - வாழ்ந்திடும்
எழுதிவைத்த ஒவியமாய் எம்முடன் - வாழ்ந்திடுவாய்.

இராமலிங்கம் வீதி,
உடுவில், சுன்னாகம். (89515) குடும்பத்தினர்:

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 34 வயது, கேட்டை நட்சத்திரம், Civil Engineer Australia citizen, அழகிய படித்த பெண்ணிற்கு படித்த மணமகன் தேவை. 8இல் செவ்வாய் உள்ளது. மூன்று சுற்றுக் கிரக பாவம் 16. Profile No: 1685. இது ஒரு திருமண சேவை (www.thaalee.com) போன்: 2523127

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 36 வயது, அச்சுவினி நட்சத்திரம், ACCA, Accountant, UK citizen மணமகனுக்கு அழகிய மணமகள் தேவை. செவ்வாய்க் குற்றம் இல்லை. மூன்று சுற்றுக் கிரக பாவம் 13. Profile No: 7015. இது ஒரு திருமண சேவை (www.thaalee.com) போன்: 2520619

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 31 வயது, மூல நட்சத்திரம், Electronic Engineer, Switzerland citizen, vegetarian மணமகனுக்கு மணமகள் தேவை. 8இல் செவ்வாய் உள்ளது. மூன்று சுற்றுக் கிரகபாவம் 67. Profile No: 6393. இது ஒரு திருமண சேவை (www.thaalee.com) போன்: 2523127. (சி/561226)

## திருமண சேவை

மணமக்களே www. thaalee.com என்கிற Web site இல் பல்லாயிரக்கணக்கான மணமக்களுடைய முழுமையான விவரங்கள், ஜாதகங்கள், புகைப் படங்கள் உள்ளன. நீங்களாகவே உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொண்டு எம்மை நாடினால் நாங்கள் ஆவன செய்வோம். உங்களுடைய விவரங்களையும் நீங்களாகவே பதிவு செய்து கொள்ள முடியும். மேலதிக விவரங்களுக்கு தொ.பே: 2523127, 2520619.

Address: 45/1, மாதம்பிட்டிய வீதி, கொழும்பு - 15

## அருள்முருகன் திருமணப் பணியகம்

தகுந்த மணமக்களுடன் விரைவான திருமணங்களுக்குரிய நேர்த்தியான சேவைகளை வழங்கும் பணியகம் இது! இதன் நோக்கங்கள், சேவை முறைகள், பொதுப் பண்புகள், மணமக்கள் விவரங்களது அச்சிட்ட பிரதிகள் உள்ளன. இவற்றைத் தெளிவுற அறிந்து, விரும்பினால் உரிய விவரங்களை வழங்கலாம். தகுந்த துணை அமைய தரமான சேவையைக் கண்டறியுங்கள். தொ.பே.021 2229334, 03,யாழ்.வீதி, சிறாம்பியடி லேன், பலாலி வீதி, (ஆரியகுளம் சமீபம்), யாழ்ப்பாணம். (89518)

## விற்பனைக்கு

மூன்று அறைகளைக் கொண்ட கடைக் கட்டடம் நான்கு பரப்புக் காணியுடன் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கு அருகில் விற்பனைக்கு உள்ளது. தொடர்பு: இந்திரன் தொலைத் தொடர்பு நிலையம், பிரதான பஸ் நிலையம் அருகில், சங்கானை. T.P 021 321 2669.

## வீடு விற்பனைக்கு

கச்சேரி, நல்லூர் றோட்டில் பாரதி வீதியில் 02 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு:தொ.பே.077 4386584

## விற்பனை

10 மாதம் நிரம்பிய அல்சேசன் [illegible]ய் உடன் விற்பனைக்குண்டு.
077 4896036 தொடர்பு: 174/16, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (89522)

## யாழ்ப்பாண கிளைக்காரியாலயத்தில் வெற்றிடம்

### காரியாலய உதவியாளர்
### (Office Assistant)

பிரதானதமிழ் செய்தி பத்திரிகை ஸ்தாபனமான எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) லிமிடெட் (VIRAKESARI வீரகேசரி) மேற்சொல்லப்பட்ட பதவியை தன்னுடைய யாழப்பாணக் கிளையில் நிரப்புவதற்கு தகுதியான ஒருவரை எதிர்பார்க்கின்றது.

தகுதியான ஆண் விண்ணப்பதாரர்கள் க.பொ.த. (உயர்தரம்) சித்தியடைந்தவராகவும் 20-28 வயது வரம்புக்குள் உட்பட்டவராகவும் இருக்கவேண்டும். விண்ணப்பதாரர்கள் கணக்கியல் பின்னணி மற்றும் கணனி அறிவுடையவராய் இருந்தால் விரும்பத்தக்கது.

ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில்தேர்ச்சி பெற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

சம்பளம் பேசித்தீர்க்கப்படலாம்.

எதிர்பார்க்கப்படும் விண்ணப்பதாரர்கள் எங்களுடைய யாழ்ப்பாண கிளைக்காரியாலயத்திற்கு (இல.303, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்) நேரடியாக அவர்களது சுய விபரக்கோவை மற்றும் சம்பந்தப்பட்ட சான்றிதழ்களோடு 5.10.2009 அன்று மாலை 3 மணிக்கும் மற்றும் 6.10.2009 அன்றுகாலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை நடைபெறவிருக்கும் நேர்முகப்பரீட்சைக்கு சமுகமளிக்கவும்

மனிதவள முகாமையாளர்
எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட்,
இல.185, கிராண்ட்பாஸ் வீதி,
கொழும்பு-14.

## மரண அறிவித்தல்

### நாகேந்திரம் செல்வரெத்தினம்

*(யாழ்.வர்த்தக வங்கியின் ஓய்வுபெற்ற காசாளர்)*



காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட நாகேந்திரம் செல்வரெத்தினம் நேற்று (02.10.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகேந்திரம் - பாக்கியம் தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான அருணாசலம் - செல்லாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் மனோன்மணியின் அன்புக் கணவரும் புண்ணியசீலன், அருட்சீலன், லியனகுமாரி, இதயகுமாரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவசோதி, நவசிவாயம், சுஜாதா ஆகியோரின் பாசமிகு மாமனும் நாராயணன் (கொழும்பு), காலஞ்சென்றவர்களான மகாலெச்சுமி, முத்துலெச்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் நவரத்தினம், நவசிவாயம், இந்திராதேவி, காலஞ்சென்றவர்களான பரமநாதர், நவரத்தினம், அன்னம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சங்கவி, ஆதிரை, மயூரன், டிலக்சன், துவாரகா, தனுசன், சுவேதிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவர்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.10.2009) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிப் பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அதிகார் செல்லமுத்து வீதி,
மானிப்பாய். 021 3737952
தகவல்: சிவசோதி (மருமகன்). (89516)


## BCS /BIT /FIT வகுப்புகள் ஆரம்பமாகின்றன!

**BCS**
- Certificate Level (Sun 8.30 - 3.15pm) 4th October 2009
- Diploma Level (Wed 9.00 - 4.00pm) 14th October 2009
- PGD Level (Sat 8.30 - 5.30pm) 10th October 2009

**BIT**
- Semester 1 (Sun 8.30 - 5.30pm) 4th October 2009
- Semester 3 (Sat 8.30 - 5.30pm) 10th October 2009

**FIT**
- FIT (Tue 8.30 - 1.30pm) 20th October 2009


NCC / HND Completed students can directly start BCS Diploma/PGD.

மேலதிக விபரங்களுக்கு : 0772365461, 0772365460

IDM
Nation's ICT Academy
Affiliated University College

No 216, Navalar Rd, Jaffna

எமது நிறுவனம்
04.10.2009 முதல்
புது பொலிவுடன்
புதிய முகவரியில்
இயங்கி வருகிறது
என்பதனை
வாடிக்கையாளர்களுக்கு
அன்புடன்
அறியத்தருகிறோம்



No: 218 A/2, Wolfendhal Street,
Colombo-13.
Phone:- 011 [illegible]

Branch
No: 300 K.K.S Road, Jaffna,
Fax:- 0212224559.Phone:- 021 2228812


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழப்பமான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த முயல்வோர் குறித்து தமிழ் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டிய காலம் இது

**யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் யாழ்ப்பாணத்தில் ஊர் மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடிய பின்னர் வெளியிட்டுள்ள முற்குறிப்பான கருத்துக்கள் இவை**

"என்ன செய்யிறது என்று தெரியேல்லை என்ன நடக்கப்போகுது என்று தெரியேல்லை''

இவை தமிழ் மக்கள் மனதைக் குடையும் கேள்விகள்.

எனினும், தமிழ்ச் சமூகம் அழிவின் இடிபாடுகளில் இருந்து மீண்டெழ விரும்புகின்றது. படிப்படியாகச் சமூகத்தை மீளக்கட்டியமைத்து தன்னைத்தானே ஆளும் தகுதியுடைய அதிகாரத்தைப் பெற விரும்புகின்றது. இந்தப் பணியை உறுதியுடன் முன்செல்வதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும்.

நான் சந்தித்த அனைவருமே முகாம்களில் அடைபட்டுள்ள தமது உறவுகளை எண்ணிக் கவலைப்பட்டார்கள்; கண்ணீர் விட்டார்கள். மழை காலத்திற்கு முன்பு அவர்களை முகாம்களில் இருந்து விடுவித்து வீடுகளுக்குக் கொண்டு வந்து விடவேண்டும் என்று தவிக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் மக்கள் நடமாடுகின்ற அளவிற்குப் பயம் சற்று விலகியிருக்கின்றது. எனினும், கூட்டங்களில் கூடவோ, கருத்துக்களைக் கூறவோ தயங்குகின்றார்கள். தங்களிடம் எண்ணங்கள் இருந்தும் அவற்றை வெளிக்காட்ட முடியாமல் வாழுகிறோம் என்றும் கூறினார்கள். 'நான் என்ன சாப்பிட்டன் நீ என்ன சாப்பிட்டாய்' என்பது மட்டும்தான் கதைக்க முடியும் என்று ஓர் இளம்பெண் கூறினாள். தாம் கதைப்பதற்கு, செயற்படுவதற்கு ஏற்ற சூழல் வரவேண்டும் என எதிர்பார்க்கிறார்கள்.

''தமிழர்களுக்கு இப்படி ஓர் அழிவு ஏன் வந்தது? இனி என்ன நடக்கப்போகுதென்றும் தெரியேல்ல''

ஒரு மூதாட்டி எழுப்பிய ஆதங்கங்கள் இவை.

தமிழ் மக்கள் உரிமை பெற்றவர்களாக வாழவேண்டும் என்பது அவர்களது ஆசை.

''சிங்கள மக்கள் போல தமிழ் மக்களும் எல்லாத் துறைகளிலும் சம அந்தஸ்த்தோடு வாழ வேண்டும். அந்தக் காலத்தை எதிர்பார்க்கின்றேன்' என்று ஓர் ஆசிரியை கூறினார்.

**மாநகரசபைத் தேர்தல் மாற்றத்துக்கு வித்திட்டுள்ளது**

யாழ்.மாநகரசபைத் தேர்தலில் எட்டாயிரமளவிலான மக்கள் தம் மனதுக்குள் வைத்திருந்த இந்த உரிமை வேட்கையை வாக்குச் சீட்டில் காட்டியதை அதாவது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களித்தமையை தமிழ்ச் சமூகம் நன்றியோடு நினைவுகூர்வதை நான் பல இடங்களில் அவதானித்தேன். யாழ்.மாநகரசபைத் தேர்தலில் பெரும்பாலான மக்கள் பயம், தேர்தல் தேவையில்லை போன்ற எண்ணங்களால் வாக்களிப்பில் கலந்துகொள்ளாமல் விட்டாலும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பிற்கு எட்டாயிரம் அளவிலான வாக்குகள் கிடைத்திருப்பது ஒரு மாற்றத்திற்கு வித்திட்டுள்ளது. அரசாங்கம் உட்படப் பலர் இந்தளவிற்குத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு செல்வாக்குடையதாக விளங்கும் என்று எதிர்பார்த்திருக்கவில்லை.

இதன் காரணமாக இரண்டு விடயங்கள் தெற்கு மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் தெளிவாகியுள்ளது.

1.தமிழ் மக்கள் மத்தியில் எவ்வளவு அழிவுகள் நடந்தாலும் அவர்கள் பிச்சை வேண்டாம் நாயைப்பிடி என்று இரக்காமல் தமிழ் மக்களது பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும், தங்களது உரிமை கிடைக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள் என்பது.

2. தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச வேண்டும் என்பது.

இன்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பிற்குத் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதில் ஒரு முக்கிய பங்குண்டு என்பது ஒரு வெளிப்படையான உண்மையாகி விட்டது.

போருக்குப் பிந்திய நிலைமையில் தமிழ் பேசும் மக்களது உரிமைகளைப் பெறும் வகையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தன்னைப் புனரமைத்துக் கொள்ளவும் தனது அணுகுமுறையில் மாற்றுவதற்கு முயன்று வருகிறது.

**தமிழ்பேசும் மக்களின் கட்சிகளிடையே பொதுவேலைத் திட்டம் அவசியம்**

மேலும் இன்றைய நிலையில் தமிழ் பேசும் மக்களின் கட்சிகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்திக் கொள்கை அடிப்படையிலான ஒரு பொது வேலைத்திட்டமொன்றுக்கு நாம் முன்வர வேண்டும். அப்போது வேலைத்திட்டத்தில் பின்வரும் கூறுகள் இடம்பெறலாம்:

1. முகாம்களில் வாழும் மக்களை அடுத்து வரும் ஒரு சில மாதங்களில் மீளக் குடியேற்றுதல், அனைத்து இடம்பெயர்ந்த மக்களையும் மீளக் குடியேற்றுதல், சிறைகளில் உள்ளோரை விடுவித்தல்

2. தமிழ்மக்கள் அனைவருக்கும் பயம் நீங்கிய பாதுகாப்பான ஒரு ஜனநாயகச் சூழலை ஏற்படுத்தல்.

- மக்களுக்கு ஆறுதல் அளிக்கும்

**சமகால அரசியல் பார்வை**

ஆற்றுகைகளை நடத்துதல்.

இதில் தமிழ் மக்களுக்கு நடந்தது என்ன? ஏன் இப்படி நடந்தது? தமிழர்களுடைய எதிர்காலம் என்ன? என்பது சம்பந்தமான ஒரு தெளிவான நிலையைப் பெறுதல்.

- தமது எதிர்காலம் பற்றிய கற்பனையோடு தமது அரசியல் இதற்கான செயற்றிட்டம் ஒன்றை வகுத்து அதாவது ஒற்றுமைக்கான செயற்றிட்டம் ஒன்றை நாம் செயற்படுத்த வேண்டும்.

இன்று தமிழ் மக்களிடையே உள்ள குழப்பமான நிலைமையில் குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பதற்குப் பலர் முண்டியடிப்பது தெரிகிறது. பதவியைப் பெறுவது ஒன்றே குறிக்கோளாகக் கொண்ட அரசியல்வாதிகளும் ,அதிகாரிகளும் இக் குழப்பமான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த முயல்வார்கள். மக்கள் விழிப்பாக இருப்பதன் மூலம் மட்டும்தான் மேற்கூறிய அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் எமது சமூகத்தை நாசப்படுத்துவதைத் தடுக்க முடியும். அத்தோடு அவர்களை நல்லவர்களாக மாற்றி உண்மையான சமூக சேவையில் ஈடுபட வைக்கவும் முடியும்.

போருக்குப் பிந்திய சமூகத்தைச் சிறந்த ஒரு சமூகமாக வழிப்படுத்தவும் மீளக்கட்டியமைக்கவும் பலர் தன்னலமற்று சேவைபுரிய வேண்டிய தேவையுண்டு. சரியான ஆள்களை இனம்காண வேண்டிய பொறுப்பு சமூகத்திற்குண்டு. அதேநேரம், இத்தகைய சமூகத் தலைவர்கள் அனைவருக்குமான இடமும் கௌரவமும் சமூகத்தில் கிடைக்க வேண்டும்.

தமிழ்ச் சமூகத்தை அழிவிலிருந்து மீட்டெடுத்து அரசியல் சுதந்திரம் நோக்கி பயணிப்பதற்கு தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். அந்த ஒன்றுபடுதலை ஏற்படுத்த நாம் முயற்சிக்க வேண்டும்.

தமிழ் மக்களின் அறுபது வருட அரசியல் போராட்ட வரலாற்றில் இருந்து கற்றுக்கொண்டு இனிமேல் தமிழ் மக்களின் அரசியல் சுதந்திரத்துக்கான பாதையைச் செப்பனிட வேண்டும். இனிவரப் போகும் கட்டத்தில் பின் வருவன முக்கிய கூறுகளாக அமைய வேண்டும்.

## அறுபது வருட அரசியல் போராட்ட வரலாற்றில் இருந்து கற்றுக்கொண்டு மக்களின் சுதந்திரத்துக்கான பாதைகளைச் செப்பனிட வேண்டும்

மாற்றத்தைக் கொண்டு வரவும் முயன்று வருகிறது.

* மேடையிலே நின்று பேசிவிட்டுப் போகின்றவர்களாக இல்லாமல் மக்களோடு நெருங்கி உறவாடுதல்.
* தளம்பல் அற்ற உறுதிப்பாட்டைக் காண்பித்தல்.
* உண்மையும் நேர்மையும் வெளிப்படச் செயற்படல்.
* மாற்றுக் கருத்துள்ளவர்களைத் திட்டியும், தாக்கியும், குறைசொல்லியும், கேலி பண்ணியும் உணர்ச்சி வசப்படுவதை விட்டு ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைத்து உரையாடல்களை மேற்கொள்ளும் ஒரு ஜனநாயக சக்தியாக செயற்படல்.
* பிரச்சினைகளைக் கற்பனையோடு எதிர்கொள்ளல்

போன்ற அம்சங்களைக் கொண்ட புதிய அணுகுமுறையைக் கொண்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தன்னை அபிலாசைகளை வெளிப்படுத்தும் மக்களாக உருவெடுத்தல்.

3. தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளின் அடிப்படையில் அரசியல் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு அரசியல் தீர்வைக் காணுதல்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏனைய கட்சிகளோடு மேல்வருவனவற்றை உள்ளடக்கிய ஒரு பொது வேலைத்திட்டத்தில் இணைந்துகொள்வதற்கு நாம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**ஒற்றுமையை ஏற்படுத்துவது எப்படி?**

ஒற்றுமை வேண்டும் என்பது இன்று பலரும் அவாவி நிற்கின்ற ஒரு விடயமாகும். ஆனால் அந்த ஒற்றமையை எப்படி ஏற்படுத்துவது? என்பது சிக்கலானது. தொழில்வாண்மையோடு செய்யப்படவேண்டிய விடயம் இது.

1. தமிழ் மக்கள் வலுவடைந்து தமது அரசியல் உரிமைகளை உறுதியாக வெளிப்படுத்துதல்.

2. ஏனைய சமூகங்களை மரியாதையோடு அணுகி உறவுகளை மேம்படுத்தி எமது அரசியல் அபிலாசைகள் பற்றிய புரிந்துகொள்ளலை ஏற்படுத்தல்.*



**பத்மினி சிதம்பரநாதன்**
நாடாளுமன்ற உறுப்பினர்
(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

# புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக்.4

ஐந்தாம்தரப் புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் நேற்று இணையத்தளம் ஊடாக வெளியாகியுள்ளன.

இணையத்தளத்தில் பெற்ற முடிவுகளின் பிரகாரம் பாடசாலை அதிபர்கள் நேற்று முன்தினம் அனுப்பி வைத்த முடிவுகள் சில வருமாறு:-

**யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை**

எல்.சிறிகரசன் - (192), எஸ்.அபிநயா-(174), என்.சுஜீவன் - (169), வி.அனுசியந்தன் - (168), எஸ்.ராகுலன் - (166), ரி.ஆதித்தன் - (161), ஜே.பிரணவன் - (160) எஸ்.ஆர்த்திகா - (160), ரி.ஜெவிசன் - (159), ஏ.கஜீவன் - (158), எஸ்.அனுரோஜினி - (156), எம்.கிரிதரன் - (153), ரி.துஸ்யந்தி - (150), கே.சங்கீதா - (149), கே.மிதுன் - (147), எல்.அபிமன்யு - (146), ஜி.மாதங்கி - (146), எஸ்.நர்த்தனா - (146), யோ.நிவேதன் - (145), வி.கோபிகா - (144), பி.கிமாகினி-(143), ஆர்.கலியுகன் - (142), ஜே.ஆஜித்தனன் - (142), கே.சதீஸ்கரன் - (141), எஸ்.ஶ்ரீரங்கன் -(141) எஸ்.என்.யதுர்சன் - (140), என்.பிரியதர்சினி - (140).

**யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை**

எஸ். செந்தூரா -(185) (மாவட்டநிலை -04), எஸ்.யுவேதா - (181) (மாவட்ட நிலை-06), எஸ்.சதூரிக்கா -(180) (மாவட்டநிலை-07), கே. தேவவதி- 180 (மாவட்டநிலை-08), என்.பிருந்தாபரன் -(177), ஆர்.தக்ஷாயினி -(177), எஸ்.கீதசபா -(177), வி.தனுசா- (174), ரி.துவாரகா-(172), ஆர்.ஜெயநீசன் -(171), கே.தர்மிகன்-(169),கே. யதுஷனன் -(169), வி. வத்சங்கீதசர்மா-(169), ஏ.கேஷவி-(169), எம்.சாத்வீகன் -(169), ஏ.சங்கீதன்-(167), எஸ். நிருஷன் -(167), எஸ்.அபிராமி- (167), எஸ்.சிவனுஜன் (167), எஸ்.பிரணவன்- (166), பி.சங்கீர்தனன்-(166), பி. சாம்பவி -(165), வி.தனுஜன்-(165), [illegible], எஸ்.சாய்சங்[illegible], [illegible] (163),எஸ்.பவதாங்கினி -(163), எஸ்.கஜித்-(163), வி.சானந்தன்-(163), கே. தேனுகா-(162), கே.வைஷ்ணவி- (162), ஏ.சாம்பவி-(162), கே.கௌரிசங்கர்-(162), ஆர்.ஸ்ரலின்டினோசன்- (162), பி.துஷாயினி-(162), ஆர்.றோய்நிஷான்-(161), யூ.பவித்திரா-(161), வி.அட்சகன்-(160), ரி.மயூரன்-(160), ரி.கஜானன்-(160), எஸ்.அபிநயா-(160), கே. பிரியங்கன்-(160), பி.மதுஷா-(160), ஆர்.ஜனார்த்தனன்-(159), பி.யதுனந்தனசர்மா-(157), ஏ.சாம்யூல்நிரோசன்-(157), வி.சிறிகஜன்-(156), பி.திசாந்தி - (157), எஸ். துலக்ஷிகன்-(156),ஜே. துலக்ஷிகா-(156), பி.பிரியதர்ஷனா-(156), எஸ்.நிலக்ஷன்-(155), எம்.சோபனன்-(155), இ.பவித்திரா-(155), ஏ.கௌதமன் - (155), ஏ.சிந்தூரி - (155), எஸ். ருசித்திரா - 155), வி.கோபிகா-(155),பி.ஜீவலக்ஸி-(154), எஸ்.விதுர்ஷன்-(154), என்.மதுராங்கனி-(154), சி.ஜங்கரன்-(153), வி.வானு[illegible], [illegible]சங்கவி- (153), ஏ.சிவப்[illegible]- (152), ஆர்.சிறிராம்- (152), எஸ்.கஜானன்-(152), பி.சந்தோஷ்-(152), பி.பவதர்ஷினி-(152), ரி.தர்மிகன்-(152), ஆர்.கஜானன்-(152), எஸ்.கௌசிகன்-(152), வி.ஜனுஜா-(152), ரி.பகலவன்-(152), எல்.ராஜகாந் - (151), எல்.சஞ்சீவன்-(151), எம்.தனுஜா-(151), எஸ். சர்மிலன் -(150), கே.ஜெயசாளினி-(150), ஏ.குருலக்ஷன்-(150), கே.ஜனார்த்தனன்-(150), ஜே.கிரிதாகணேசன் - (149), கே.வர்தினி- (149), எஸ்.சஜிதா - (149), எம்.சுவேகா - (149), எஸ்.ஜதுகுலன் - (149), என்.லோகிதா - (148), ஆர்.யதுர்ஷன் - (148), கே.ச[illegible]கீதன்- (147), எஸ்.நிதர்ஷனா - (147), கே.எழினி (147), கே.உமாசங்கர் - (147), எஸ்.விதுஷன் - (146), ஆர்.பி[illegible]விராஜ்- (146), எஸ்.வைதேகி- (146), ஆர்.கம்ஷாகினி- (145), எஸ்.தனேஷன் (144), எஸ்.சங்கீர்தன் - (144), எஸ்.துவாரகி (144), என். தேனுகா - (144), ஜி.அனோஜன் - (144), எம்.நிருஷிகன்- (144), கே.கீர்த்தனா - (144), எம்.கஜகிருஷ்ணா - (143), எஸ்.ராகுலன்- (143), ஏ.ஜானுஷன் (142), என்.கேஷிகா - (142), ஜே.சுவர்ணராஜி - (142), ஏ.சங்கீர்தனன் - (141), ஆர்.சுஜந்தன்- (141), எஸ்.சஜீவன் - (141), எஸ்.செழியன் - (141), ஏ.சங்கவன் - (141), எஸ். பிரதீபன் - (140), எஸ்.[illegible]றமலக்ஷன் - (140), ரி.பிரணீதா - [illegible], வி.பானுஜன் - (140), கே.தனராகவி (140). (9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோழிக் குஞ்சு விநியோகம்

* புறொயிலர் குஞ்சுகள்
* பேட்டுக் குஞ்சுகள்

விநியோகம் (07.10.2009)
மொத்த வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு.
தொடர்புகளுக்கு: அபிசா ரேடர்ஸ்
K.K.S.றோட் (மிட்டாசுக் கடைச்சந்தி அருகில்), யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0217210816, 0772487500.
ஓடர்களுக்கு: வரத விநாயகர் பாம்சிற்றி
தும்பளை, பருத்தித்துறை. 0776701503.
கால்நடைத் தீவன விற்பனை நிலையம்,
பிரதான வீதி, யாழ்ப்பாணம் (மடத்தடி பெற்றோல் செற் அருகில்). 0776095749.
(89500)



## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், இலக்கம் 131/4, பருத்தித்துறை வீதியில் நல்லூர் சிவன் கோயிலுக்கு எதிர்ப்புறமாக 2 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு:
தொ.பே.: 0775821648.
(89508)


## இளம்பெண்ணின் விளக்கமறியல் நீடிப்பு

பற்றைக்குள் இருந்த சிசு ஒன்று பொலிஸாரால் மீட்கப்பட்டது தொடர்பாக நீதிவானின் உத்தரவின் பெயரில் விளக்கமறியலில் வைக்கப்பட்ட இளம்பெண் இம்மாதம் 6ஆம் திகதிவரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் மானிப்பாய் பொலிஸ் பிரிவில் உள்ள பற்றைக்குள் இருந்து சிசு ஒன்றைக் கைப்பற்றிய பொலிஸார், சந்தேகத்தின் மீது இளம்பெண் ஒருவரைக் கைது செய்து மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். நீதிவானின் உத்தரவைத் தொடர்ந்து 22ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இப்பெண், மீண்டும் நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

நீதிவான் இப்பெண்ணை இம்மாதம் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டுள்ளார். (1-115)





## வெளிக்கள முகாமையாளர் / நிதிச்சேவை ஆலோசகர்கள்

### யாழ்ப்பாண கிளை அலுவலகம்

வளமான வாழ்வை அமைத்துக்கொள்ள எதிர்பார்த்திருக்கும் நீங்கள், உங்களது அனுபவம், தலைமைத்துவம் போன்ற திறமைகளால் பயன்பெற விரும்பினால் இதுவே உங்களுக்கான தருணம். சர்வதேச காப்புறுதி நிறுவனம் ஒன்றில் அங்கத்துவம் பெற கிடைக்கும் சிறந்ததோர் வாய்ப்பு.

யாழ்ப்பாணத்தில் புதிதாக நிறுவப்படவுள்ள எமது அலுவலகத்திற்கு பொறுப்புடன் இணைந்து சேவையாற்றுவதற்காக யாழ் மாவட்டத்தில் வசிக்கும் ஆர்வமும், கீழ்க்குறிப்பிடப்பட்ட தகைமைகளும் கொண்டவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வெளிக்கள முகாமையாளர் பதவிக்கு விண்ணப்பிக்க - கணிதம் உட்பட கல்விப் பொதுத்தராதர (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன், சிறந்த ஆளுமை, காப்புறுதித்துறையில் அனுபவம், நிதித்தீர்வுகளைத் தெளிவாகவும் இலகுவாகவும் கையாளும் தன்மை, வாடிக்கையாளர்களுக்கு விளக்கும் திறன், நம்பிக்கையுடன் சிறந்த தொடர்பைப் பேணுதல் போன்றவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

நிதிச்சேவை ஆலோசகர் பதவிக்கு விண்ணப்பிக்க - கணிதம் உட்பட கல்விப் பொதுத்தராதர (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன், சிறந்த ஆளுமை, திட்டமிடல், நிதித்தீர்வுகளைத் தெளிவாகவும், இலகுவாகவும் கையாளும் தன்மை, வாடிக்கையாளர்களுக்கு விளக்கும் திறன், நம்பிக்கையுடன் சிறந்த தொடர்பைப் பேணுதல் போன்றவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

நீங்களும் ஈகிளுடன் இணைந்து பாரிய நன்மைகளைப் பெற்றுத்தரும் தொழில் வாய்ப்பு ஒன்றைப் பெற்றுக்கொள்ள பொருத்தமான ஒரு சந்தர்ப்பம் இதுவாகும்.

எதிர்பார்க்கும் எல்லைகளைத் தாண்டிச்செல்ல உங்களால் முடியுமானால், உங்களது தொழிலிலும் எல்லைகள் இன்றி உயர்ந்து செல்வதற்கு இதோ வாய்ப்பு.

நீங்கள் பெறும் பல்வேறு பயன்களில் உங்களுக்கான ஆயுள்காப்புறுதி, உங்களுக்கும் உங்களது துணைவியருக்கும் மருத்துவச் செலவுகளுக்கான நிதி, ஓய்வூதியத் திட்டங்கள் மற்றும் குறைந்த வட்டியுடன் வீட்டுக்கடன் போன்றவை உள்ளடங்கும். இதற்கு மேலதிகமாக வெளிநாட்டுப் பயணங்களில் இணைந்துகொள்ளும் வாய்ப்பு. தேவை ஏற்படுமாயின் பயிற்சிக் காலத்தில் முற்பணம் பெறவும் வாய்ப்பு உள்ளது. இவை அனைத்தும் கிடைப்பது உங்களது திறமைகளைப் பொறுத்தே.

ஈகிள் குடும்பத்தின் அங்கத்தவராவதற்கு நீங்கள் செய்ய வேண்டியது, உதவி பொதுமுகாமையாளர் - Assistant General Manager - Life Distribution, U.P.T.O Building, No 95, Sir Chithampalam A Gardiner Mw, Colombo 2 என்ற முகவரிக்கு உங்களுடைய விண்ணப்பங்களை 10 நாட்களுக்குள் அனுப்பி வைக்கவும் அல்லது wings@eagle.com.lk க்கு மின்னஞ்சல் செய்யவும்.

ஈகிள் இன்சூரன்ஸ்
AVIVA சிநேகத்தர்

ஈகிள் 24 மணி நேர தொலைபேசி 2310310 | இணையதளம் www.eagle.com.lk

AVIVA

Issued by Eagle Insurance PLC (Co. No. PQ 18)


## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக்.4

வலிகாமம் கிழக்கு சைவசமய அருள்நெறி மன்றத்தின் சகலகலாவல்லி பாமாலை மனப் போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு கோப்பாய் வீரபத்திர சுவாமி கோயில் மண்டபத்தில் நடைபெறும்.

சிவஸ்ரீ சோ.இ. பிரணதார்த்திஹரக் குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதனும், சிறப்பு விருந்தினர்களாக ஹவாய் ஆதீனத்தைச் சேர்ந்த ரிஷி தொண்டுநாத சுவாமிகளும் கலந்து கொள்வர். (203-111)

## இறுதிச் சுற்றுப்போட்[illegible]

யாழ்ப்பாணம், ஒக்.4

'சாந்திகம்' நிறுவனத்தினரால் நடத்தப்படும் கதை கதையாம்... கதை சொல்லல் போட்டியின் இறுதிச் சுற்று இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ். மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

காலை 8.55 மணிக்கு ஆரம்பமாகும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்[illegible] செயலக மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் கலந்துகொள்வார்.

இந்த நிகழ்வை பார்வையிட விரும்பும் ஆர்வலர்கள் கலந்துகொண்டு பயன்பெறுமாறு கேட்கப்படுகின்றனர். (1-9)

## வழிகாட்டல் கருத்தரங்கு

இலங்கை திறந்த பல்கலைக்கழக சட்டமாணி நுழைவுப் பரீட்சை 2009 இற்கான வழிகாட்டல் கருத்தரங்கு கடந்த வருடங்கள் நடைபெற்றதைப் போலஇவ்வருடமும் எதிர்வரும் 10ஆம் திகதி காலை 8 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்க விநோதன் மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

மேலதிக விவரங்களுக்கு 077 724 6723,0777761477 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (201)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1952 ஆம் ஆண்டில் தமது "பிராயச்சித்தம்" சிறுகதை மூலம் ஈழத்துப் புனைகதைத்துறையில் பிரவேசித்த நீலாவணனின் இயற்பெயர் சின்னத்துரை. நடராசா என்ற பெயராலும் அழைக்கப்பட்டவர். மட்டக்களப்பு பெரிய நீலாவணையைச் சேர்ந்தவர். பயிற்றப்பட்ட ஆசிரியராகப் பணியாற்றியவர். பின்னாளில் கவிதைத் துறையில் முன்னணிக் கவிஞராக முத்திரை பதித் தவர். 1975 ஆம் ஆண்டில் அமரராகிவிட்டார்.

இரு தசாப்த கால இடைவெளியில் இவரால் எழுதப்பட்டு, ஈழத்துப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிவந்த சிறுகதைகள், உருவகக் கதைகள், விருத்தாந்தச் சித்திரங்களை உள்ளடக்கி "ஒட்டுறவு" - நீலாவணன் கதைகள் - தொகுதி, 2003ஆம் ஆண்டிலும், கவிதைத் தொகுதி 'ஒத்திகை' - 2001 ஆம் ஆண்டிலும் அவரது குடும்பத்தாரால் வெளியிடப்பட்டன. அவரது 'ஒட்டுறவு' சிறுகதை இவ்வாரம் இங்கு பிரசுரமாகிறது.

# ஒட்டுறவு

மூத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதை வரிசை: 118

'நான் ரெண்டு மாசத்துக்கு முந்தியே சொல்லிப் போட்டன். கணக்கு முடிய வந்து கூட்டித்துப் போயிருவன் எண்டு! பெட்டேய் அரியம்... என்ன செய்யிறாய்? ஐயாட்ட அம்மாட்டச் சொல்லிப் போட்டு... கெதியா வெளிக்கிடு பாப்பம். இருட்ட முந்தி போய்ச்சேர வேணும்!'

என்றோ ஒரு நாள் சவடால் சாமித்தம்பி வந்து இப்படித் தான் செய்யப் போகிறான் என்பது ஏலவே தெரிந்த விஷயந் தான்! அது நடக்கப் போகிறது.

'கௌரி.... இஞ்ச பாருங்க... அச்சாக் கௌரி! கண்ணக் காட்டுங்க... இஞ்சப் பாருங்கவன் அக்கா... ஐயா...ஐயா...ஓடி வாருங்கவன். கௌரிக் குஞ்சு வடிவு காட்டுங்க..... கோவங் காட்டுங்க... கௌரி டாட்டா காட்டுங்க.... ஆ....ஆ..... காட்டுங்க. வணக்கம் சொல்லுங்க.... சாமியக் குடுபிடுங்க.... அரோ கரா... அப்படித்தான்... நல்ல பிள்ள....அச்சாப் பிள்ள... முத்தல் பிள்ள..'

தகப்பனுடைய அதட்டலைக் கேட்டு குழந்தையை விறாந்தையில் விட்டு விட்டு அறைக்குள்ளே நுழைந்து ஊருக்குப் போக ஆயத்தமாகும் அரியத்தைப் பார்க்க வாய்விட்டு அழ வேண்டும் போல இருக்கிறது.

அரியத்தைப் பெற்ற அப்பன் சவடால் சாமித்தம்பியை எனக்குப் பிடிக்காது. வருமானவரிப் பத்திரம் போல நேரம் காலமில்லாமல் அடிக்கடி வந்து நிற்கும் அவன் வரும் போதெல்லாம் ஏதாவதொரு சோக வரலாற்றோடு தான் வருவான். ஒரு நாளாவது ஒரு நல்ல சேதியோடு அவன் வந்ததில்லை!

'ஐயா கூரை எல்லாம் ஒழுகிச் சுவரும் கரையுது. எங்க விழுந்து தொலைஞ்சிருமோ எண்டு விடிய விடிய நித்திரையும் இல்ல. பெரிய அவதி.... ஐயா குந்தி இருகிற குடிலும் விழுந்து போய்ச்செண்டால் குமரும் குட்டிகளுமாக எங்க போவன்..... அது தான் வந்தனான். ஒரு நாலுமாதக் காசு வேணும். அதுவும் காணாது! கிடுகு கட்ட வேணும். மாரி மழ காலம்..... எனக்கும் பிளைப்புக் கிடைக்குதில்லை.... பாத்துக் கழிச்சுக் கலாம்..... உதவி செய்யுங்க ஐயா....'

'ஒரேயொரு ஆம்பிளப்புள்ள. ஆறு பெட்டயளுக்குப் பிறகு ஆண்டவன் தந்தது. தோஷம் பிடிச்சுத் தளரா வியாதியாக் கிடந்தது. அதிர சீவன் ராவு முடிஞ்சு போச்சையா..... சவம் அடக்கம் பண்ண வேணும்..... என்னவெண்டாலும் பார்த்துச் செய்யுங்க.....'

'மூணாம் பெட்டையும் ராவு சமைஞ்சு போனாள். அவளுக்குத் தண்ணி வாக்க வேணும். சதக் காசும் கையில கிடையாது. ஒரு இருபத்தைஞ்சு வேணுமய்யா.... பிறகு பார்த்துக் கலாம். வீட்ட வெத்தில பாக்குக்கும் வழியில்ல...'

இப்படி எத்தனை எத்தனை! சாமித்தம்பிக்கு மாதத்தில் இரண்டு மூன்று விபத்துக்கள் குறையாது! தேவைகள் திருப்திகள் விபத்துக்கள் யாவும் உழைப்பவர்களுக்கு மட்டுந்தானா? அவை சவடால் சாமித்தம்பிக்கும் இருக்கத்தான் செய்தன.

'ஐயா கதிர்காமம் போய் வரப் போறன்.... காசு வேணும்! நான் சாகக் கிடந்த நேரத்தில் வச்ச நேர்த்திக் கடன்.... கட்டாயம் போக வேணும்!'

சாமித்தம்பியின் கழுத்தை நெரித்துக் கொல்ல வேண்டும் போல் ஆத்திரம் வருகிறது. பொறுத்துக் கொண்டு 'நீ கதிர்காமம் போகத்தான் வேணும். ஆனால் ஒரு பொட்டைக்குட்டி பாடுபட்ட பணத்தில் அல்ல. உன்னுடைய சொந்த உழைப்பில் போக வேணும். உதவாக்கரை உலக்கை! நீயும் ஒரு தகப்பனா?'

'சோறு வேணும். வேட்டி வேணும். கூரைக்கு ஓலை வேணும். சாச் செலவும் சமைஞ்ச செலவும் வேணும்! சிவ மூலியும் வேணும்! கடைசியாக நீ கதிர்காம யாத்திரையும் போக வேணும்! இதற்கெல்லாம் நீ உழைக்க வேணும்.

'தூ.....! உனக்கு வெட்கமாக இல்லை? ஒரு பெட்டைக் குட்டியின் உழைப்பிலே... உன்னுடைய தேவைகளும் திருப்திகளும் ... உதவாக்கரை..... கேடு கெட்டவன்!'

'ஒரு பெண குழந்தை எத்தனைக் கென்று உனக்கு உழைத்துப் போடுவாள். இன்னும் எத்தனை காலத்திற்கு நீ அவளைக் கொண்டு உழைக்கலாம். நாளைக்கோ இன்றைக்கோ அவளும் பெரியவளாகி..... வீட்டோடு வந்து குந்தி விட்டால்.... "நாலாம் பெட்டையும் சமைஞ்சு போச்சு" என்று யாரிடம் போய் ஒப்பாரி வைப்பாய்? நீ கொஞ்சம் கூட இரக்கம் இல்லாதவன்! பிள்ளைகளை பாடுபட்டுழைத்துக் காப்பாற்றத்தான் முடியவில்லை! அந்தப் பெட்டைக்குட்டியின் உழைப்பிலே ... கஞ்சாவும் புகைத்துக் கொண்டு கதிர்காம யாத்திரையும் போக வேண்டும். சீ!' வாயைத் திறந்து இப்படியெல்லாம் பேசிவிட்டால் அவ்வளவு தான் சங்கதி. சாமித்தம்பி துண்டை உதறிப் போட்டுக் கொண்டு 'அரியம் புறப்படு' என்று மகளை அழைத்துக் கொண்டு புறப்பட்டு விட்டால்...? நான் ஒரு மாத முன் பணம் கொடுக்காவிட்டால் என்ன? இன்னொருவனைத் தேடிப் போய் ஆறு மாத முன்பணம் வாங்கவும் அவனால் முடியாதா என்ன? அரியம் போய்விட்டால்.... பழையபடி காவடி எடுக்க யாரால் முடியும்!

மனைவியும் நானும் அரசாங்க ஊழியம். அந்தப் பெரும் பேற்றினை அனுபவித்து பென்ஷன் என்ற ஜீவன் முத்தியடையும் வரை அரியம் போன்றவர்களை இழப்பது சாமான்யமான இழப்பா?

கடைசிக் குழந்தை உரித்த கோழிக் குஞ்சுபோல ஏழு மாதத்திலே உலகைக் காணத் துடித்துப் பிறந்து விட்ட முற்றல்! ஏழு மாதத்தையான் குஞ்சு கௌரிக்குத் துணையாக வந்தவள் தான் இந்த அரியம் என்ற அரியமலர்! ஒன்றைரை வருடத்தில்.... கௌரி குறை மாதக் குழந்தை போலவா இருக்கிறாள்!

'ஆயோம்....!ஆயோம்.....?.....!'

தாயின் மடியை விட்டுத் தன்னை விடுவித்துத்துக் கொண்டு அரியத்திடம் ஓடிப் போகத் திமிறுகிறாள் கௌரி.

அரியம் புறப்படுகிறாள். தன்னுடைய உடைகளையெடுத்து கடதாசியில் சுற்றி வைத்து விட்டாள். தலையைவாரி பவுடரும் பூசியாயிற்று. கடைசியாக வாங்கிக் கொடுத்திருந்த அந்தப் புதிய சட்டையைக் கையில் வைத்துக் கொண்டு என்ன யோசிக்கிறாள்?

'போட்டுக் கொள் உன்னுடைய சட்டை தானே!'

'ஆயோம்.... ஊக்கு ஆயோம்....!'

'அரியம் ஊருக்குப் போகப்போறாள்... அவங்கட அப்பா அவளைக் கூட்டிப் போகப் போறார். அரியம் இனி இல்ல. கௌரி அச்சாப் பிள்ள..... அழக் கூடாது.' குழந்தையைச் சமாதானம் செய்யும் மனைவியின் விழிகள் கௌரியை முகம் கழுவுவானேன்....!

'அவளைக் கூட்டிக் கொண்டு போய் பட்டினி போட்டுக் கொல்லப் போறாய்... என்ன?'

'ஏனம்மா கொல்ல......? அதுகள் வயலுக்க போகும்.... கதிர் கப்பியைப் பொறுக்கும். கொண்டு வாறது தாராளமாகக் காணும். என்ட மனுஷியும் குமர்களும் வயல் வெளிய கிடந்து வாற நேரம்.... என்னவும் காச்சி வைக்க வேணும். எனக்கு அதுக்கும் ஏலாது....! இவள் பெட்ட வீட்டில நிண்டாள் எண்டால் அதுகளுக்கும் ஆறுதல்.. எனக்கும் நல்லம்'.

'மூத்த பெட்டையிர புருஷனும் பேசுறான். அவன் கார் மெக்கானிக்கர். நல்ல உழைப்பாளி. வயது வந்த பிள்ளைய வீட்டு வேலைக்கும் விடுவானா ஒரு அப்பன்? எண்டு கேக்கான். அவன்ட பெண்டாட்டி அது தான் என்ட மூத்த மகள்... அதுவும் ஒரே நோய்க்குடுகு! அவள் பெட்டைக்கும் உதவிக்கு ஆள் வேணும். நான் என்னம்மா செய்ய? ஒண்ணர வரிஷமாகுது.... காணாதா?'

'எனக்கு லீவு விட்டபிறகு நீ போனால் என்ன? இப்பவே போகப் போறியாடி அரியம்? இன்னும் ஐந்து நாள் பொறுத்துப் போக முடியாதா உனக்கு?'

வீட்டுக்காரியின்.... அதுதான் அரசாங்க ஊழியம் பார்க்கும் என் சகதர்மினியின் கேள்விகள் எதுவும் அரியத்திற்கு ஒரு பொருட்டாக இருக்கவில்லை. அந்தக் கேள்விகள் தனக்குக் கேட்டதாகவே காட்டிக் கொள்ளவில்லை. எங்கே தனது விடுதலை தாமதமாகி விடுமோ!

பயம்....பரபரப்பு....!

ஆறு மாசங்களுக்குப் பிறகு....

நாளைக்கு.... தன் சிநேகிதிகளோடு புட்டி ஆற்றில் அரியம் நீந்தி நீந்திக் குளித்து விளையாடப் போகிறாள்!

சுழியோடி வந்து தண்ணீரில் நிமிர்ந்து நிற்கும் மலராத தாமரை மொட்டுகளை நிமிண்டி கசக்கி அழகு பார்க்கும் காவாலிப் பையன்களோடு. ஆபாசமாகத் திட்டிச் சண்டை பிடித்துக் கொண்டே, அரியமும் அவள் சிநேகிதிகளும் சந்தோஷமாகக் குளிப்பார்கள்! பிள்ளையார் கோவில் பின்புறம் வம்மி மரத் திரையில் மறைந்து, குளிக்கும் போது அணிந்திருந்த ஈரச் சட்டையைக் கழற்றிப் பிழந்து விட்டு மீண்டும் ஈரத்தோடு அதனையே அணிந்து கொண்டு தலையை விரித்து விட்டபடியே தண்ணீர்க் குடத்தோடு வீடு திரும்புவாள் அவள்.

'துறையடியிலே தான் எவ்வளவு புதினங்கள்!'

'பகலெல்லாம் சனங்கள் போறதும் வாறதும்.... பார்த்துக் கொண்டிருந்தாலே பசிக்காது. கூத்தும் கும்மாளமும்..... வெறியும்!'

'மாரியம்மன் சடங்கும் வருகுது. கோவிலடியில.... எவ்வளவு பிள்ளையள். நிலவில வயல் வெளியெல்லாம் விடிய விடிய விளையாட்டு! சோறில்லாட்டி என்ன? ஒரு நாள் இல்லாட்டி இன்னொரு நாளைக்குக் கிடையாதா என்ன?

[14 ஆம் பக்கம் பார்க்க....]

# அல்லது செய்தால் ஓம்புமின்

இலக்கியக் காட்சி 9

முதுமை வாழ்க்கையில் வரும் போது எல்லோரும் பட்டறிவு பெற்றுவிடுவர். ஆனால் அவ்வாறு அறிவு பெறாதோரும் பலர் உள எனப் பண்டைய இலக்கியங்கள் கூறுகின்றன. புறநானூற்றுப் பாடல் ஒன்று அதனை, குறிப்பாக காட்சிப்படுத்தியுள்ளது. முதியவர்கள் என்றாலே மதிப்புக்குரியவரெனப் பல பழந்தமிழ்ப் பாடல்கள் குறிப்பிட்டுள்ளன. குறிப்பாக அகப்பாடல்களில் முதியவர்களே வழிபாடு, திருமணச்சடங்கு போன்ற விடயங்களில் அவற்றை முன்னின்று செயற்படுத்துவோராக உள்ளனர். ஆனால் 'நரிவெரு உத்தலையார்' என்னும் புலவர் ஒரு வித்தியாசமான முதுமையைக் காட்டுகின்றார்.

"பல் சான்றீரே பல்சான்றீரே
கயல் முள் அன்ன நரைமுதிர் கவுள்
பயனில் மூப்பிற் பல்சான்றீரே
கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திறலொருவன்
பிணிக்குங்காலை இரங்குவிர் மாதோ
நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்
எல்லாரும் உவப்பது அன்றியும்
நல்லாற்றுப் படூஉ நெறியுமாரதுவே" (புறநானூறு: 195)

பல நல்ல குணங்களையுடைய சான்றோர் எனப் பலராலும் மதிக்கப்படுகின்ற சான்றோரை அழைத்து ஒரு முக்கியமான செய்தியை சொல்வதாகப் பாடல் அமைந்துள்ளது. முதியவர்களின் தோற்றத்தை முதலில் புலவர் காட்சிப்படுத்திக் காட்டுகின்றார். கயல்மீனின் முள்ளைப் போன்ற நரைமுதிர்ந்த திரைந்தகதுப்பினை உடைய முதியவர்கள். ஆனால் அவர் களுடைய முதுமை பயனில்லாத முதுமையாகவுள்ளது. காரணம் என்னவென்றால் இம் முதியவர்கள் நல்ல காரியங்களைச் செய்வதில்லை. எனவே அவர்களுக்குப் பாடல் மூலம் ஒரு வேண்டுகோள் விடுக்கின்றார். 'அல்லது செய்தல் ஓம்புமின்' என்பதே அவர் முதியவர்களுக்குச் சொல்லும் செய்தி. நீங்கள் நல்வினை செய்யாவிட்டாலும் பரவாயில்லை. தீவினையைச் செய்யாமல் இருங்கள். அவ்வாறு தீவினை செய்வதை நீங்கள் நிறுத்தாவிட்டால் மழுவாகிய கூரிய படைக்கலத்தினையும் கடிய வலியினையுமுடைய ஒருவன் உம்மை பாசத்தால் கட்டிச் செல்லும் போது நிச்சயமாக இரக்கப்படுவீர்.

முதியவர்கள் பிறருக்குச் செய்ய வேண்டி நல்ல காரியங்களைச் செய்யாமலிருப்பதைச் சுட்டிக் காட்டும் புலவர் அவர்களுடைய தவறான செயற்பாட்டையும் சுட்டிக்காட்டிக் கண்டிகின்றார். எல்லோரும் மனம் மகிழும் வண்ணம் முதியோர் செயற்பட வேண்டும். தீமையைச் செய்யாமல் இருப்பதால் எல்லோரையும் நல்லவழியிலே நெறிப்படுத்த முடியும். புலவரது இப்பாடல் ஒரு சமூகச் செயற்பாட்டையும் நன்கு விளக்கி நிற்கின்றது.

பலரை ஒன்று கூட்டிப் பல அறிவுரைகளைக் கூறுகின்ற ஒரு மரபு பண்டைத்தமிழர் வாழ்வியலில் இடம் பெற்றிருந்ததை இப்பாடல் உணர்த்துகின்றது. ஒரு தொடர் பாடலில் மூன்று முறை பயன் படுத்தப்பட்டுள்ளது. 'பல்சான்றீர்' என்ற தொடர் சான்றாண்மை உடையவரைக் குறிக்கும் சொல்லாக இருப்பினும் இப்பாடலில் 'பயனில்லாத சான்றோர்' என ஒரு குறிப்பிட்ட முதியோரைக் குறிப்பதாக உள்ளது. நல்லது, அல்லது என்னும் இரு சொற்களும் முறையே நன்மை, தீமை என்ற பொருள் தரும் சொற்களாகும்.

நல்லவர்கள் எனப் பலராலும் போற்றப்படுபவர்களிடம் காணப்படும் குறையைச் சொல்வதாயின் விநயமாகச் சொல்லவேண்டும். அதனால் நல்லது என்று கூறிய புலவர் 'தீமையானது' எனக்குறிப்படாமல் அல்லது எனக் கூறியுள்ளார். பெரியவர்களிடம் பேசும் முறைமையைப் புலவர் காட்டியிருப்பது ஒரு சமூக வழிகாட்டலாக உள்ளது.

வாழ்க்கையில் நல்ல செயற்பாடுகளைச் செய்வதற்கு முதுமை வரை காத்திருக்க வேண்டியதில்லை. ஏனெனில் காலத்தை கடத்திவிட்டுப் பின்னர் இறப்பு வருகின்ற போது வருத்தமுற நேரிடும். இறப்பு என்பது நாம் பிறக்கும் போதே உறுதிப்படுத்தப்பட்ட விடயம் என்பதை பலர் மறந்துவிடுகின்றனர். சிறப்பாக முதியவர்களை அதை உணர்ந்து இளமைப் பருவத்திலேயே நல்ல பயனுள்ள காரியங்களைச் செய்வது நல்லது என வழிப்படுத்துகின்றார்.

இன்று முதியவர்களிடம் முதுமைப் பண்புகளைச் சில வேளைகளில் காண முடிவதில்லை. வயதுக்கு ஏற்காத தீச் செயல்களை முதுமை செய்யக் கூடாது என்பதே பாடல் கூறும் நெறிப்படுத்தலாகும். பண்டைய இலக் கண நூல்களில் 'பொருள் மொழிக் காஞ்சி' என ஒரு பாடுபொருள் வகைமை கூறப்பட்டுள்ளது. உயிருக்கு இம்மை மறுமைகளில் உறுதி தருகின்ற பொருளை ஒருவனுக்கு கூறும் மரபு பொருள் மொழிக் காஞ்சி எனப்படுகிறது. மனிதம் பற்றிய எண்ணக்கருவில் முதுமையும் இறப்பும் நெருங்கியிருப்பவை. இவ்வுலக வாழ்வு நிறைவு பெறும் நிலையில் முதியவர்க்கு அறிவுரை தேவைதானா என ஒரு வினா எழும்பக்கூடும். எனவே இப்பாடலில் புலவர் அத்தகைய வினாவை எதிர் நோக்கிப் பாடலை இயற்றியுள்ளார்.

'பொது வியல்' என்ற புறப்பொருள் இலக்கணவரையறையில் இத்தகைய பாடல்கள் அமைக்கப்பட்டன. சமூக நலமேம்பாடு பற்றிய கருத்துப் பரிமாற்றமாக இப்பாடல் அமைந்துள்ளது. வீரம், வெற்றி, கொடை, அரண், ஆட்சிச்சிறப்பு எனப் புறப்பாடல்கள் மன்னனை மையப்படுத்தியே பாடப்பட்டுள்ளன. அவற்றுள் 'மனிதம்' பற்றிய அறிவுரைகளைத் தருநோக்கோடு பாடப்பட்ட பாடல்கள் கட்டாயமாக இளந்தலைமுறையினருக்கு அறிமுகம் செய்யப்பட வேண்டும். அந்நிலையில் இப் புறநானூற்றுப் பாடல் இளமைக்கு முதுமை பற்றிக் கூறும் சிறப்புத் தகைமை பெற்றுள்ளது. புலவரின் நோக்கம் எல்லோரும் இன்பமாய் வாழ்வு நடத்த வேண்டும் என்பதே. அதனையே பாடல், கருத்து நிலையில் விளக்குகிறது. ******



## எடுத்தல் என்பது வாசிப்பு

நூலில் பதிந்திருப்பது கல்வி!
மனதில் பதிந்து செயலில்
வந்தால் அவை கலை!
பகுத்துத் தொகுத்து மீளப்
பதித்தால் அறிவின் முதலீடு!
எழுத்து என்பது சேமிப்பு
எடுத்தல் என்பது வாசிப்பு

பத்திரிகையென்பது நடை
முறைக்கணக்கு!
கல்வி என்பது நிரந்தரக்
கணக்கு!
சஞ்சிகை என்பது சேமிப்புக்
கணக்கு!

கற்றல் என்பது அறிவின் விருத்தி
அளவிடும் அளவுகோலோ சித்தி
ஆக்கத்திற்கு வந்தால் புத்தி!

இ. ஜெயபாலன்,
சங்கானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பாடா! எலிகளோ பலவகை அவை உண்டாக்கும் சேதங்களோ ஏராளம்!

எலிகளால், அவை கடிப்பதாலும், அவற்றினது சிறுநீர் மற்றும் எச்சங்கள் உணவுப் பொருள்களுடன் கலப்பதாலும் மனிதனுக்கு ஏற்படுகின்ற நோய்களைப் பற்றி முன்னைய பகுதிகளில் பார்த்தோம்.



உண்ணிகளினால் மனிதனில் நோய் உண்டாவதைத் தவிர்க்கவும் முடியாதுள்ளது. வீட்டிலுள்ள வளர்ப்பு மிருகமான பூனையைச் சுத்தமானதாகவும் சுகாதாரமானதுமாக வளர்த்தால் அவற்றினால் ஏற்படுத்தப்படும் நோய்களைத் தவிர்க்கமுடியும். மேலும் எலிப் பொறிகளைப் பயன்படுத்தி எலிகளைக் கவர்ந்திழுத்து பிடித்தும் அழிக்கலாம். எலிப்பொறிகள் பல வ்கைகளில் உள்ளன. இவற்றைப் பயன்படுத்தி எலிகளை பிடித்தழிப்பது இலகுவானதொன்று.

எலிகள் குடியிருப்பது வேளைகளில் வீட்டு சீலிங் என்பன இவ் எலிகளது வாழ்விடங்களாகும். வீடுகளுக்கும் உணவு சேமிப்பு களஞ்சியங்களிலும் இவற்றினால் ஏற்படுத்தப்படும் சேதம் மிகவும பெரிது. கவனியாது விட்டால் இவற்றினால் ஏற்படுத்தப்படும் சேதம் பாரிய சேதமாகிவிடும். இவற்றினது உருவத்தைக் கண்டு பூனைகளே பயப்படும். கட்டுப்படுத்துவது இலகுவான காரியமல்ல என்றாலும் வாழ்விடங்களைத் தேடியழித்தால் இயன்றளவு கட்டுப்படுத்தலாம். பிளேக் நோயைக் காவுவதில் பெரும் பங்கு இவற்றுக்கு உண்டு.

**மர எலி (Roof Rat or Palm Rat)**

மர எலிகள் வீட்டெலிகளின் உருவ அளவில் இருந்தாலும் இவை

பட வாய்ப்புகள் அதிகம். 6 தொடக்கம் 8 குட்டிகளை ஈன்றெடுக்கும். வரப்புகள் செப்பனிடப்பட்டு வளைகள் இனங்காணப்பட்டு அகற்றப்பட்டாதவரை இவற்றைக் கட்டுப்படுத்தவே முடியாது.

**எலிகளின் வாழ்க்கையிலுள்ள குறிப்பிடத்தக்க அம்சங்கள்**

மிருகங்களனைத்திற்குமுள்ள இயல்புபோல எலிகளிலும் பிரச்சினைக்குரிய இயல்பாக இருப்பது இவற்றினது பல்லும் கால் நகங்களும் ஆகும். எங்களது கால், கைகளிலுள்ள விரல்களில் நகங்கள் வளருவது போல எலிகளின் பற்களும் கால்களிலுள்ள நகங்களும் வளர்ந்து கொண்டேயிருக்கும். இது அவற்றிற்கு விரும்பத்தகாத நிகழ்வாக இருப்பதனால் கால்களால் விறாண்டியும் பற்களால் கடித்தும் வளர்ச்சியைக் கட்டுப்படுத்த முனைகின்றன. இதிலிருந்து ஒன்றைக் கவனித்தீர்களா? எலிகள் ஏதாவதொன்றைக் கடித்துத் தமது பற்கள் வளருவதைத் தவிர்க்கவேண்டும். இதனால் தமக்கு அகப்பட்ட பொருளைச் சும்மாவேனும் கடித்துத் தூளாக்க வேண்டும். இல்லையெனில் வளர்ந்து கொண்டு போகும் அவற்றின் பற்களே அவற்றினது சுதந்திர வாழ்வுக்குத் தடையாகி

## தமது பற்களையும் நகங்களையும் பாதுகாக்க எமது உடைமைகளைப் பதம் பார்ப்பவை

நோய்களைக் கட்டுப்படுத்துவதில் ''தற்காப்பு'' என்றுமே உதவும் என்பதனையும் கடந்த வாரங்களில் அலசினோம். இதன் தொடர்ச்சியாக எலிகளின் வகைகளையும் அவற்றினது வாழ்க்கையின் இரகசியம் என்பவை பற்றியும் ஆராய்தல் பொருத்தமாக அமையும். வெறுமனே இக்கட்டுரையை வாசிப்பதுடன் நிறுத்தி விடாது இதில் சொல்லப்பட்ட விடயங்களை உங்கள் நண்பர்கள், உறவினர்கள், ஊரவர்களுக்கும் எடுத்துக் கூறி எலித் தொல்லையை இல்லா தொழிக்க நாமெல்லோரும் முயற்சிப்போமா? பயிர்களுக்கு செய்யும் சேதம் ஒரு புறமிருக்க மனிதனில் காவியாகத் தொழிற்பட்டு அது பரப்பும் நோய்களிலிருந்து எம் மக்களைக் காப்பாற்றும் சமூகப் பொறுப்பினையும் ஒன்று சேர்ந்து செய்வோமா?

**வீட்டு எலி- வீட்டுக்கு வந்த அழையாத விருந்தாளி**

**(House Rat) Rattus rattus**

வீட்டு எலி அளவில் சிறிதாயினும் இதனால் ஏற்படுத்தப்படும் சேதத்தை எவருமே கண்டு கொள்வதில்லை. ஏறக்குறைய 6-14 குட்டிகளை ஈனும். மர அலுமாரிகள், வீட்டு கூரையிலுள்ள சீலிங், உணவு சேமித்து வைத்திருக்கும் அறை, பழைய

தெரிந்தும் அவற்றைக் கட்டுப்படுத்தாதுவிடின், அவை வளர்ந்து இனம் பெருக்கி, பின் பாரியளவு சேதத்தை உண்டுபண்ணிவிடும். வீடுகளில் எலிகள் வளையமைத்து பெருகும் இடங்களை அடிக்கடி சுத்தஞ் செய்தாலே அவற்றின் பெருக்கத்தை ஓரளவு குறைத்துவிடலாம். போதாக்குறைக்கு அவற்றை இனம் பெருக்க உணவு கொடுக்கும் மனிதநேயமுள்ளவாகளும் எம்மத்தியிலுள்ளார்கள். இது பொதுவாக கவனியாது விடுவதும் அலட்சியமில்லாது விடுவதும் போன்ற காரணங்களாலாகும். எலிகளைக் கட்டுப்படுத்துவது ஒரு சமூகப் பொறுப்புள்ள கடமை என ஒவ்வொருவரும் புரிந்து கொள்ளவேண்டும். வீடுகளில் விலையுயர்ந்த பட்டுப் புடைவைகள், துணிமணிகள் வைத்திருக்கும் சூட்கேசு போன்றன எலிகள் தங்கிக் குதூகலித்திருக்கும் சிறந்த வாழ்விடங்கள். இவற்றை அடிக்கடி திறந்து சுத்தஞ் செய்யாது கவனியாது விட்டால் எலிகள் பட்டு மஞ்சத்தில் துயில்வதற்கு இடமளித்து விடுவோம். எலிகளுடைய எச்சத்தை வைத்து அவற்றினது நடமாட்டத்தை அவதானிக்கலாம். தினமும் வீட்டையோ, உணவுக் களஞ்சியத்தை

மரங்களில் குறிப்பாக பழங்கள், காய்களை சேதப்படுத்துவனவாகும். இவற்றைக் கூரை எலிகள் (Roof Rat) எனவும் அழைப்பர். அநேகமாக உணவுப்பண்டங்களை கூரையில் வைத்து உண்ணும் பழக்கமுடைய இவ் எலிகளின் சிறுநீரும் எச்சங்களும் உணவுகளில் கலக்கும் சாத்தியக்கூறு அதிகமாகும். குறிப்பாக சாக்குகளில் உணவுப்பொருள்கள் திறந்து வைத்து விற்கப்படும் கடைகளில் இவ்வாறு எலியின் சிறுநீரும் எச்சங்களும் இலகுவில் கலக்கப்பட வாய்புக்கள் உண்டு. திறந்து வைத்தால் அதனுள்ளே விழும் எச்சங்கள் காய்ந்து உணவுப் பொருளுடன் கலந்து கொள்ளும்



வாய்ப்பு அதிகமாகும்.

**சுண்டெலி**

**(MOUSE) - MUS MUSCULUS**

சுண்டெலி வீட்டு எலியின் அளவில் அரைவாசியிலும் குறைவாகவே இருக்கும். இவற்றினால் இழைக்கப்படும் சேதம் குறைவாக இருப்பினும் உணவை மாசுறவைத்துவிடும் இயல்பு இதற்குமுண்டு.

விடும். இவ்வாறாகக் கடித்துப் பழக எங்களது பெட்டி, சூட்கேசுகள், தானியங்களைச் சேமித்து வைத்திருக்கும் பாத்திரங்கள், பயிர்கள் என இருப்பதை எடுத்துக் கொள்ளுகின்றன. மனிதர்களுக்குக் கடிப்பதென்பது தற்செயலான நிகழ்வாகவே அமைகின்றன. தற்பாதுகாப்புக்காக எந்தவொரு விலங்கும் செய்வது போலவே எலிகளும் மனிதர்களைக் கடிக்கின்றன. ஆனால் எலி கடித்ததை அலட்சியப்படுத்தக்கூடாது. தொற்று நோயைக் காவுகின்ற எலிகளானால் விரைந்து மருத்துவரை நாடுவது சிறந்தது. காலந்தாழ்த்தினால் உயிருக்கே ஆபத்தாகி விடும். மனித நடமாட்டம் அதிகமாக உள்ள இடங்களில் எலிகள் வளைகளை அமைப்பதில்லை. மாறாக கவனியாது விடப்பட்ட இடங்கள் அது எவையாகினும் மகிழ்ச்சியாகக் குடி புகுந்துவிடும். இவற்றினால் ஏற்படும் சேதம் ஒருபக்கம், சந்ததி பெருக்கம் இன்னொருபக்கம். இவை அனைத்தையும்விட காவி தொற்று ஏற்படுத்தும் நோய்கள் எல்லாவற்றையும் விட ஆபத்தானவை. இதிலிருந்து எலிகளை எவ்வாறாகிலும் கட்டுப்படுத்தியே ஆக வேண்டும் அல்லவா? அடுத்து வரும் பகுதிகளில் அவை குறித்து ஆராய்வோம். (வளரும்)

## விலங்கிலிருந்து மனிதனுக்கு.... சேதங்களும், தொற்று நோய்களும் 9

காட்போட் பெட்டிகள், பழைய துணிகளைச் சேமித்து வைத்திருக்கும் பெட்டிகள் என்பவற்றில் வீட்டு எலிகள் வளை அமைத்து இனம் பெருக்கி சேதத்தை உண்டுபண்ணுகின்றன. இவ்விடங்களைக் கவனியாது விடுவதனால் எலிகள் விரைந்து இனம் பெருக்க நாமே இடமளித்து விடுகிறோம். எலிகளைக் கட்டுப்படுத்த வீடுகளில் பூனைகளை வளர்ப்பது பொதுவாக இருப்பினும் பூனைகளுக்கும் கதை சொல்லி தப்பிப்பிழைக்கும் எலிகளையும் இப்போது அவதானிக்கலாம். இது தவிர பூனைகளின் உடலிலிருந்து உதிரும் மயிர்கள், அதனுடலிலிருக்கும் பேன் மற்றும்


மற்றும் கடைகளைக் கூட்டும் போது இதனை அவதானிக்கலாம்.

**பெருச்சாளி எலிகள்- நகர எலிகள் (Bandicoot)**

வீட்டெலியைக் காட்டிலும் ஏறத்தாழ உருவத்தில் இரண்டு மடங்கும் அதற்கு மேலும் உள்ள எலிகளைப் பெருச்சாளிகள் அல்லது பெருச்சாளி எலிகள் என்பார்கள். இவற்றினது உருவத்திற்கேற்ப உண்ணும் அளவும் அதிகம். அநேகமாக கைவிடப்பட்ட வடிகால்கள் வீடுகளுக்கு முன்பாகவோ அருகிலோ இருக்கும் மூடப்பட்ட வாய்க்கால்களுக்குள்ளும், நகரப் பகுதியிலுள்ள [illegible] வீடுகளிலுள்ள கராஜ்ஜுக்கள், சில

**வயல் எலிகள் (Field Rat)**

இவை உருவத்தில் வீட்டு எலிகளைப் போன்றே இருக்கும். பொதுவாக இவை வரப்பிலே அழகானதும் சிறியதுமான வளையமைத்து இனம் பெருக்கி வாழ்வனவாகும். இவை வயலிலே விளைவிக்கப்படும் பயிர்களை அழித்துத் துவம்சம் செய்து அகமகிழ்ந்து உண்டு வாழ்வனவாயினும் ஆங்காங்கே இவை உருவாக்கும் வளைகளினுள் இப் பயிர்களின் தானியங்களைச் [illegible] சேர்த்து வைக்கவும் [illegible]இல்லை. இந்த எலிகளினால் பயிர்களில் பாரியளவில் சேதமேற்



கலாநிதி கு. மிகுந்தன்
தலைவர், விவசாய உயிரியல்துறை,
விவசாயபீடம், யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாற்றம்

அண்மைக்காலமாக தமிழ் சினிமாவில் இயக்குனர்கள் நடிப்புக்கு வருவது சர்வ சாதாரணமாகிவிட்டது. இந்நிலையில் கொஞ்சம் வித்தியாசமாக நடிகர் ஒருவர் வெகுவிரைவில் இயக்குனராக உருவெடுக்கப் போகின்றார். அவர் வேறு யாருமல்ல; நடிகர் சூர்யாவே தான். இப்போதெல்லாம் வித்தியாசமான கதைகள் கொண்ட படங்களிலேயே சூர்யா நடித்துவருகின்றார். இவ்வாறு மாறுபட்ட படங்களில் வித்தியாசமான இயக்குனர்களின் நெறியாள்கையில் நடிப்பது கூட படம் இயக்கும் நுட்பங்களை அறிந்து கொள்வதற்குத்தானாம். அடுத்த பத்து ஆண்டுகளுக்குள் தரமான நான்கு படங்களை இயக்கி இந்தியாவின் முன்னணி இயக்குனர்களில் ஒருவராக மாறுவது தான் சூர்யாவின் திட்டம் எனக் கூறப்படுகின்றது.

★★★



# கோரிக்கை

உலக நாயகன் என்று தமிழ் சினிமாவில் கூறப்படுபவர் நடிகர் கமல்ஹாசன். களத்தூர்க் கண்ணம்மா திரைப்படத்தில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகி ஏறக்குறைய 50 வருடங்களைக் கடந்து தமிழ் சினிமாவில் முன்னணி நட்சத்திரமாக நிமிர்ந்து நிற்கின்றார் கமல். இவருடைய 50 வருட கலைப்பணியைப் பாராட்டி பல்வேறு நிகழ்வுகள் உலகெங்கும் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில் தமிழகத்தின் சென்னையில் உள்ள ஏதாவதொரு முக்கியமான வீதிக்கு கமல்ஹாசனின் பெயரைச் சூட்ட வேண்டும் என்று நடிகர் சங்கத் தலைவர் சரத்குமார் தமிழக முதல்வரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். இந்த விடயம் பற்றி சாதகமாகப் பரிசீலிப்பதாக முதல்வரும் உறுதியளித்துள்ளார்.

## கலைச்சுடர்

## திரைவிமர்சனம்

# மதுரை டு தேனிவழி ஆண்டிப்பட்டி



அரவிந் வினோத், ஸ்ரித்திகா, சிங்கமுத்து ஆகியோரின் நடிப்பில் ரதிபாலாவின் இயக்கத்தில் வெளிவந்துள்ள படம் 'மதுரை டு தேனி வழி ஆண்டிப்பட்டி'.

ஒரு பேருந்துப் பிரயாணத்தில் ஏற்படும் பால் ஈர்ப்பையே காதலாக்கி, கசிந்து உருகவிட்டு படம் பார்ப்பவர்களையும் உருகவிட்டிருக்கும் கதையை உள்ளடக்கிய படம்தான் மதுரை டு தேனி வழி ஆண்டிப்பட்டி.

ஊரில் காதலை எதிர்க்கும் பெற்றோர்களை எதிர்த்து காதலர்களைச் சேர்த்து வைக்கும் நாயகனுக்கு ஆசிரியர் வேலை கிடைக்கின்றது. அந்த வேலையை ஏற்றுக்கொள்ள மதுரையில் இருந்து தேனி அருகில் இருக்கும் கிராமத்திற்கு பேருந்தில் கிளம்புகிறார் நாயகன். அந்தப் பேருந்தில் அவருக்கு காதலியும் கிடைக்க, ஊர் காதலை எல்லாம் சேர்த்து வைத்த நாயகன் விடுவாரா என்ன? அவர் இறங்க வேண்டி கிராமத்தில் தனக்காகக் காத்திருக்கும் நண்பர்களிடம் தன் பையைக் கொடுத்துவிட்டு அதே பேருந்தில் நாயகியின் வசிப்பிடத்திற்கே தேடிப் புறப்படுகிறார் நாயகன். நாயகி இறங்கும் குக்கிராமத்தில் பெண் கேட்டு, நாயகியின் முறை மாமன்களால் பஞ்சாயத்தில் நிறுத்தப்படுவதும், அதன் பின் என்ன? என்பதும்தான் மேற்படி படத்தின் மொத்த கதையும்!

கதாநாயகராக அரவிந்த் வினோத் பாத்திரத்தை உணர்ந்து நடித்திருக்கின்றார். நாயகி ஸ்ரித்திகா, புன்னகை இளவரசி எனும் பட்டம் பெறும் முயற்சியில் படம் முழுக்க சிரித்தபடியே வருகிறார்.

ராஜிகுமார், சிங்கமுத்து, குமரிமுத்து, நெல்லை சிவா, முத்துக்காளை, திருமங்கலம் கலைராசு, சுருளிப்பட்டி சிவாஜி, சாந்தினி, முறைமாமன் ராசுக்குட்டி பிரகாஷ் உள்ளிட்ட பழைய, புதிய நடிகர்களுடன் சோலைமலை பேருந்தும் ஒரு பாத்திரமாக படம் முழுக்க பரவி இருப்பது வியக்க வைக்கின்றது.


எல்லோரது பிரயாணத்திலும் ஒரு ஓரத்தில் ஒளிந்து கொண்டிருக்கும் காதலை சற்று கற்பனை சேர்த்து அழகான கதையாக்கி, படமாக்கியிருக்கும் ரதிபாலா பாராட்டுக்குரியவர். எஸ்.பி.எஸ் குகனின் ஒளிப்பதிவும், ஜே.வியின் இசையும் படத்திற்கு பலம் சேர்க்கின்றன.

இந்தப் படத்தைப் பார்க்கும் எல்லோருக்கும் மதுரை, தேனி, ஆண்டிப்பட்டி ஆகிய இடங்களுக்கு பேருந்தில் சென்ற அனுபவம் கிடைப்பது தான் இந்தப் படத்தின் வெற்றி. ★★★★★★★



# 'மருதாணி'

தன்னுடைய திருமணத்திற்குப் பின்னர் நடிகை மீரா ஜஸ்மின் நடித்து வரும் படம் 'மருதாணி'. இப்படத்தில் ஜெய் ஆகாஷின் ஜோடியாக இவர் வருகின்றார். தமிழில் அண்ணன் தங்கை பாசத்தை இன்று வரை நினைவூட்டும் திரைப்படமான 'பாசமலர்' போன்று இதுவும் சகோதர பாசத்தை வலியுறுத்தும் படமாக அமையும் என்று கூறப்படுகின்றது. இப்படத்தில் மயில்சாமி, ஆர்த்தி ஆகியோர் இடம்பெற்றிருப்பதால் நகைச்சுவைக்கும் பஞ்சமிருக்காது. மருதாணி திரைப்படம் ஏற்கனவே இதே பெயரில் தெலுங்கில் வெளிவந்து வெற்றிக்கொடி நாட்டிய திரைப்படம் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# 'பேராண்மை'

பெருமளவு பணத்தை வாரி இறைக்கும் வசதி படைத்த முதலீட்டு நிறுவனங்கள் பலவும் படத்தயாரிப்பில் ஈடுபட்டு மண்ணைக் கவ்வின. இவை படத்திற்கு தேவையான நிதியை விடவும் படத்தில் பிரமாண்டத்தை உண்டுபண்ணுவதற்காக ஏகப்பட்ட பணத்தை தயாரிப்பில் கரைத்ததால் எந்தப் படமும் இவர்களைக் கரைசேர்க்கவில்லை. இவ்வாறு படத்தயாரிப்பில் ஈடுபட்ட ஐங்கரன் இன்ரர்நஷனல் நிறுவனம் தயாரித்த வில்லு, சர்வம் போன்ற படங்கள் மரண அடிவாங்கின. அப்படியிருந்தும் விடாப்பிடியாக ஜனநாதன் இயக்கத்தில் ஜெயம் ரவி நடிக்கும் பேராண்மை படத்தையும் ஐங்கரன் நிறுவனம் தயாரித்து வருகின்றது. இதுவரைபட்ட தோல்விகளுக்கு மருந்திடுவது போல இப்படம் வெற்றிப்படமாக அமையும் என்று ஐங்கரன் நிறுவனத்தினர் கூறுகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அணிக்கு சகலதுறை வீரர்கள் தேவை



இந்திய அணிக்கு சகலதுறை வீரர்கள் தேவை என்று அணித்தலைவர் எம்.எஸ். தோனி கூறினார்.

ஐசிசி சாம்பயன்ஸ் கிண்ணப் போட்டியின் லீக் சுற்றிலேயே இந்தியா வெளியேறியது. ஒரு வெற்றி, ஒரு தோல்வி, ஒரு ஆட்டத்தில் முடிவு இல்லாத நிலை என்ற பட்சத்தில் ஏ பிரிவில் 3ஆம் இடத்தைப் பிடித்த இந்தியா போட்டியிலிருந்து வெளியேற்றப்பட்டது.

இதுகுறித்து நிருபர்களுக்கு தோனி அளித்த பேட்டி:

பாகிஸ்தானுடனான லீக் ஆட்டத்தில் இந்தியா தோற்றதுதான் முக்கியமானதாகப் போய்விட்டது. அந்த ஆட்டம் முக்கியத்துவம் வாய்ந்த ஆட்டமாகும். அதில் இந்தியா தோற்றதால் போட்டியிலிருந்தே வெளியேற வேண்டியநிலை ஏற்பட்டுவிட்டது. முதல் கோணல் முற்றிலும் கோணலாகிவிட்டது.

மேலும் ஆஸ்திரேலியாவுடனான ஆட்டம் மழையின் காரணமாக கைவிடப்பட்டதும், இந்திய அணிக்கு துரதிஷ்டத்தைத் தேடித் தந்தது.

முதல் ஆட்டத்தில் நாங்கள் சில தவறுகளைச் செய்தோம். களத்தடுப்பிலும் கோட்டை விட்டோம். ரன்-அவுட் வாய்ப்புகளைக் கூட தவறவிட்டோம்.

ஆனால் அதன் பின்னர் நடந்த ஆட்டங்களில் அணியின் பந்துவீச்சாளர்கள் தங்கள் பங்கைச் சிறப்பாகச் செய்தனர். அணியின் பலம் சரிசமமாக இருக்க சகலதுறை வீரர்கள் தேவை.




சில அணிகளில் கடைசியாக வரும் வீரர்கள் கூட நன்றாக விளையாடுகிறார்கள். குறிப்பாக ஆஸ்திரேலியாவில் பரெட் லீ, ஜோன்சன் போன்றோர் சிறப்பாக விளையாடுகின்றனர். சில சமயத்தில் இது அந்த அணிக்கு வெற்றியைத் தேடித்தருகிறது. இதுபோன்ற பந்துவீச்சாளர்கள் நமக்கும் தேவை.

அணியில் ஆரம்ப ஆட்டக்காரர் ஷேவாக், யுவராஜ் சிங் இல்லாதது பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. இதனிடையே கடைசி ஆட்டத்தின்போது சச்சின் டெண்டுல்கருக்கு வயிற்றுவலிப் பிரச்னை ஏற்பட்டது. சாப்பிட்ட உணவில் ஏற்பட்ட பிரச்னையால் அவர் விளையாட முடியாமல் போனது. இதேபோன்று அணியில் ஐந்தாறு வீரர்கள் அவதிப்பட்டனர் என்றார் அவர்.



# சர்ச்சையை கிளப்பியுள்ள 'பை ரன்னர்' விவகாரம்

தென்னாபிரிக்க அணித் தலைவர் கிராம் ஸ்மித்திற்கு இங்கிலாந்து அணித் தலைவர் அன்ட்ரூ ஸ்டரஸ் பை ரன்னர் ஒருவரை பயன்படுத்த அனுமதி மறுத்தது பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

இங்கிலாந்துடனான லீக் போட்டியில் சிறப்பாக ஆடிய ஸ்மித் கடைசி நேரத்தில் ஓடுவதற்கு முடியாமல் தடுமாறினார். இதனால் பை ரன்னர் ஒருவரைப் பயன்படுத்த அனுமதி கோரியபோது அதற்கு ஸ்டரஸ் மறுப்புத் தெரிவித்தார்.

ஸ்டரஸ் மறுப்பு குறித்து ஸ்மித் பின்பு கூறுகையில்,

நான் தசைப் பிடிப்பினால் அவதியுற்றேன். அந்த இடத்தில் எனக்கு ஓடுவதற்கு ஒருவர் தேவைப்பட்டார். அன்ட்ரூ நடுவரிடம் பேசினார். ஆனால், கடைசியில் ஓட்ட வீரர் ஒருவரைத் தர மறுத்துவிட்டார். இது போன்று ஓட்ட வீரர் ஒருவரை கொடுப்பது என்பது கிரிக்கெட்டில் சகஜமானதுதான். ஆனால் மறுத்தது பெரும் வெறுப்பைக் கிளப்பியது என்றார்.

இது குறித்து ஸ்டரஸ் கூறுகையில், நடுவர்கள் ஸ்மித்திற்கு பை ரன்னர் தருவதில் அவ்வளவு ஆர்வம் காட்டவில்லை. ஒரு நீண்ட இன்னிங்ஸிற்கு பின்னர் ஒரு துடுப்பாட்டவீரர் களைப்படைவது இயல்பே. அதற்கு தேவை சிறிது உடல் நீவி விடுதல் போன்ற நடவடிக்கையே. பை ரன்னர் தேவையில்லை. அந்த இடத்தில் அவருக்கு ரன்னர் கொடுக்கும் அளவுக்கு எந்த நிலையும் ஏற்பட்டு விடவில்லை என்றார்.

ஸ்மித் இதற்கு மீண்டும் கூறுகையில் உலகில் எல்லாம் சுற்றி சுற்றி மீண்டும் மீண்டும் நிகழ்வதுதான்; இது போன்ற நிலைமை ஸ்டரஸிற்கு ஏற்படும்போது அவர் இதனை எப்படி எதிர்கொள்கிறார் என்பதை நாம் பொறுத்திருந்து பார்ப்போம் என்றார்.

ஆனால் ஸ்டரஸ் விடவில்லை, தசைப்பிடிப்பிற்கு ரன்னர் கொடுக்க முடியாது; அவ்வளவுதான் அத்தோடு முடிந்தது விடயம்; முற்றுப்புள்ளி. அவர் அவ்வளவு மோசமான தசைப்பிடிப்புக்கு ஆளானதாக நான் கருதவில்லை. அவரால் ஓட முடியும் என்பதே என்னுடைய கணிப்பு என்று முடித்துவிட்டார் ஸ்டரஸ்.

ஆனால் ஸ்மித் விடுவதாயில்லை. என்னை அர்ஜுன ரணதுங்காவுடன் ஒப்பட விரும்புகின்றாரா என்று எனக்கு தெரியவில்லை. ஆனால் உலக கிரிக்கெட்டில் சாதாரண ஒரு விடயம் இந்த பை ரன்னர் விடயம். இதற்கு முன்பு அனுமதிக்கப்பட்டது. திடீரென அனுமதிக்கப்படவில்லை. இதெல்லாம் ஒரு சீரற்ற முடிவுகளையே காண்பிக்கிறது என்று ஸ்மித் புன்னகையுடன் தோல்வியை எதிர்கொண்டார்.

இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்கவுக்கும் இதுபோன்று நிகழ்ந்தது. அவுஸ்திரேலியாவுடனான போட்டி ஒன்றின்போது ரணதுங்க பை ரன்னர் கேட்டார்.

அதற்கு அவுஸ்திரேலிய அணியின் விக்கெட் காப்பாளர் இயன் ஹீலி ஓட்டம் பெற சோம்பலுக்கும் பராமரிக்கப்படாத உடல் நிலைக்கும் பை ரன்னர் கொடுக்க முடியாது என மறுப்பு தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சாமிர்தம்







இலங்கை அரசியல் அரங்கில் பெரும்பான்மை சிங்கள மக்கள மத்தியில் புகழ்பெற்ற குடும்பம் பண்டாரநாயக்கா குடும்பம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஸ்தாபித்து 1956 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் அதிகாரத்தைக் கைப்பற்றி, பிரதமராகப் பதவி வகித்தவர் காலஞ்சென்ற எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா.

1959 ஆம் ஆண்டில் பண்டாரநாயக்கா படுகொலை செய்யப்பட்டதையடுத்து சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்று நாட்டின் முதலாவது பெண் பிரதமர் என்ற பெருமையையும் உலகத்தின் முதலாவது பெண் பிரதமர் என்ற கௌரவத்தையும் ஈட்டிக்கொண்டவர் பண்டாரநாயக்காவின் மனைவியான சிறிமாவோ பண்டாரநாயக்கா,

## உல்லாசப் பயணிகள் விடுதியாக மாறியுள்ள முன்னாள் பிரதமரின் வீடு

இத் தம்பதியர்களின் இரண்டாவது மகளான சந்திரிகா, தமது பெற்றோரின் வழியில் அரசியலில் பிரவேசித்து நாட்டின் பிரதமர் மற்றும் ஜனாதிபதி ஆகிய பதவிகளை வகித்தவர். பண்டாரநாயக்கா தம்பதிகளின் ஒரே மகனான அநுரா பண்டார நாயக்காவும் அரசியலில் இணைந்து அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், சபாநாயகர் போன்ற பதவிகளை வகித்தவர்.

கொழும்பு கறுவாக்காடு ரோஸ்மீட் பிளேஸில் அமைந்துள்ளதும், பண்டாரநாயக்கா குடும்பத்தினர் நீண்டகாலமாக வசித்து வந்ததுமான சரித்திரப் பிரசித்திபெற்ற இல்லம் தற்போது உல்லாசப் பயணிகள் விடுதியொன்றாக ஆகியுள்ளது என்பது ஆச்சரியம் தருமொரு விடயமே.

தற்போது 'ரின்ரகல் ஹோட்டல்' [Hotel Tintagel] எனப் பெயர் கொண்ட அவ் விடுதி 50 வருடங்கள் வரையான காலம் பண்டாரநாயக்கா குடும்பத்தினரின் பரம்பரைச் சொத்தாக இருந்து வந்துள்ளது.

1930ஆம் ஆண்டில் லூசியன் டி சில்வா என்பவரால் கட்டுவிக்கப்பட்ட அவ் வீடு 1940 துகளின் நடுப்பகுதியில் காலஞ்சென்ற பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்காவால் விலைக்கு வாங்கப்பட்டது. 2005ஆம் ஆண்டில் உதயகாந்த் பெர்ணாண்டோ என்பவரால் அவ் வீடு வாங்கப்படும் வரை பண்டாரநாயக்கா குடும்பத்து உறுப்பினர்களே அவ் வீட்டில் வாழ்ந்து வந்துள்ளனர்.

சிங்கள மக்கள் மத்தியில் அரசியல் தலைவர்களாகப் பிரபல்யம் பெற்றிருந்த பண்டாரநாயக்கா குடும்பத்தினர் வாழ்ந்த அந்த ரோஸ் மீட்பிளேஸ் இல்லம் வேறு நாடுகளிலென்றால் ஒரு தொல்பொருள் காட்சியகமாகவோ அல்லது அரச நிர்வாக நிறுவனமொன்றாகவோ ஆக்கப்பட்டு கௌரவம் பெற்றிருக்கும். ஆனால் இன்று விரும்பினால் எந்தவொரு வெளிநாட்டு உல்லாசப் பயணியோ, அல்லது நாட்டின் பணம் படைத்த தனவந்தத் தரப்பினரோ தங்கி உல்லாசமாகப் பொழுதைக் கழிக்கத் தக்க உல்லாச விடுதியாக மாறியிருப்பது அந்த இல்லத்தின் தலைவிதியென்றே கொள்ள முடிகின்றது. ★★★★★★★★★★★★★★

– ரேவதி

## இளமையின் இரகசியம்



அந்தக் கிராமத்திலேயே அதிக வயதுடையவர் அவர்தான். ஆனால் இளமையானவர்.

"இன்றும் இளமையுடன் இளைஞர் போல இருக்கிறீர்களே? அதன் இரகசியம் என்ன?" என அவரிடம் சிலர் கேட்டார்கள்.

"ஓரடி நடவேன், ஈரடி கடவேன், இருந்து உண்ணேன், படுத்து உறங்கேன்" என்று கூறிய அந்தப் பெரியவர் அதற்கான விளக்கத்தையும் கூறினார்.

"ஓரடி நடவேன் என்றால் நமது உடம்பின் நிழல் கால் அளவில் ஓர் அடியாக இருக்கும் உச்சிப்பொழுது நேரத்தில் நான் வெயிலில் வெளியில் நடக்கமாட்டேன். உச்சிவெயில் படுவது உடல் ஆரோக்கியத்துக்கு ஆகாது.

'ஈரடி கடவேன் - அதாவது ஈரஅடி நடவேன், ஈரமான இடங்களில் நீண்ட நேரம் நிற்பதோ நடப்பதோ ஆரோக்கியத்துக்கு ஆகாது என்பதால் அப்படி நடக்க மாட்டேன்.

'இருந்து உண்ணேன் - ஏற்கனவே நான் உண்ட உணவு சமிபாடு ஆகாமல் வயிற்றில் இருக்கும் போது மேலும் உண்ணமாட்டேன். நன்கு சமிபாடான பின்பு தான் மறுபடியும் உணவு உண்பேன். 'படுத்து உறங்கேன் - தூக்கம் வந்த பிறகுதான் படுக்கைக்குச் செல்வேன். படுக்கையில் படுத்துக் கொண்டு தூக்கம் வரவில்லையே என நினைத்து வருந்த மாட்டேன்.'

நீண்ட நாள் அவர் இளமையோடு வாழும் இரகசியத்தை மற்றவர்கள் புரிந்து கொண்டனர்.

– பரணி – கோண்டாவில்

## அழிந்து வரும் திமிங்கில இனம்





டொல்பினும் நீலத் திமிங்கிலமும் கடலில் வாழ்கின்ற முலையூட்டிகள் இனத்தைச் சேர்ந்தவை. பொதுவாக நாம் டொல்பினுக்குத் தரும் நல்ல பிள்ளைத் தனத்தைத் திமிங்கிலத்துக்குத் தருவதில்லை. நாம் பார்த்துப் பயப்படுகின்ற எல்லாவற்றையும் பயங்கரமானவை என நாம் அடையாளப்படுத்துவதும் இதற்கோர் காரணமாக இருக்கலாம். மனிதர்களிடம் இருக்கும் கெட்ட குணங்களில் ஒன்று கூடத் திமிங்கிலத்திடம் கிடையாது என்பதை நம்புங்கள். திமிங்கிலம் ஏறக்குறைய 70 ஆண்டுகள் வரை உயிர் வாழக்கூடியது.

பாலூட்டும் தாயாய் இருக்கும் திமிங்கிலத்தின் கர்ப்பகாலம் பத்து மாதங்கள் அல்ல. 12 முதல் 17 மாதங்களாகும். இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்கு மட்டுமே இவை குட்டிபோடும். குட்டி என்று கூறுவது கூடப் பொருத்தமற்றது தான். பெரும்பாலும் ஏறத்தாழ 100 அடி நீளமும் 150 தொன் எடையும் கொண்ட நீலத் திமிங்கிலத்தின் விஸ்தீரணத்தை விபரிக்க வேண்டுமென்றால் அதனது நாக்கில் மட்டும் ஒரு பெரிய பஸ்ஸையோ அல்லது லொறியையோ நிறுத்தி வைக்க முடியும் எனக் கூறிக் கொள்ளலாம்.

திமிங்கிலத்தின் சுவாசிப்பு மிகச் சுவாரஸ்யமானது. இவையும் மனிதர்களைப் போலவே நுரையீரல்களைக் கொண்டிருப்பதால், தாம் வாழும் கடலின் மேற்பரப்புக்கு வந்தே மூச்சை உள்ளெடுக்க வேண்டியுள்ளது. மூச்சை அடக்கும் திறன் ஒவ்வொரு வகைத் திமிங்கிலத்துக்கும் வேறுபட்டிருக்கும்.

திமிங்கிலங்களில் 75 வகைகள் உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது. ஒரு மணித்தியாலம் முதல் மூன்று மணித்தியாலங்கள்வரை மூச்சை அடக்கிக்கொண்டு நீருக்குள் உலாவும் திறனை இவை கொண்டுள்ளன. கடலின் அடியில் உள்ள கடும் குளிரைத் தாங்கிக்கொள்வதற்காக அதிகமான கொழுப்புப் படிவங்கள் இவற்றின் உடலில் காணப்படுகின்றன.

இவற்றின் கொழுப்பு எண்ணெய்க் கலவை பெருமளவில் மருத்துவத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுவதால், இவை தற்காலத்தில் அதிக அளவில் வேட்டையாடப்பட்டு வருகின்றன. மனிதனின் பேராசை மனிதர்களை மட்டுமல்லாமல் வாய்பேசா விலங்கினங்களையும் விட்டு வைக்கவில்லை.

திமிங்கில வேட்டையில் முன்னணி வகிப்பவர்கள் ஜப்பானியர்களே. ஜப்பான் கடந்த பல ஆண்டுகளாகத் திமிங்கில வேட்டையை மேற்கொண்டு வருகின்றது. அதனைத் தனது தேசிய கலாசாரமாகவே ஜப்பான் கருதுகின்றது. அழிந்து வரும் அரிய உயிரினங்களை வேட்டையாடக்கூடாது என்ற சர்வதேச சட்டம் அவர்களால் அலட்சியப்படுத்தப்பட்டு வருகின்றது.

இவ்விதம் அரியவகை கடல்வாழ் உயிரினமொன்றான திமிங்கிலங்கள் பெருமளவில் வேட்டையாடப்பட்டு வருவதை அவதானிக்கும்போது இன்று எமது இளம் சந்ததியினருக்கு டைனோசரை 'கிராபிக்ஸ்' மூலம் வடிவமைத்துக் காட்டுவதுபோல எமது எதிர்காலச் சந்ததியினருக்குத் திமிங்கிலத்தையும் 'கிராபிக்ஸ்'ஸில் வடிவமைத்தே காட்ட வேண்டிய நிலைமை ஏற்படக்கூடும். ★★★★★★★★★★★★★★★★★★★★

## கி.வா. ஜகந்நாதனின் சிலேடைச் சிறப்புக்கள் சில



தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் பழம்பெரும் சஞ்சிகை 'கலைமகள்'. இச் சஞ்சிகையின் ஆசிரியராக மிக நீண்ட காலம் பணியாற்றியவர் தமிழறிஞர் கி.வா. ஜகந்நாதன். சிலேடையாகவும் அதே சமயம் நகைச்சுவை ததும்பவும் பேசுவதில் வல்லவர்; சிறந்த தமிழ்க் கவிஞர்.

அவரது தனிச்சுவை மிக்க சிலேடைப் பேச்சுக்கு ஒரு சில உதாரணங்கள் இவை:

"கைதட்டுவது இருவகை; ஒன்று பேச்சின் சிறப்புக்கு. மற்றையது பேசுபவரது பேச்சுப் பிடிக்காது, அவரது பேச்சை நிறுத்துவதற்காகும். எனவே இவற்றில் முதல்வகை 'தட்டல்' இரண்டாம் வகை 'அதட்டல்' என்றாகிறது."


'திருக்குறளை இயற்றியவர் 'சின்னப்பாதேவர்' என்ன, ஆச்சரியமாக இருக்கிறதா? பாக்களில் சிறியது குறள். அதாவது சின்னப்பா. திருவள்ளுவர் தேவர் இனத்தைச் சேர்ந்தவர். அதனால் திருவள்ளுவரைச் சின்னப்பாதேவர் என்று கூறினால் என்ன?

கி.வா.ஜ ஒரு சமயம் நண்பர் ஒருவருடன் உரையாடிக் கொண்டிருந்தார். அந்த வேளை நண்பரது மனைவி அங்கு வரவே "மாமியார் பெண்ணோ?" எனத் தமது நண்பரை வினாவினார் கி.வா.ஜ. அப்பெண்யார்? என வினாவுவதாக நினைத்த அவரது நண்பர் "இவர் தான் எனது மனைவி" எனப் பதிலளித்தார். கி.வா ஜகந்நாதனும் விடவில்லை. "அதுதான் இவர் தங்களுடைய மாமியார் பெண்ணோ?" என்று கேட்டேன் என்றார் நயமாக.

ஒரு சமயம் கி.வா.ஜ. யாழ்ப்பாணம் வந்திருந்த போது நீர்வேலியில் இராசேந்திரக்குருக்கள் வீட்டில் தங்கியிருந்தார். முத்துவேல் என்பவர் கி.வா. ஜ. வை அடிக்கடி யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளுக்கு சமயச் சொற்பொழிவுக்காக தமது காரில் அழைத்துச் செல்வது வழக்கம். முத்துவேலே காரை ஓட்டிச் செல்வார். ஒரு சமயம் "உங்களுக்குக் கார் ஓட்டுவதற்கு நான் பாக்கியம் செய்திருக்க வேண்டும்" என்று முத்துவேல் கி.வா.ஜவிடம் கூறினார். அதற்கு கி.வா.ஜ "நான் தான் பாக்கியம் செய்தவன். ஏனென்றால், கண்ணன் கார் ஓட்ட அர்ச்சுனன் பாக்கியம் செய்தானோ?" என்றார். அதற்கு முத்துவேல், "போயும்போயும் நான் கண்ணன் ஆவேனா?" என்றார். உடனே கி.வா.ஜ, " அந்தப்பார்த்த சாரதி நான் கண்ணால் பாராத சாரதி. நீங்கள் தானே நான் பார்த்தசாரதி" என்றார் குறும்புடன். ★★★★★★

## நாக்கைப் போல இரு!

"லாவோட்சு' என்ற சீன ஞானிக்குப் பல சீடர்கள் இருந்தார்கள். அவர் சாகுந்தறுவாயில் அந்தச் சிஷ்யர்கள் 'நீங்கள் கடைசியாக மக்களுக்கு என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு லாவோட்சு நான் வாயைத் திறக்கின்றேன் பாருங்கள். அது தான் நான் மக்களுக்குச் சொல்லும் தத்துவம் என்று சொல்லி வாயைத் திறந்தார். சீடர்கள் ஒன்றுமே புரியாமல் விழிப்பதைக் கண்ட லாவோட்சு 'நான் வயைத் திறந்து காட்டிய போது நீங்கள் என்ன பார்த்தீர்கள்' என்று கேட்டார். 'நாக்கு மட்டும் தான் இருந்தது' என்றார்கள் சீடர்கள்.




லாவோட்சு, என்வாயில் பற்கள் எதுவும் இல்லை. நாக்கு மட்டும் தான் இருக்கின்றது. எதற்கும் வணங்காத பற்கள் இடையில் தோன்றி இடையில் மறைந்து விடுகின்றன. பணிவில்லாமல் வாழ்ந்தால் கடைசியில் பற்களைப் போல் விழுந்து உடைந்து தான் போக வேண்டும். பிறக்கும் போது கூடவே பிறந்து வளைந்து கொடுத்த நாக்கு நாம் இறக்கும் வரை கூடவே இருக்கின்றது. பற்களைப் போல நிமிர்ந்து வாழாமல் வளைந்து கொடுக்கும் நாக்கைப் போல் பணிந்து வாழ வேண்டும் என்பது எனது தத்துவம் "- என்றார் ★★★★★

சங்கரிபுத்திரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WESTERN UNION | yes!
money transfer

உங்கள் உறவினர்களோடு தீபத்திருநாளை கொண்டாட முடியுமா?




உலகெங்கிலும் இருந்து வெஸ்டர்ன் யூனியன் மூலமாக
அனுப்பப்படும் பணத்தினை யாழ்குடாநாட்டில்
எந்தவொரு MMBL மணிமாஸ்டர் நிலையங்களிலும்
பெற்றுக்கொள்பவர்களுக்கு அழகிய பரிசு ஒன்று காத்திருக்கிறது!

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது
*இச்சலுகை ஒக்டோபர் 31 வரை மட்டுமே

MMBL Money Master

வெஸ்டன் யூனியன் பிரதான முகவர்
MMBL மணி டிரான்ஸ்பர் பிரைவேட் லிமிட்ட்
7ம் மாடி, எய்ட்கென் ஸ்பென்ஸ் டவர்-II, இல-315,
வொக்சோல் வீதி, கொழும்பு-02
உடனடி அழைப்பிற்கு - 011 552 99 99
- 077 791 55 43

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக். 4

மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாட சாலை பரிசில் நாள் நிகழ்வு எதிர்வரும் ஏழாம் திகதி புதன் கிழமை காலை 8.30 மணிக்குப்பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் வே.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர்திருமதி அ.வேதநாயகமும் சிறப்பு விருந்தினர்களாகத் தென்மராட்சி கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ.வரதராஜமூர்த்தி, ஈபிடிபியின் மாவட்ட உதவி அமைப்பாளர் சூ.அலெக்ஸாண்டர் (சாள்ஸ்) ஆகியோரும் கலந்து கொள்வர். (203-207)

விற்பனைக்கு
45 நாள்கள் நிரம்பிய பூச்சி நீக்கப்பட்ட நல்லினபொமேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: கா.சுகுமார், சின்னப்பா வீதி, நவாலி கிழக்கு, மானிப்பாய்.

மாபெரும் தீபாவளி சிறப்புத் தள்ளுபடி
AYNGARAN PYRAMID Original DVDs'
பழைய, புதிய திரைப்படப்பாடல்
Audio CDs'
MP3 CDs'
VCDs'
பழைய, புதிய தமிழ், ஆங்கில திரைப்பட VCDs' DVDs'
மற்றும்
Computer Software,
Computer Games
CDs' DVDs'
கைக்கடிகாரங்கள், கணனி உதிரிப்பாகங்கள்
எதிர்பாராத கவர்ச்சிகரமான விலைக் கழிவில்
05.10.2009 தொடக்கம்
16.10.2009 வரை
அல்டி எலக்ரோனிக்ஸ்
இல.15, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்.

USHA
it's a better life
உத்தரவாதத்துடன்
யாழ்பாண விநியோகஸ்தர்
ஜப்னா இலக்ரிக்கல்ஸ்
இல-94(6) ஸ்டென்லி ரோட்
யாழ்ப்பாணம்
Tel : 021 - 2222353
உஷா தையல் மெசின்
உஷா மின் விசிறி



இலங்கைக்கு இறக்குமதி செய்பவர்
நெல்சன்ஸ் என்டபிரைசஸ்
124, முதலாம் குறுக்குத் தெரு, கொழும்பு-11. Tel : 2343586
விநியோகஸ்தர்
K. I. R. ஹோல்டிங்ஸ் பிரைவேட் லிமிடெட்
186-C, அனகாரிக தர்மபால மாவத்தை, தெஹிவல. Tel : 2713580
Dickson Ad

# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
24.09.1951

## துரைரத்தினம் ஸ்ரீகனகசபேசன்

மறைவு
27.09.2007

(ஆசிரியர், B.A.; Dip.in Education.HNDA.M.phil.; J.P; வளலாய், அச்சுவேலி)

திதி: பிரதமை (04.10.2009)

இடி ஒன்று விழுந்து ஈராண்டும்
ஓடி முடிந்ததுவோ மாறவில்லை - உன் துயரம்
ஆறவில்லை என் துயரம் - உம்
நினைவுடனே பகலிரவாய் நனைகின்றேன்
பாதியிலே தொலைத்தேனையா.....
பட்டதுயர் மாறவில்லை......!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
என்றும் உங்கள் பசுமையான
நினைவுகளுடன் நானிருப்பேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

வளலாய்,
அச்சுவேலி.

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்:
அன்பு மனைவி - மல்லிகாதேவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் தூரிகை











# விடுகதை சொல்லப்போறோம்...

1) உரிக்க உரிக்கத்தோல். அது என்ன?
வெங்காயம்

2) நான்கு கால் இருந்தும் நடக்கத் தெரியாது. அது என்ன?
கதிரை

3) அண்ணன் தம்பி இருவர், பன்னிருவரை துரத்துவதே அவர்கள் வேலை. அது என்ன?
கடிகாரம்

4) ஊசி போட்ட வைத்தியர், காசு வாங்காமல் போறார். அவர் யார்?
நுளம்பு

5) வெள்ளை மனிதனுக்கு கறுப்புத் தொப்பி. அது என்ன?
தீக்குச்சி

சு.மகியா, தரம் - 6A, யூனியன் கல்லூரி, ஏழாலை மேற்கு, சுன்னாகம்.

# மழைநாள்

கோடை மாறி பருவத்திலே
முன் வந்தது மாரி
மாரி கால பருவத்திலே
கண்டேன் ஒரு காட்சி

பள்ளி விட்டு வீடு சென்றேன்
பசுமையான தென்றல்
இடி முழக்கம் ஒரு கணம்
பட்டாசு மின்னல் மறுகணம்

பச்சைப் புல்லை மேய்ந்த பசுங்கன்று
பதறியடித்து ஓடுகிறது
கிணற்றுத் தவளை யெல்லாம்
கிறுகிறு வென கத்துகின்றது

சோ என்று மழை பொழிய
அதில் நான் நனைந்தாட
கூரைத்துளிகள் வழிந்தோட
பொங்குது மனம் இயற்கையிலே.

சுதாகரன் தீரோசன், தரம் - 8B, யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

# பொது அறிவு

1) உலகின் புனித பூமி என அழைக்கப்படும் நாடு எது?
ஜெருசலேம்

2) இலவசக் கல்வியின் தந்தை யார்?
C.W.W கன்னங்கரா

3) ஆரோக்கியமான மனிதனின் உடல் வெப்பநிலை யாது?
98.4 பாகை பரனைட் - 37 °C

4) இலங்கை எப்போது சுதந்திர தினப் பொன்விழாவைக் கொண்டாடியது?
1998.02.04

5) புவியின் துணைக் கிரகம் எது?
சந்திரன்

6) வெள்ளரசு மரக்கிளையை இலங்கைக்குக் கொண்டு வந்தவர் யார்?
சங்கமித்தை

7) சூரியனுக்கு மிகத் தொலைவில் உள்ள கோள் எது?
புளூட்டோ

8) மனித சரீரத்தில் உள்ள எலும்புகள் எத்தனை?
206 எலும்புகள்

9) இலங்கையிலுள்ள மிருகக்காட்சிச் சாலை எது?
தெகிவளை

செ.துஷ்யந்தன், தரம் - 6B, யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி.

# இயேசுவின் பொன் மொழிகள்



1) உன்னிலிநீ அன்பு கூறுவது போல் பிறரிலும் அன்பு கூறுவாயாக.
2) தீமையை வெறுத்து நன்மையைப் பற்றிக்கொள்.
3) கோபம் கொண்டாலும் பாவம் செய்யாதீர்கள்.
4) உங்களால் ஆனமட்டும் எல்லா மனிதரோடும் சமாதானமாய் இருங்கள்.
5) ஒருவருக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள்.
6) நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்.
7) உபத்திரத்தில்பொறுமையாய் இருங்கள்.
8) உங்களைத் துன்பப் படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள்.
9) சகோதர சினேகிதத்தில் ஒருவர் மேல் ஒருவர் பட்சயமாய் இருங்கள்.
10) தீமையினாலே வெல்லாமல் தீமையை நன்மையினாலே வெல்லுங்கள்.

ஜெ.சலோமி, தரம் 7, உடுவில் மகளிர் கல்லூரி.

# உங்களுக்கும் பரிசில்கள்

## விடை தெரியுமா? -34

01. தாய்லாந்தில் ஓவியர்களைப் போல் சித்திரம் வரையும் மிருகத்தின் பெயர் என்ன?
02. நில அளவைத்திணைக்களத்தால் அளவீட்டு பீடக்குறி எத்தனையாம் ஆண்டு கைதடியில் நிறுவப்பட்டது?
03. பிரிட்டிஷ் இளவரசர் சாள்ஸுக்கும் இளவரசி டயானாவுக்கும் இடையிலான விவாகரத்து எப்போது நீதிமன்றத்தால் உறுதிப்படுத்தப்பட்டது?
04. கரீபியன் தீவுக் கூட்டங்களைச் சேர்ந்த சென்.கீற்ஸ்நேவிஸ் ஆகிய தீவுகள் பிரிட்டனிடம் இருந்து எத்தனையாம் ஆண்டு சுதந்திரம் பெற்றன?
05. "சினிமாஸ் கோப்" என்னும் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தித் தயாரித்து 1973ஆம் ஆண்டு வெளிவந்த திரைப் படத்தின் தமிழ்ப் பெயர் என்ன?

## விடை தெரியுமா?

தெரிந்தால் 11.10.2009 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

## விடை தெரியுமா? -32 சரியான விடைகள்

01) சீட்டா - சிறுத்தைப்புலி.
02) ஸெப்ளின் 03) பராக் ஒபாமா
04) 1909.09.04 ஆம் திகதி லண்டனுக்கு அருகில் உள்ள 'கிறிஸ்டன் பிளேஸ்' என்னும் இடத்தில்.
05) அலெபொன்டரேசு வோல்டா.

## பரிசுபெறுவோர்

01. சி.லதாங்கி, கரவை சிந்தாமணி விநாயகர் முன்பள்ளி.
02. சி. நிரோஜன், தரம் -4 B, யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம்.
03. இ.நிருத்திகா, கத்தோலிக்க நேசரி, வட்டுக்கோட்டை.
04. ஜெ.துவாரகா, தரம் - 3C, யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.
05. சா.பபீதா, தரம் - 6, யா/கொண்டாவில் இராமகிருஸ்ண ம.வித்தி.
06. ஏ.கபிர்தன், தரம் - 5D, யா/மத்திய கல்லூரி.






# ஓநாய்ச்சிறுவன்



புலியின் உறுமல் சத்தம் குறைந்தது மெதுவான சிணுங்கலாக மாறியிருந்தது.

இந்த மாதிரிச் சத்தத்தை கிராமவாசிகள் கொஞ்சமும் விரும்புவதில்லை கிராமத்தில் வெளிப்புறங்களில் படுத்திருக்கும். அவர்களில் பலர் பயந்து ஓடிவிடுவார்கள். சில சமயம் புலியின் வாயிலேயே சிக்கி விடுவார்கள்.

"மனித வேட்டை ஆடுகிறானா? ஏன் குளங் குட்டைகளில் வண்டுகளும் தவளைகளுமா இல்லாமல் போய்விட்டனவா, மனிதர்களைப் பிடித்துத் தின்பதற்கு- அதுவும் எமக்குச் சொந்தமான இந்தப் பகுதியில் ....?" என்று தனது வெள்ளைப் பற்களை வெளியில் காட்டி கோபமாகக் கத்தினார் அப்பா ஓநாய்.

வனவிலங்கு சட்டத்தின்படி எந்த ஒரு மிருகமும் மனிதர்களைக் கொன்று தின்னுவது அனுமதிக்கப்படுவதில்லை அப்படி மனிதனை அடித்துத் தின்னும் மிருகம் தனது குழுவில் இருந்து விலகி வேறு இடத்தில் தனது வாழ்விடத்தை மாற்றிக்கொள்ள வேண்டும்.

இதற்குக் காரணம் என்னவென்றால் மனிதரை ஒரு மிருகம் அடித்துத்தின்னுமானால் அந்தப் பகுதியை மனிதர்கள் ஆக்கிரமித்துவிடுவார்கள். அந்த மிருகத்தை எப்படியும் வேட்டையாடிக் கொன்று விடுவார்கள் என்பதாகும்.

புலியின் உறுமல் பெரிதாக அதிகரித்தது. பிறகு புலி பாய்ந்து எதையோ பிடிக்க முயற்சிப்பது போன்ற சத்தங்களும் கேட்டன. இதற்குப் பிறகு ஏதோ ஊளையிடுவது போன்ற சத்தமும் வந்தது. ஷேர்கான் நோவால் முனங்குவது புரிந்தது.

அம்மா ஓநாய் சொன்னார். " எதையோ பிடிக்கப் பாய்ந்து தோற்றுவிட்டான். அதுதான் இவ்வளவு சத்தமும் உறுமலும்- ஊளையும் அது என்னவாய் இருக்கும்."

அப்பா ஓநாய் சிறிது தூரம் ஓடினார். நின்றார்- ஷேர்கான் உறுமுவது கேட்டது. வலி தாங்காது பற்றைக்குள் புரள்வது தெரிந்தது.

"இந்த மடையனுக்கு மூளையில்லை மரம் வெட்டுகிறவன் மூட்டியிருந்த தீக்குள் பாய்ந்து காலை எரித்துக்கொண்டு ஊளையிடுகிறான்" என்று கூறினார் அப்பா ஓநாய். நரிப்பிள்ளையும் அங்கேதான் இருக்கிறான் போலும்"

அம்மா ஓநாய் எதையோ காது கொடுத்துக் கேட்டார் பிறகு "என்னவோ மலையில் ஏறிவருகிறது எதற்கும் தயாராய் இருங்கோ" என்று கூறினா.

காட்டின் ஒரு பகுதியில் பற்றைகள் சலசலப்பது கேட்டது. அப்பா ஓநாய் கால்களை மடக்கி முன்னோக்கிப் பாய்வதற்கு தயாரானார். மேலே கிளம்பிய அப்பா ஓநாய் தான் எதைநோக்கி பாய்கிறோம் என்பதை ஒரு கணத்தில் உணர்ந்து தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கொண்டு நிலத்தில் இறங்கினார். இறங்கியவர் "மனிதன்- மனிதக்குட்டி- இங்கே பார்!!" என்று குரல் கொடுத்தார் (வளரும்)

# நீங்களும் எழுதலாம்

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர் :-............................................
தரம் :-............................................
பாடசாலை :-............................................
............................................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

........................ ............................................
திகதி வகுப்பாசிரியர் கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்டுறவு......

[07 ஆம் பக்கத் தொடர்ச்சி....]

அம்ம மோட்டு வட்டைக்குள்ள மூணு மாத்தயான் கதிர் பொறுக்கி வந்து, பச்சையாக் குத்திச் சோறாக்கி, குறட்டை மீனும் திராயும் சுண்டி, எல்லாரும் வளைச்சிருந்து ஆவிபறக்கப் பறக்க என்ன ருசியான சோறு... அது'

'அரியம்.... போய்ச் சாப்பிடு... நீ இனி இங்கே நிற்கமாட்டாய்..... அது தெரிகிறது போ..... முதலில் சாப்பிடு....'

குசினிக்குள் நுழைந்தவள் சாப்பிடுவதாக ஒரு பாசாங்கு அவசரமாக வெளியே வருகின்றாள்?

'ஆயோம்......ஊக்கு.....ஆயோம்!' கௌரி கைகளைச் சிறகு விரிக்க ஓடி வந்து அவளை வாங்கிக் கொள்கிறாள் அரியம். இனி உன்னை விடமாட்டேன் என்பது போல அவளுடைய கைகள் அரியத்தின் கழுத்தைக் கட்டிக் கொள்ள சிரித்தபடியே குழந்தையை நிமிர்த்தி மாறி மாறி கன்னங்களில் கொஞ்சுகிறாள். குழந்தை சிரிக்கிறாள். அந்த அழகான சிரிப்பு நெஞ்சைப் பிழிகிறது.

முதன் முறையாக அரியம் வீட்டுக்கு வந்த அன்று தனக்கும் படிக்கத் தெரியும் என்பதை வாசல் மணலில் எழுதினாளே சா. அரியமலர் என்று அவளுடைய பற்களைப் போலவே வரிசை பிசகாத அழகான கையெழுத்து. மூன்றாம் தரம் வேறு. அவளுடைய புத்திக் கூர்மை வேறு தான்.

ஓரிரு நாள்கள் போல இருக்கிறது. ஒன்றரை வருடங்கள் கௌரி அவளோடு ஒட்டிக் கொண்டாள். வேறு வழி?

குழந்தையின் அலுவல்கள்... இரவில் தாயோடு உறங்குவது தவிர அனைத்தையும் அரியமே கவனித்தாள். பால் ஊட்டும் அவளே மருந்தையும் முறைப்படி ஊட்டுவாள். குளிப்பாட்டி அலங்கரிப்பாள். நானும் மனைவியும் உத்தியோகத்திற்கு கிளம்பிப் போய் திரும்பி வரும் வரை மட்டுமல்ல ..... இரவு கௌரி தூங்கும் வரை. அவளுடைய காலில் படுத்து ஆடாவிட்டால் தூங்க மாட்டாளே! குழந்தையின் முழுப் பொறுப்பையும் அரியமே ஏற்றுக் கொண்டாள். அத்தோடு....

ஏதோ சோறு சமைப்பாள்.... கறகள் கிடந்து விட்டால் கடவுளே என்பாள். உள்ளதைக் கொண்டு கறிகளும் சமாளிப்பாள். எங்களிடம் வரும் போது இவையெல்லாம் அவளுக்குப் புதிய பாடங்கள். பார்த்துப் படிக்க அவள் கெட்டிக்காரி.

இங்கு வரும் முன்பு அரியம் ஒரு டாக்டர் வீட்டில் இருந்தாள். எட்டு வயதிலேயே அவள் அங்கு போய்விட்டாள். குழந்தையைப் பராமரிக்கும் ஆயா ஒருத்திக்கு இவள் கையுதவிக்காக அமர்த்தப்பட்டாள். டாக்டர் ஐயாவும் மனைவியும் நல்லவர்கள் தான். இல்லாவிட்டால் இவளுக்கென்று தனியாகச் சாப்பாடு தயாரித்துக் கொள்ள இவளை அனுமதித்திருப்பார்களா! அவள் எங்களிடம் வரும் போது அவளுக்குப் பன்னிரண்டு வயது என்று யாருமே சொல்ல மாட்டார்கள். அவள் மிகவும் குச்சியாக இளைத்திருந்தாள். சுருளான அவள் கூந்தல் மொட்டையாக வெட்டி விடப்பட்டிருந்தது.

அரியத்திற்கு எங்களைப் பிடித்து விட்டது. எங்களுக்கும் அவளை அப்படியே. கட்டையாய் வெட்டியிருந்த தனது தலை மயிரை சர்வ சுதந்திரமாக நீளமாக வளர்க்க ஆரம்பித்தாள். அவளுடைய தலையிற் பேன்கள் என் மனையாளின் பொழுதுபோக்கு! கொஞ்சம் வாய் நீளம் என்பதைத் தவிர... கடைக்குப் போனாள். மா இடித்தாள். வாசல் பெருக்கினாள். விறகும் கொத்தினாள். சமைத்தாள். குழந்தையை வளர்த்தாள். வீடும் வாசலும் அழகாய் இருந்தன. மாவும் முருங்கையும் எலிமிச்சையும் காய்த்தவை காய்த்தபடி கணக்காய் இருந்தன.

அரியத்தைப் பற்றி அடுத்த வீட்டுக்காரர்கள் எங்களிடம் கூறும் முறைப்பாடுகள். அவர்கள் அது இது கேட்டுவரும் வேளைகளில் அரியம் நடந்து கொள்ளும் கண்டிப்பின் கசப்புகள் என்று எங்களுக்குத் தெரியும். நாங்கள் வீட்டிலிருக்கும் பொழுதில் கூட எங்களுக்கான பதிலை அவளே சொல்லி அவர்களைத் திருப்பி அனுப்பி வைப்பாள். அவளுடைய துடுக்கான பதில் எனக்குப் பிடிக்காவிட்டால் என்ன? வீட்டுக்காரிக்கு அது பிடிக்கும். ஒரு ஈ காக்கை நெருங்க முடியாது.

சில வேளைகளில் எங்கள் மூத்த பெண்பிள்ளைகள் இரண்டையும் அரியம் அடித்துவிடுவாள். காரணம் கேட்டால் ஏதோ சொல்லிச் சமாளித்து அழுவாள். இந்த இடத்தில் மட்டும் அவள் கொஞ்சம் அதிகம் என்று மனைவி அதட்டுவாள். மகளுக்கு மேலும் இரண்டு மூன்று தாயிடமிருந்து கிடைக்கும். 'ஒத்த வயதுப் பிள்ளைகள். எப்படியும் போகட்டும். அக்கா தங்கை சண்டை போட்டுக் கொள்வதில்லையா?' என்று இரகசியமாக மனைவியைச் சமாளிப்பது.... ஒரு மெல்லிய செருமல் செருமிக் கொள்வது அவ்வளவோடு நான் சரி....

அவளிடம் திருட்டுப் புத்தி ஒன்றுமே கிடையாது. ஓர் சிறு உணவுப் பண்டத்தைத் தானும் அவள் திருடியதாக இல்லை. வாசலைப் பெருக்கும் போது ஏதாவது சில்லறைகளைப் பொறுக்கினால் கூட என்னிடமோ மனைவியிடமோ கொண்டு வந்து கொடுத்து விடுவாள்.

யாராவது எங்களோடு தகராறுகளுக்கு வந்தால்... அரியம் அவர்களை சும்மா விடமாட்டாள். எல்லாம் அவளுக்குத் தெரியும்.

'கிழடன்! அவர்ர ஒசிலப் பாரன்....! கறிச்சட்டிப் புறத்தி மாதிரி முகமும் ஆளும்! ஐயாவோட இவனுக்குச் சரியான எரிச்சல்! தாலிக் கொடிக் கள்ளன்! இவனைப் பொலிசில் குடுத்து இடிப்பிக்க வேணும்! கண்ணாடிப் புடையன்!' வாய்க்கு வந்தபடி திட்டுவாள். காறாப்பித்துப்புவாள்! எட்டிப் பார்த்தால் தெருவிலே எங்களோடு வயல் வழக்காடிக் கொண்டிருக்கும். மனைவியின் உறவினர் போய்க்கொண்டிருப்பார். அவருக்கு கேட்காமல் தான் இது நடக்கும். நான் அதட்டிக் கூப்பிடும் வரையும் நடக்கும். இப்படிப் பலபேர் அரியத்திடம் வாங்கிக் கட்டிக் கொண்டவர்கள்.

'இவளுக்கு இனிமேல் சென்ட நாள் செல்லாது பிள்ள. இண்டைக்கு நாளைக்குச் சமைஞ்சு போவாள் பெட்ட. ஆளப்பார்! திமுக்குத் திமுக்கெண்டு! குமருகள் மாதிரி நல்ல கொழுப்பு வச்சித்து. இவள்ற நெஞ்சையும் நெளிப்பையும் பாரன்....!?'

பக்கத்து வீட்டுக்காரி அரியத்தைப் பற்றி இப்படி சொன்னால்... நல்ல பரிசு கிடைக்கும்.

கிழவியைப் பார்த்து உதட்டை மடித்து 'வவ்வவ்வே.... உனக்கென்ன கிழடி! நீ உன்ட வேலயப் பார்! அவக்கு கோப்பித்தூள் குடுத்தாத்தான் நல்லம்... இல்லையெண்டால் எரிச்சல்!'

கிழவிக்கு அசடு வழிய அதை மனைவி துடைக்க நான் சாடையாகச் செரும அத்தோடு முடியும் அது.

கிழவி சொன்னது சரிதான். இனிமேல் சென்ற நாள் செல்லாது. அரியம் சமையப் போகின்றாள். அவள் பெரிய மனிஷியாகப் போவதை எண்ணிக் கிழவியும் நாங்களும் ஏன் வருத்தப்பட்டுக் கொள்ள வேண்டுமோ? சந்தோஷப்படவும் முடியவில்லை. சமைத்ததும் அவளை அழைத்துப் போய் விடுவான் சாமித்தம்பி. அவள் போய் விட்டால்.... உத்தியோகம்.... குழந்தை வீடு...? இன்னொருத்தியைத் தேடி பழையபடியே காவடி....

'கௌரி...டாட்டா...காட்டுங்க டாட்டா'

குழந்தைக்கு விளங்கி விட்டது? அரியத்தை இறுகப் பற்றுகிறாள்.... சிணுங்கல் சிக்கி சிக்கி வெளிவருகின்றது.

'எங்கட பிள்ள நல்ல கௌரிக் குஞ்சு--ராசாத்தி.... ஆயோம் போயிற்று வாறன் ஆ... குழப்படி பண்ணாமல் அச்சாப் பிள்ளையா இருக்க வேணும்.... சரியோ.... எங்க பாப்பம்.... டாட்டா காட்டுங்க... வணக்கம் காட்டுங்க.....?'

'ஆ....ஆ......போதும் புறப்படு... பொழுது போகுது!' சாமித்தம்பி அரியத்தைத் துரிதப் படுத்துகிறான்.

'அரியம் சட்டையெல்லாம் எடுத்துக் கொள். சம்பளக்காசு பாக்கிகிடையாது! நீ பெரியவளான பிறகு தான் போவாய் என்று நினைச்சம். அதுக்குள்ள உன்ர அக்காட புருஷன் மெக்கானிக்கருக்கு மாணம் போகுதாம். அதுக்கென்ன நீ போகத்தானே வேணும். ஆனால் இப்படித் திடுதிப்பென்று உன்ர அப்பன் செய்வான் என்று நாங்கள் நம்பியிருக்கல்ல... கௌரிக்குத் தான் துணை இல்ல.... அவள் ஏங்கிப் போவாள்... ஆயோம்...ஆயோம்..... என்று உன்னத் தேடுவாள்! சரி சரி நீங்க கௌரியை அரியத்திடம் வாங்கி எடுங்க....?'

இதற்கு மேல் மனைவியால் பேச முடியவில்லை. அரியத்தைக் கட்டிக் கட்டிப் பிடிக்கும் கௌரியை வலுவில் பறித்தெடுக்கிறேன். அதைப் பார்த்து அவள் விம்முகிறாள். அதைப் பார்த்த நான்.....?

கௌரியைத் தேற்றிக் கொண்டே அறைக்குள் போகிறேன். அறையில் மூச்சு முட்டுகிறது. சட்டைப்பையுள் நுழைந்த கை வெளியேற விறாந்தைக்கு விரைகிறேன்.

கையில் பார்சலோடு தகப்பன் அருகில் விடைபெறக் காத்து நிற்கிறாள் அரியம். குழந்தை ஆயோம் என்று கூப்பிட்டுக் கொண்டே அவளிடம் தாவத் துடிக்கிறாள். இப்பொழுது அரியம் கௌரியை என்னிடமிருந்து வாங்கிக் கொள்ளவில்லை. மனைவியிடம் அவளைக் கொடுத்துவிட்டு.....

'அரியம் இதை வைத்துக் கொள். சந்தோஷமாகப் போய்வா! நீ நல்லபடியாக வாழ வேண்டும். கௌரிக்கும் எங்களுக்கும் நல்ல துணையாக இருந்தாய்...! இனிமேல் கௌரி புதிய துணை தேட வேண்டும்... அவள் ஏங்கிப் போவாள்...!' மேலும் பேச முடியவில்லை. நிலையில் சாய்ந்தபடியே கண்ணீர் பெருக்கும் மனைவி. அவளைப் பார்த்து விம்மும் குழந்தைகள். இடையில் அவர்களுக்கு [illegible]தாக நான்....

அரியத்தி[illegible] முகத்தில் எவ்வித உணர்வும் இல்லை.. அவ[illegible] கண்களிலும் கலக்கம் கிடையாது. அசைவற்று நிச்சலனமாக நின்ற அவள் தாயிடம் இருந்து குழந்தையை அணைத்து கடைசியாகக் கொஞ்சுகின்றாள்.

'கௌரிக்குஞ்சு இஞ்சப் பாருங்க. வடிவு காட்டுங்க... கவனம்! கோவங் காட்டுங்க.... அச்சாப்பிள்ள! டாட்டா.... வணக்கம்...! ஆயத்துக்கு டாட்டா காட்டுங்க... காட்ட மாட்டீங்களா....?'

.......................................................

திமிறி அழும் கௌரியை மார்போடு அணைத்தபடி விக்கி விக்கி அழுகிறாள் மனைவி.

சாமித்தம்பி வாசலில் இறங்கி நடக்கின்றான்.

'கௌரி டாட்டா....டாட்டா...'

சிரித்தபடியே கைகளை அசைத்து அரியம் கௌரியிடம் விடை பெற்றுக் கொள்கிறாள்.

'ஐயா... போயித்து வாறன் ஆ....'

'நளினி... வினு....ஊஜ்ஜி...

எல்லோருக்கும் போயித்து வாறன்...ஆ....'

ஒரு ஞானியைப் போல எவ்வித நெஞ்ச நெகிழ்வும் இல்லாமல் அரியம் எங்களிடம் விடை பெறுகின்றாள். வாங்கிய பணத்துக்கு அவள் கடமை முடிகின்றது.


பணத்திற்காகத்தான் அவள் எங்களோடு ஒட்டி இருந்தாளா? அதற்கு மேல்... அந்தப் பணத்திற்கு மேல் இந்த உலகில் வேறு ஒன்றுமே இல்லையா?

தனது பிஞ்சுக் கரங்களை அசைத்து அசைத்து 'ஆயோம்.... ஆயோம்' என்று கௌரி அரியத்தைக் கூப்பிடுகிறாள். திரும்பிப் பார்த்து கைகளை ஆட்டிச் சிரித்தபடியே தெருவில் இறங்கிய அரியம்? அந்த இளவரசி தன் ஊரை நோக்கி- தனது விதியை நிச்சயித்தவளாக, உறுதியாக நடந்து அவள் அப்பனைப் பின் தொடர்கிறாள்.

அரியம், அவள் போகவேண்டியவள் தான் என்பதை இன்னும் சில நாள்களில் கௌரியும் தெரிந்து கொள்வாள். அதுவரை......?

★★★

## சொற்சிலம்பம் - போட்டி இல: 81



அனுப்புபவர் பெயர்:......................................

விலாசம்:......................................

......................................

கையொப்பம்:......................................

### மேலிருந்து கீழ்

1. முகத்துக்கு முன்னால் நல்லது கூறுவது
2. வெயில் காலத்தில் தூரத்து வீதியில் தோற்றும் நீர்த்தன்மை.
3. ஒரு தூர அளவீட்டு அலகு.
4. சுவைகளில் ஒன்று
5. இது ஒரு வியாதி. திடீர் திடீரென எதிர்பாராமல் தாக்கும்.
8. பெண்களை மரியாதையாக அழைப்பது இப்படி.
10. இனிப்பானது. இது தின்னக் கூலியா?
11. ஆந்திராவில் புகழ் பெற்ற புண்ணியத்தலம். இங்குசெல்வோர் மொட்டையடிப்பது வழமை.
12. இரும்பில் பிடிப்பது.
13. நாற்பது திருடர்களின் தலைவன்.
14. மென்மையானது. தலையணைக்குள்ளும், மெத்தைக்குள்ளும் இருப்பது.
15. தாங்கள்
16. பிழை அல்ல
17. வரி.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 81**
**நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,**
**இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 14.10.2009 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல. 81இல் வெற்றிபெறுவோர்களது விவரம் 18.10.2009 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

### இடமிருந்து வலம்

1. நிர்வாகம் தொடர்பான ஒரு கற்கைத் துறை
6. தீ/ நெருப்பு
7. நோவு
9. ஒரு யுத்தவகை விளையாட்டு.
10. வயிற்றில் சூல் கொண்டால் இப்படிக் கூறுவர்.
11. பாதையை அல்லது திசையை மாற்று
12. இது சிறிதானாலும் பல குத்தக்கூட உதவும்
13. கன்னை/ குழு
14. சைவச் சாப்பாட்டில் இந்த தானியக் கறிக்கு முக்கிய இடம்.
15. பெண்ணுக்கு இது வேலியாமே?
16. உழைத்துப் பெறு.
18. அசுத்தம் நீக்கு.
19. இறுகிய பெரிய கல்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 79 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) அசுவத்தாமன் (6)கழல் (7)சுரை (9)வல்லவன் (11)படி (12)ரகு (13)சடுதி (14)அசுத்தம் (16)பாலை (17)தம்பதி (19)தகவல் (21)வம்பு (23)கிள்ளை (24)அம்புலி

**மேலிருந்து கீழ்**

(1)அகவல்(2)சுழல்(3)வல்லரசு(4)தாசன் (5)மரை (8)கடிதில் (10)வகுத்தல்(11) படு(13)சம்பவம் (14) அலைகள் (15)தம் (16)பாதகி (18) திம்பு(20) வளை (22) புலி

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 79 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விபரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** — சி. அனுசா, திருக்குடும்ப கன்னியர் மடம், நாரந்தனை

**2 ஆம் பரிசு** — இ. றதிக்குமார், 2ஆம் ஒழுங்கை, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

**3 ஆம் பரிசு** — வாகினி கிருபாகரன், இல:6, சேர்.பொன். இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) வி. செல்வநாயகம், சிவ[illegible], புத்தூர்.

(2) சின்னத்தம்பி ஜெயராஜா, உடுவில் தெற்கு, சுன்னாகம்.

3) க. கிரிசாந்தி, [illegible], 4ஆம் வட்டாரம், வேலணை.

(4) எஸ். கரிமுகன், கோண்டாவில்மேற்கு, கலட்டி ஒழுங்கை கோண்டாவில்.

(5) திருமதி இராசதுரை பவளமணி, இல: 283, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அருமையான பயன்தரும் எமது வளங்களை பிரதான உற்பத்தித் துறைகளில் பயன்படுத்துவோம்

வளங்கள் அருமையானவை; வரையறுக்கப்பட்டவை. அவற்றை உத்தம பயன்பாட்டுக்கு உட்படுத்துதல் தான் பொருளாதாரத்தின் தேவைப்பாடாகக் கூறப்படுகின்றது.

இதை முற்றாக உணர்ந்த சமூகங்கள் மற்றும் நாடுகள் தான் வளர்கின்றன; நன்றாக வாழ்கின்றன. உலகில் உதாரணமாக உச்சரிக்கப்படுகின்றன.

நாம் என்ன நிலையில் உள்ளோம்



என்பதை சுய விமர்சனம் செய்வோமாயின் புதிதாக நிறைய விடயங்களைக் கண்டு பிடிக்கலாம். நாமும் வளரலாம்.

எம்மை அறியாமலே நாம் செய்யும் ஒரு வள விரயத்தை உதாரணத்திற்கு இங்கு பார்ப்போம்.

எமது பிரதேசத்தில் விவசாய்த்துறைக்கு அளவுக்கு மிஞ்சிய செயற்கைப் பசளைகள் பாவிக்கப்படுவதாகவும், இதனால் நிலத்தடி நீர் நஞ்சடைவதாகவும் பரவலாகக் குற்றம் சாட்டப்படுகின்றது.

கிருமி நாசினிகள் மற்றும் களை கொல்லிகளின் பாவனையும் அதீதமாக இருப்பது இக் குற்றச்சாட்டுக்கு வலுச் சேர்க்கிறது. எமது பிரதேசத்தில் புற்று நோயாளர்களின் தொகையும் வருடா வருடம் அதிகரித்துச் செல்வதை பிரதேச செயலகங்களில் நோய் உதவிப் பணம் பெறுபவர்களின் தொகையின் உயர்வு மூலம் தெளிந்துணர முடிகிறது.

இயந்திரமான வாழ்க்கை முறைகள் இயற்கையுடன் இணைந்த எமது வாழ்வியலின் பல விடயங்களுக்கு விடை கொடுத்ததால் நாம் அனுபவிக்கும் துன்பங்களில் இதுவும் ஒன்று.

பழைமைக்குத் திரும்பிப் போதல் என்ற கோஷம் ஆரோக்கிய வாழ்வு குறித்து வலியுறுத்தும் மனிதர்களால் உரக்கக் கூறப்படுகின்றது.

இயற்கைப் பசளைப் பிரயோகத்தை விவசாயத்துறையில் மீண்டும் பாவனைக் குட்படுத்தப்பட வேண்டும் என்ற கோஷம் அண்மைக் காலமாக வலுக்கத் தொடங்கியுள்ளது.

விவசாயத் திணைக்களமும் இதனை ஊக்குவிப்பதற்காக முதற்கட்டமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரை ஏக்கர் வீதம் சணல் பயிரிட இலவசமாக விதைகள் வழங்கி ஊக்கிவித்தது. 25 வகையான இயற்கைப் பசளைகளை உற்பத்தியாக்கும் நிகழ்ச்சித் திட்டத்தை விவசாயத் திணைக்களம் தற்போது நடைமுறைப்படுத்தி வருகின்றது. அந்த வகையில் வருகின்ற 2010 ஆம் ஆண்டில் செயற்கைப் பசளை யான உரத்தின் பாவனையை 25 வீதத் தால் குறைப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இதற்காகப் பயிற்சி வகுப்புக்களையும் திணைக்களம் நடத்தி வருகின்றது.

எமது பிரதேசத்தில் இயங்கும் அரச, தனியார், அரச சார்பற்ற நிறுவனங்களின் காணிகளில் சேரும் இலைகள், சருகுகள் என்பவை இயற்கைப் பசளையாகப் பயன்படக்கூடியவை. அவை வெறுமனே எரியூட்டப்பட்டு அழிக்கப்படுவதைக் காணமுடிகின்றது.

எரியூட்டாமல் தூய்மையான முறையில் இயற்கைப் பசளையாக வழங்கும் முன்மாதிரியான ஒரு அரச அலுவலகமும் எமது பிரதேசத்தில் இயங்கி வருவதைச் சுட்டிக் காட்டித் தானாக வேண்டும். குப்பையை எருவாகக் கருதும் அந்த நிறுவனத்தில் நாளாந்தம் சேரும் இலை, குழை, சருகுகள் அந்நிறுவன சிற்றூழியர்களால் சேகரிக்கப்படுகின்றது. பிளாஸ்ரிக், பொலித்தீன், இரும்பு உலோகங்கள், கல் போன்றவை சேராமல் நூறு வீதம் தூய்மையாகச் சேர்க்கப்படும் இவ் இயற்கைப் பசளை கணிசமான விலைக்கு விவசாயிகளுக்கு விற்கப்படுகின்றது.

விற்று வரும் வருமானத்தில் 75 வீதம் அந்த ஊழியர்களுக்கே சன்மானமாக வழங்கப்படுகிறது. மிகுதி 25 வீதம் அந்த அலுவலக வளாகத்திலுள்ள கோயிலின் பூசைச் செலவுகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றது.

இந்த ஊக்குவிப்புச் சன்மானம் அந்த ஊழியர்களுக்கு மிகுந்த உற்சாகத்தையும், வேலையில் அக்கறையையும் கொடுப்பதால், அவர்கள் வேலை நாள்களில் காலை, மாலை இரு வேளையும் அலுவலக வளவைக் கூட்டிப் பெருக்குகின்றனர். அதனால் அந்த வளாகம் எப்போதுமே ''பளிச்'' என்று தூய்மையாக இருப்பதைக் காண முடியகின்றது. இதனால் அந்த ஊழியர்களின் குடும்பங்களின் வாழ்க்கைச் செலவுக்கும் குறிப்பிட்ட ஒரு தொகைப் பணம் மேலதிக வருவாயாகக் கிட்டுகிறது. இத்தகைய தொரு பயனுள்ள முடிவை மேற்கொண்டு அனைத்து உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புடனும் நடைமுறைப்படுத்தி வரும் குறிப்பிட்ட அந்தத் திணைக்களத் தலைவரைப் பாராட்டித்தான் ஆக வேண்டும்.

## இயற்கைப் பசளைகளுக்கு முதலிடம் வழங்கி விவசாயத்தைப் பெருக்கலாம்

நல்ல நோக்கத்துடன் செய்யப்படும் இக் கைங்கரியம் நுணுக்கம் பார்த்து பிழைபிடித்து தடுக்கப்பட்டு விடக் கூடாது என்பதற்காக குறிப்பிட்ட அந்த அரச அலுவலகத்தின் பெயர் விவரங்கள் இங்கு குறிப்பிடப்படவில்லை.

இந்தச் சிறந்த முன் மாதிரியைப் பின்பற்றி விவசாயத் துறைக்கு வளம் சேர்த்து நாம் நோயற்ற வாழ்வு வாழ உதவும் விதத்தில் செயற்பட ஏனைய நிறுவனங்களும் முன்வர வேண்டியது அவசியமாகும்.

இயற்கைப் பசளை தொடர்பாக அனுபவம் மிக்க விவசாயிகளின் கருத்து இது. ''பயிர்வகைகளுக்கு உரம் போடுவது வெறும் தேநீர் குடிப்பதைப் போன்றது. குப்பை, குழை, எரு போடுவது பால் குடிப்பது போன்றது''

ஏனெனில் வெறும் தேநீர் உடலுக்கு சிறிது நேர உற்சாகத்தைத் தான் தரும். அதுபோல செயற்கை உரங்கள் தற்காலிக - உடனடிப் பயனை மட்டுமே தரவல்லன. ஆனால் இயற்கைப் பசளையைப் பயன்படுத்தி விளைவிக்கும் தானியங்கள் மற்றும் மரக்கறிகள் உடலுக்கு நிறைந்த பலத்தைத் தரும். பால் போல பயிர்களுக்கு நிறைந்த பலத்தைத் தந்து மண்ணுக்கு வளம் சேர்க்கிறது.

தென் பகுதியில் விளைவிக்கப்படும் நெல், செயற்கை உரத்தை மட்டுமே ஆதாரமாகக் கொள்வதால் அந்த நெல்லின் அரிசிக்கஞ்சி கசப்பாயிருக்கும்.

ஆனால் எமது பிரதேச வயல்கள் குப்பைகள், இயற்கை எரு சேர்த்து உழவு செய்யப்பட்டு விதைக்கப்படுவதால் எமது நெல் அரிசிக் கஞ்சி, சோறு என்பவை சுவை மிக்கவை. உடலுக்கு நன்மை தருபவையாக அமைகின்றன.

விவசாயிகளின் இப்பட்டறிவின் மெய்மைத் தன்மை எமக்கு வெளிப்படுத்தும் செய்திகளை நாம் சரியாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

யாழ். மாநகர சபை நிர்வாகம் கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்னர் நகரின் பல பகுதிகளிலும் 3 பெரிய பிளாஸ்டிக் வாளித்தொகுதிகளை வைத்து அவற்றுள் கழிவுப் பொருள்களை இடுமாறு அறிவுறுத்தியிருந்தது. முதலாவதில் போத்தல் வகைகளையும், இரண்டாவதில் பிளாஸ்டிக் கழிவுகளையும், மூன்றாவதில் குப்பைகளையும் போடுமாறு மக்கள் கோரப்பட்டிருந்தனர். இயற்கைப் பசளையை விவசாயத்துறைக்கு வழங் கவும், சுற்றுச் சூழலைப் பாதுகாக்கவும் அப்போதைய மாநகர சபை நிர்வாகம் எடுத்த அந்த முயற்சி பாராட்டுதற்குரியதே.

ஆயினும் நடந்தது என்ன? அப் பிளாஸ்டிக் வாளிகளின் பிடிகளாக இருந்த உலோகத்தை உடைத்து களவாடிய ஒரு சிலரின் அநாகரிகப் போக்குக் காரணமாக அம் முயற்சி தோல்வியடைய நேர்ந்தது.

எமக்குத் தேவைப்படும் வளங்களை விலை கொடுத்து இறக்குமதி செய்வதை விடுத்து, எம் மத்தியில் இருந்து நாமே பெற்றுக் கொள்ளும் முன் மாதிரி முயற்சிகளை சகலரும் பின்பற்றிப் பயனடையச் செய்வதற்கு இதனூடாக இப் பணிவான வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது.

வாருங்கள், நம்மிடமுள்ள வளங்களைப் பயன்படுத்தி எம்மை நாமே வளம் பெற வைக்க ஒன்றிணைந்து முயல்வோம். ✱

– மருதன்


# தண்டனை தீர்ப்பு அல்ல

கிறிஸ்துவுக்குள் வாழ்ந்து அவருடைய சொத்துக்கு ஒருவர் உரிமையாளர் என்றால், கிறிஸ்துதானே அவர் பக்கமாய் நின்று பரம தகப்பனுக்கு முன்னால் அவருக்காகப் பரிந்து பேசுகிறார். இதற்கு மேல் நாம் என்ன சொல்வது? கடவுளை நாம் சார்ந்திருக்கும் பொழுது நம்மை எதிர்த்து நிற்பது யார்? எவ்வளவுதான் ஒருவர் பாவியாயிருந்தாலும் தாழ்ந்தவராயிருந்தாலும் கிறிஸ்துவுக்குள் வாழும் பொழுது கிறிஸ்துதானே அவருக்கு வக்கீலாகப் பரம தந்தையிடம் வாதாடுகின்றார். நம்மை எதிர்த்து நம்மைப் பற்றிக் குறை சொல்வதற்கு எத்தனையோ பேர் இருக் கலாம். கடவுளுக்கு முன்னால் கூடச் சாத்தான் நம்மைப் பற்றி பல குற்றச்சாட்டுகள் கொண்டு வரலாம். ஆனால், இத்தனை குற்றச்சாட்டுக்களையும் எதிர்த்து, நமக்காக இயேசு, பரம தகப்பனிடத்திலே சிபாரிசு செய்கிறார்.

''கடவுளால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்களுக்கு எதிராய் எவன் குற்றம் சாட்டக்கூடும்? அவர்கள் குற்ற மற்றவர்கள் என்று கடவுளே சொல்லும்போது, தண்டனைத் தீர்ப்பு கூறுபவர் யார்? கிறிஸ்து இயேசு நமக்காக உயிர் நீத்தார்; ஏன், உயிர்ப்பிக்கவும் பெற்றார். இந்தக் கிறிஸ்துவே கடவுளின் வலப் பக்கத்தில் இருந்து நமக்காகப் பரிந்து பேசுகிறார். ஒரு நாள் பாவத்தில் பிடிபட்ட ஒரு பெண்ணை பரிசேயர்கள் இயேசுவுக்கு முன்னால் கொண்டு நிறுத்தினார்கள். [அரு.8:1-11] இவள் விபச்சாரத்தில் பிடி பட்டவள் என்றும், சட்டத்தின்படி இவளைக் கல்லால் எறிந்து கொல்ல வேண்டும் என்றும் அந்த ''பெரியவர்கள்'' அந்தப் பாவிப் பெண்ணைப் பற்றி குற்றம் சாட்டினார்கள். இயேசுவோ பேசாதிருந்தார்.

ஆனால், திரும்பத் திரும்பப் பரிசேயர்கள் அந்தப் பெண் மேல் குற்றம் சாட்டினார்கள். அவளைக் கல்லால் எறிந்து கொல்ல இயேசு தீர்ப்பிடுவார் என்று எதிர்பார்த்தனர். ஆனால் இயேசு, சிறிது நேரத்திற்குப் பிறகு, ''உங்களில் பாவமில்லாதவன் முதலில் அவள் மேல் கல் எறியட்டும்'' என்றார். இயேசு திரும்பவும் பேசாதிருந்தார். குற்றம் சாட்டியவர்கள் அந்த இடத்தை விட்டு நழுவி விட்டார்கள். அந்தப் பெண் மட்டும் அங்கே நிற்பதைப் பார்த்து, ''பெண்ணே எங்கே அவர்கள்? உனக்கு யாரும் தீர்ப்பிடவில்லையா?'' என்று கேட்டார். ''ஒருவரும் தீர்ப்பிடவில்லை'' என்று அவள் சொன்னாள். ''நானும் தீர்ப்பிடேன்'' என்று சொல்லி அவளை ஆறுதல்படுத்தினார்.

இதில் நமக்கு ஒரு பெரிய உண்மை வெளியாகிறது. இயேசு மிகுந்த இரக்கம் உள்ளவர். எத்தனையோ பேர் அந்தப் பெண்மணிக்கு எதிராகக் குற்றச்சாட்டுகளைக் கொண்டு வந்த போதும், அந்தப்பாவிப் பெண்ணின் பக்கமாக பரிந்து பேசினார். குற்றம் சாட்டியவர்கள் எல்லோரும் தோற்கடிக்கப்பட்டவர்கள். கடவுளுக்கு முன் அந்தப் பெண்மணி ஏற்றுக் கொள்ளப்படுகிறாள். அவளுடைய குறைகள் மன்னிக்கப்படுகின்றன. இயேசுவே அவள் சார்பில் நின்று விரோதிகளை முறியடித்து விடுகின்றார். ''கிறிஸ்துவுக்குள்'' என்று சொன்னால் இதுதான் அர்த்தம்!




எத்தனை பாவியாக இருந்தாலும் அவர்களுக்காக கிறிஸ்து கடவுளிடம் பரிந்து பேசி இரக்கத்தைக் காண்பிக்கின்றார். ஆகவே, கிறிஸ்துவுக்குள் ஒருவர் வாழ்கிறார் என்றால், அவர் கடவுளின் இரக்கத்தைப் பெற்றவர், மீட்பைப் பெற்றவர் ஆகின்றார்.

அருட் தந்தை வி. [illegible]

# புற்றுநோயை முன்னரே கண்டறியும் வல்லமை நாய்களிடம்



மோப்ப சக்தியால் புற்று நோயைக் கண்டு பாயும் நாய், கல்லால் அடித்துக் கொல்லாமல் நாயைப்பற்றி அறிய நிறைய உண்டு.

புற்றுநோயைக் கண்டறிவது மருத்துவ உலகிற்குக் தொடர்ந்து சிரமமான விடயமாகவே உள்ளது. பலருக்குப் புற்றுநோய் முற்றிய பின்பே வைத்தியம் ஆரம்பிப்பதால் மரணங்கள் அதிகரிப்பதும் பெருகி வருகிறது. இந்த நிலையில் முன்கூட்டியே புற்றுநோயைக் கண்டறிய நாய்களின் மோப்ப சக்தியைப் பாவிக்கும் கலை அமெரிக்கா உட்பட ஐரோப்பிய நாடுகளில் வேகமாகப் பரவி வருகிறது.

உடலில் புற்றுநோய் ஏற்பட்டால் ஒருவிதமான மணம் காற்றில் தவழும். இதை மனிதர்களின் மூக்கினால் கண்டறிய இயலாது. ஆனால் மோப்ப சக்தி மிக்க நாய்கள் இந்த வேறுபாட்டை உடனடியாகக் கண்டறியும் ஆற்றல் உள்ளவையாக விளங்குகின்றன.

இதன் பொருட்டு 83 புற்றுநோய் ஏற்பட்ட நோயாளிகளும், 83 புற்று நோயற்றவர்களும் கலந்து நிறுத்தப்பட்டனர். இவர்களில் புற்று நோயுள்ள 83 பேரையும் சரியாக அடையாளம் கண்டுள்ள நாய்கள், மனிதரில் புற்றுநோய் மணம் வீச ஆரம்பித்ததுமே நாய்கள் சுமார் 88 முதல் 99 வீதம் சரியாகக் கண்டு பிடிப்பதாகவும் நிபுணர்கள் கூறியுள்ளனர்.

நாய்களில் பல்வேறு இனங்கள் உண்டு. இவற்றில் சிறப்பாக மோப்ப சக்தி கூடிய ஐந்து இனங்களைப் பயன்படுத்தலாம் என்று கூறும் ஆய்வாளர் அவற்றின் பெயர்களையும் அறிமுகம் செய்துள்ளனர். நாய்களின் மோப்ப சக்தியால் வைத்தியருக்கு முன்னரே புற்றுநோயைக் கண்டறிய முடிந்தாலும்கூட புற்றுநோய்களில் உள்ள வேறுபாடுகளைக் கண்டறிய இயலாது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இது குறித்து கருத்துரைத்த புளோரிடாவைச் சேர்ந்த ஒரு பெண்மணி கூறும்போது, தனது நாய் தனது வலது புற மார்பகத்தை நோக்கித் தொடர்ந்து பாய்ந்த வண்ணமிருந்ததாகக் கூறினார். அதன் பின்னர் வைத்தியசாலை சென்று பரிசோதித்தபோது தனக்கு அந்த மார்பகத்தில் புற்றுநோய் இருப்பது தெரியவந்ததாகவும் தெரிவிக்கிறார்.

புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்தால் அவர்களுடைய வாழ்வை விரைந்து காக்க முடியும். இதுபோல நாய்களிடம் நாம் அறியாத பல்வேறு திறமைகள் உண்டு. அதை மேலும் கண்டறிய மேலும் பல ஆய்வுகள் தேவை. நாய்க்குப் பகுத்தறிவு கிடையாதெனக் கல்லால் வீசியடிக்காமல் அதுபற்றி அறிய முற்பட்டதால் கிடைத்த நன்மை இதுவாகும். ★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரவட்டச் செயலமர்வு பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், ஒக். 4

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தமிழ்மொழியும் இலக்கியமும் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இன்று சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெறவிருந்த தரவட்டச் செயலமர்வு மாகாண தமிழ்த்தினப் போட்டிகள் நடைபெறவுள்ளதால் எதிர்வரும் ஆறாந்திகதி பி.ப.2 மணிக்கு பிற்போடப்பட்டுள்ளது என்று வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (203-207)


வசீகரத் தோற்றத்திற்கு!

# சந்தனாலேப

(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)

வெண்சந்தனம், மரமஞ்சள், தங்கம்பட்டை, கஸ்தூரி மஞ்சள், செவ்வள்ளி ...




எடுப்பான கம்பீரத் தோற்றத்தைத் தரும்.

'சிவா நறுமணப் பூங்கா'

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சகல பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்).

MANUFACTURED BY: SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250.


## கண்ணீர் அஞ்சலி



யா/வியாவில் சைவ வித்தியாலயத்தின் பழைய மாணவனும், முன்னாள் தீவக வலயக்கல்விப் பணிப்பாளரும், தற்போதைய வலிகாம வலயக் கல்விப்பணிப்பாளருமாகிய ப.விக்னேஸ்வரனின் அன்பு மகன் செல்வன் விக்னேஸ்வரன் சுதர்ஸன் சிவபதமடைந்ததையிட்டு ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

யா/வியாவில் சைவ வித்தியாலயம், காரைநகர். பாடசாலைச் சமூகம். (89491)

## அறிவித்தல்

ஈசன்ஸ் அந்திய கால சேவை நிறுவனத்திற்கு வேறு முகவர்கள், பிரதிநிதிகள் வெளியில் ஒருவரும் இல்லை என்பதை அறியத் தருகின்றோம். எதற்கும் நேரடியாகத் தொடர்புகளை மேற்கொள்க.

**ஈசன்ஸ் அந்திய கால சேவை,**
148, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 2695

## 18 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 04 * 07 * 1924



இறப்பு 23 * 09 * 1991

**அமரர் S.R. பொன்னம்பலம்**
(ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர், கோவிலாக்கண்டி)

திதி:04.10.2009

இத்தாவர சங்கமத்துள் எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்.
உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
வீடு பேறு பெற்றவர்க்கு அஞ்சலிகள் பல.

மீசாலை. பொ. கனகநாயகி (மனைவி) (89420)


## ஆங்கில மற்றும் தகவல் தொழில்நுட்ப வருடம் 2009

"சமகால தகவல் தொழில்நுட்ப உலகுடன் நீங்களும் இணையுங்கள்"



- மாணவர்கள் (Grade 10, ICT, GIT)
- உயர் கற்கை நெறி மாணவர்கள்
- உத்தியோகத்தர்கள்
- தகவல் தொழிநுட்ப ஆர்வலர்கள்
- போட்டிப் பரீட்சைகளுக்கு தோற்றுபவர்களுக்கான

**இவ் வருடத்தின் மிகப் பிரமாண்டமான நிகழ்வு**

விரைவில் எதிர்பாருங்கள்

இலங்கையின் முதற்தர "சமகால தகவல் தொழில்நுட்ப நூல் வெளியீடும், தகவல் தொழிநுட்ப கருத்தரங்கும்"



## விற்பனைக்கு

பாவித்த கூரைத்தகரங்கள், ஒக்ஸ்போட் மைனர் கார்களின் காப்பெற் மற்றும் உதிரிப்பாகங்கள் T.V Stand, T.V. றேடியோ, பித்தளைப் பொருள்கள், பீங்கான், கிளாஸ் பொருள்கள் அலுமாரி, மேசை, வாங்குகள், டிக்சனறிகள் விற்பனைக்குண்டு.
115/1, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

கே.கே.எஸ்.வீதி, இணுவிலில் சுற்றுமதில், கிணற்றுடன் கூடிய 6 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
T.P.: 0778445323

## காணி விற்பனைக்கு

கண்டி வீதி, (A-9) வீதியின் கிழக்குப் பக்கமாகவும் கைதடி நாவற்குழி, ஒழுங்கையின் வடக்குப் பக்கமாகவும், கைதடி முதியோர் இல்லத்தின் எதிர்ப்புறமாகவும் 18 1/2 பரப்பு ''கோணாறி பிட்டி'' காணி விற்பனைக்கு உண்டு. ஒருமித்தும் அல்லது 4 துண்டுகளாகவும் பெற்றுக் கொள்ளலாம். விவரங்களுக்கு: சீ. அருண கிரிநாதன், GPS ஒழுங்கை, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். தொ.பே இல: 0776924182 உடன் தொடர்பு கொள்ளவும்.

## காணி விற்பனைக்குண்டு

அராலி மத்தி, வட்டுக்கோட்டையில் வீட்டுடன் கூடிய 15 1/2 பரப்புக் காணியும் நெல்வயற் காணியும் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0777404584

## திருமண சேவை

சுலபமான வாழ்க்கைத்துணை தெரிவுக்குச் சுய தெரிவு முறையே! சுயதெரிவு முறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த புகழ்பூத்த - சுயதெரிவுமுறை முன்னோடி- தனிமனித நிறுவுநர் - சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழு வேலமுதனுடன் தொடர்புகொள்க.
கொழும்பு நேரடித் தொலைபேசி: 2360488, 2360694, 4873929.

## வேலை ஆள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பான்சிக்கடை ஒன்றுக்கு வேலையாள்கள் (இருபாலாரும்) தேவை. முன்னனுபவம் உள்ளோர் விரும்பத்தக்கது. 7 நாள்களில் கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்: 153, ராஜா பான்சி, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.


## சாயிபாபா பஜனை

யாழ்ப்பாணம், ஒக். 4

சத்திய சாயி பாபா பஜனை பிரதி வியாழக்கிழமைகளில்மீசாலை வடக்கு, வேம்பிராயில் மாலை 4 மணி தொடக்கம் நடைபெற்று வருகிறது.

ஆசிரியை நாக நந்தினி நந்தகுமார் இல்லத்தில் வாராந்தம் நடைபெறும் பஜனையில் சாயி பக்தர்களைக் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (203-207)


## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், வயது 32, கிரக பாவம் 34 3/4, கடகராசி, ஆயிலியம் 4 ஆம் பாதம், செவ்வாய் தோஷம் அற்ற, 9 இல் செவ்வாய் உடைய, உயரம் 5'2" உள்ள, B.A.(Hons)படித்த, அழகான, பொது நிறமான, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் மணமகளுக்கு, 1973 ஆம் ஆண்டிற்குப் பின்பு பிறந்த, நற்பண்புள்ள, தகுதியான வெளிநாட்டு மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். U.K., Canada, U.S.A விரும்பத்தக்கது. தொடர்பு: அ.முத்துமாரி. 077 4934226

## அறை/வீடுகள் வாடகைக்கு

கொழும்பு, வெள்ளவத்தையில் AC/Non AC அறைகள், 2 அல்லது 3 அறைகளுடன் கூடிய வீடுகள் நாள் அல்லது மாத வாடகைக்குண்டு.
**Suriyan Rest,**
18/3, Station Road.
T.P.: 112581441, 112 556175

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்ப, 1979 ஆம் ஆண்டு, கிரக பாவம் 95, லண்டனில் M.B.B.S. படிக்கும் பெண்ணுக்கு மணமகன் தேவை.
தொடர்பு: 021 3218244


## கேதாரகௌரிவிரத பாமாலை நூல்

யாழ்ப்பாணம், ஒக். 4

கேதார கௌரி விரதத்தை முன்னிட்டு பாமாலை நூல் யாழ்.கே.கே.எஸ்.வீதியில் அமைந்துள்ளமில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தில் வழங்கப்பட்டு வருகின்றது எனத் தொழிலதிபர் இ.தவகோபால் அறிவித்துள்ளார். (204)


THE HALO TRUST

Srilanka Registered No. FL 49716

**Vacancy**

The **HALO** trust is seeking an experienced diesel mechanic. The applicant **MUST** have experience of heavy vehicles, plant and hydraulics.

Please send your Bio data on or before 06 th of October 2009

**வெற்றிடம்**

ஹேலோ ட்ரஸ்ட் நிறுவனத்துக்கு அனுபவமுள்ள டீசல் வாகன திருத்துனர் தேவை.

விண்ணப்பதாரி கனரக வாகனங்கள், சாதனங்கள் மற்றும் கைரோலிக் (Hydraulics) துறையில் அனுபவம் பெற்றிருத்தல் அவசியம்.

உங்கள் விண்ணப்பங்களை 06.10.2009 அன்று அல்லது அதற்கு முன்னர் பெறக்கூடியவாறு அனுப்பவும்

The Programme Manager.
The HALO Trust.
12, Nallur Cross Road,
Nallur, Jaffna. (89507)



# IMMEDIATE VACANCIES

## SALES REPRESENTATIVES/ EXECUTIVES - (NOTHERN PROVINCE)

- More than 2 Years experience in paints or Hardware field
- Age below 35 Yrs.
- A pleasant personality Fluent in Tamil / English languages
- Communicate in Sinhala language would be an advantage
- Should have a valid Driving Licence
- Candidates living in **Jaffna area** will be given preference

## SALES REPRESENTATIVES / EXECUTIVES - (ALL ISLAND)

- Minimum 2 Years experience in paints or Hardware field
- Age below 35 Yrs
- Fluent in English language
- Communicate in Tamil language would be an advantage
- Should have a valid Driving Licence
- Willing to work in any part of the island.
- Should be a self- motivated and result oriented professional


Apply with complete CV and **indicating the post and the district** on the top left hand corner of the Envelope or in subject line of e-mail / fax to reach us within 7 days to the address below.

C.P.T.
General Manager,
**CAUSEWAY PAINTS Lanka (Pvt) Ltd.**
15, Noel Mendis Mawatha, Modarawila Industrial Estate, Panadura.
Fax - 038-2240046 E-mail - luxury@sltnet.lk

LUXURY EMULSION PAINT | KENLUX SYNTHETIC ENAMEL | Colour box | DEBEER CAR-REFINISHES OVER 50,000 COLOURS | Sunny Auto HI-BUILD LACQUER


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தைத் துண்டாட கலைஞர் திட்டம்!



தமிழகத்தை இரண்டாகப்பிரிப்பது என்பது கலைஞர் கருணாநிதியின் மனதில் என்றோ உருவான திட்டம் என அவரது எதிரிகள் கூறி வந்துள்ளனர். மன்னராட்சிக் காலத்தில் தனது புதல்வர்களுக்கு ராஜ்யத்தை பங்கிட்டுக் கொடுக்கும் சக்கரவர்த்திகள் பாணியில் கடைசியில் கலைஞர் தமிழகத்தை துண்டாடுவார் எனப் பலரும் எதிர்வு கூறி உள்ளது குறிப்பிடத்தக்கது. வட தமிழகத்தை ஸ்டாலினுக்கும் தென் தமிழகத்தை அழகிரிக்கும் கையளிக்கும் திட்டத்தை செயற்படுத்த கலைஞர் தருணம் பார்த்து இருப்பது கண்கூடு. இந்த பின்னணியில் தமிழகத்தின் தென்மாவட்டங்களைப் பிரித்து தென் தமிழகம் என்ற புதிய தனி



மு.க.அழகிரி

மாநிலத்தை உண்டாக்க வேண்டுமென டாக்டர் சேதுராமன் என்பவர் தலைமையி லான அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது. அண்மையில் இது குறித்த கூட்டங்களும் தென் தமிழகத் தின் சில மாவட்டங்களில் நடந்துள்ளன.

தென் தமிழகத்தின் மாவட்டங்களிலி ருந்து தலைநகர் சென்னை மிகத் தொலைவில் இருப்பதால் பல்வேறு நிர்வாக கருமங்களையும் தேவைகளை யும் நிறைவேற்ற தென்மாவட்ட மக்கள் நெடுந்தொலைவுப் பயணம் செல்லும் நிர்ப்பந்தம் உள்ளது. மேலும் சகல தொழிற்சாலைகளும் சென்னையைச் சுற்றியே அமைவதால் வேலைவாய்ப்பும் அங்குதான் அதிகமுள்ளது. இதனால் தென்மாவட்டமக்கள் பெருவாரியாக சென்னை நோக்கி குடிபெயர்ந்து வருகின்றனர். இதனால் சென்னையில் இடநெருக்கடி குடிநீர் தட்டுப்பாடு, சூழல் மாசுபடல் என இன்னோரன்ன பிரச்சினை கள் ஏற்படுகின்றன. இவற்றுக்கெல்லாம் ஒரே தீர்வு தென் தமிழகம் என்ற தனி மாநிலத்தை உண்டாக்குவதே என்கின் றனர் இந்த தென் மாநிலக் கோரிக்கை யின் ஆதரவாளர்கள்.

அரசியல் விஞ்ஞானத்தின் சித்தாந்த அறிஞர்களின் கருத்துப்படி கூட அரச இயந்திரம் மக்களுக்கு மிக அண்மித் ததாக இருக்கவேண்டும் என்பது விரும் பத்தக்கதே. எந்த ஒரு சிறு நிர்வாக கடமைக்காகக் கூட நெடுந்தொலைவில் உள்ள தலைநகருக்கு செல்லும் நிர்ப்பந்தம் ஏற்கத்தக்கதல்ல. இதன் அடிப்படையில் பார்த்தால் இந்தியாவில் பல மாநிலங்கள் பிரிக்கப்பட்டு புதிய மாநிலங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்பது நியாயமான கோரிக்கைதான். ஆந்திராவிலிருந்து தெலுங்கானா, மகாராஷ்டிராவில் இருந்து விதர்பா, உத்தரப்பிரதேசத்தின் கிழக்கில் பூர்வாங் கல், மேற்கில் பண்டல்காண்ட் என மாநிலங்களை பிரிப்பதற்கான கோரிக்கைகள் நீண்ட நெடுங்காலமாக அந்த பிராந்திய மக்களால் முன்வைக்கப் பட்டு வருகின்றன.

தமிழகத்தின் தென்பகுதியை தனி மாநிலமாக்க வேண்டும் என்பதற்கான அரசியல் இணக்கம் எதுவும் இதுவரை வெளிப்படையாக தொடங்கப்பட வில்லை. ஆனால், இது நெடுந்தொலை வில் இல்லை என்பது கவனிக்கப்பட வேண்டும். தமிழகத்தின் வட மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது தென் மாவட்டங்களுக்கு தனித்துவமான பல பிரச்சினைகள் உள்ளன. தூத்துக்குடி, நாகர்கோவில், ராமநாதபுரம் ஆகிய கடலோர மாவட்டங்களில் இலங்கைக் கடற்படையுடனான தமிழக மீனவர்களின் பிரச்சினை ஒரு தனித்துவமான பிரச்சினை ஆகும். இது பற்றி காத்திர மான வகையில் எந்த தமிழக அரசியல் கட்சியும் செயற்படுவதில்லை. கிட்டத்தட்ட மாற்றாந்தாய் மனப்பான்மை என்ற ஒன்று மறைமுகமாக சென்னை ஆட்சியினரால் இம்மாவட்டங்கள் விடயத்தில் கையாளப்படுவதும் ஓரளவு உண்மையே. குறிப்பாக தென் மாவட்டங் களில் பெரும் செல்வாக்குடைய கட்சியான அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் எம்.ஜி. ஆர் இறந்த பிறகு இந்த பகுதியின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை எடுக்கவில்லை. ஜெயலலிதா தான் போட்டியிடும் தேனிமாவட்டத்தில் மட்டும் ஆங்காங்கு தான் வெல்லும் நோக்கில் அபிவிருத்தி செய்துள்ளார். மற்றப்படி மேலே ஏறுவதற்கு ஏணியாக இம்மாவட்டங்களை பாவித்து விட்டு பின்பு எட்டி உதைப்பதான வழக்கமான அரசியல் பாணியைத் தான் பின்பற்றி வந்துள்ளார். தென்மாவட்டங்கள் இன்றேல் அ.தி.மு.க ஆட்சி இல்லை என்று கூறுமளவுக்கு அ.தி.மு.கவுக்கு

## எஸ். சுரேந்திரஜித்

காலத்துக்குக்காலம் கைகொடுத்து வந்த மாவட்டங்கள் தென்மாவட்டங்களாகும். சிவகங்கை, திருநெல்வேலி, விருதுநகர், ராமநாதபுரம், நாகர்கோவில், தூத்துக் குடி, மதுரை ஆகிய தென் மாவட்டங்கள் தான் அ.தி.மு.கவின் கோட்டைகளாகும். எம்.ஜி.ஆரின் மறைவின் பின் அ.தி.மு.க இரண்டாக உடைந்தபோது 1989 தேர்தலில் ஜானகி அணியில் வென்ற ஒரே ஒருவர் திருநெல்வேலி யின் சேரன் மாதேவி தொகுதி பி.எச். பாண்டியன் ஆவார். ஜெயலலிதா அணி பெற்ற 32 தொகுதிகளில் மூன்றில் இரண்டுக்கு மேல் தென்மாவட்டங்களில்தான் இருந்தன. இவ்வளவு இருந்தும் ஜெயலலிதா சென்னைக்கும் வடக்குக் கும் தான் முக்கியத்துவம் கொடுத்தார். இதனால் தி.மு.க கோட்டையாக இருந்த பல வடமாவட்டங்களில் அ.தி.மு.க வென்றது உண்மைதான். ஆனால், இதற்கெல்லாம் காலாக இருந்த தென்மாவட்டங்களை அவர் புறக்கணித்தது மன்னிக்க முடியாத தாகும். அதற்கான தண்டனையை அவர் சமீப தேர்தல்க ளில் பெற்று வருகின்றார். உதாரணமாக நடந்துமுடிந்த லோக்சபா தேர்தலில் தெற்கே உள்ள தொகுதியான சிதம்பரம் போ[illegible] தவிர வேறெந்த தொகுதியிலும் அ.தி.மு.க வினால் கணிசமான வாக்குகளைப் பெறமுடியவில்லை. ஜெயலலிதாவின் ஆண்டிப்பட்டி தொகுதி அடங்கிய தேனி தொகுதி கூட காங்கிரஸ் கட்சி வசமானது.

மறுபுறம் கருணாநிதி திட்டமிட்டு அழகிரியை மதுரையில் தங்க வைத்து அவரது செல்வாக்கை அதிகரிக்கும் நோக்கத்துடன் வியூகம் வகுத்து வருகிறார். அழகிரியும் தன்பாட்டுக்கு ஜனரஞ்சக அரசியல் செய்து தனது இமேஜை உயர்த்தும் பணியை கச்சிதமாக நிறைவேற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

மதுரை என்றால் எம்.ஜி.ஆர் கோட்டை என்றிருந்த காலம் போய் அழகிரியின் கோட்டை என்ற பெயர் வலுப்பெற்று வருகிறது. வடமாவட்டங்களில் பெறாத வெற்றியை தெற்கே தி.மு.க சமீபகாலங்களில் பெற்றுவருவதற்கு இந்த வியூகங்களே காரணம். தென் மாவட்டங்களில் செல்வாக்குப் பெற்ற மற்றிரு கட்சிகளான காங்கிரஸும் ம.தி.மு.கவும் இவற்றைக்கண்டு செய்வதறியாது திகைத்துப் போயுள்ளன. உண்மையில் வைகோ நினைத்தால் வடக்கைக் கைவிட்டு தெற்கில் முதல்வராகும் வகையில் உழைக்க அவரால் முடியும். ஆனால், ஒரே மாநிலம் என்ற கொள்கையை அவர் விடத் தயாரில்லை என்று தெரிகிறது. தென்மாவட்டங்களில் இருந்து அ.தி.மு.க. பெற்ற நன்மையைப் போலவே நன்மை அடைந்த மற்றொரு கட்சி காங்கிரஸாகும். ஆனால், வழக்கம் போல வாக்கை மட்டும் பெற்று விட்டு வாளாவிருக்கும் அக் கட்சியினர் படிப்படியாக செல்வாக்கிழந்து வருகின்றனர். உதாரணமாக நடந்துமுடிந்த லோக்சபா தேர்தலில் மத்தியில் பிரதமருக்கு அடுத்த பதவியில் இருக்கும் உள்துறை அமைச்சர் சிதம்பரம் தனது சொந்தத் தொகுதியான சிவகங்கையில் கிட்டத்தட்ட தோல்வியே கண்டார். எனினும், தில்லுமுல்லுகள் மூலம் அ.தி.மு.க. வேட்பாளர் ராஜகண்ணப்பன் தோல்வியடையச்



கனிமொழி

செய்யப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஏற்கனவே 1999 தேர்தலிலும் சிதம்பரம் தோல்வியே கண்டார். பெற்ற வாக்கு களுக்குத் தகுதியான மக்கள் சேவை செய்யாததே இதற்குக் காரணம் என்பதைக் கூறித் தெரியவேண்டியதில்லை.

இவ்வாறான அரசியல் தான் தோன்றித் தன்மைகளால் தென் மாவட்டங்களுக்கு சென்னை அரசிடம் இருந்து விடைபெறுவதைத் தவிர வேறு வழி இல்லாமல் போய்விட்டது. ஏற்கனவே சென்னைக்கு நிகரான தலைநகராக மதுரையை உருவாக்கும் பணிகளும் ஆங்காங்கு சில துறைகளில் தொடங்கியும் விட்டன. சென்னை உயர்நீதிமன்றத்தின் கிளை மதுரையில் இரண்டு ஆண்டுகளுக்கு முன் திறக்கப் பட்டது. சென்னை வழக்கறிஞர்களின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் இது சாதிக்கப்பட்டது.

தென் தமிழகம் தனி மாநிலமாகப் பிரிவதற்கு அப்பிரதேச புத்திஜீவி



மு.க.ஸ்ராலின்

அமைப்புகளைத் தூண்டிவிடுவதும் தி.மு.கவே என்றும் கருதப்படுகிறது. தென் தமிழகம் என்ற தனிமாநிலம் உண்டாக பலமட்டங்களில் இவ்வாறு ஆதரவு இருந்தபோதும் மாநிலம் வடக்கு, தெற்காக மட்டும் பிரியாது கொங்கு மாநிலம் என்ற மூன்றாம் மாநிலத்துக்கான கோரிக்கையும் வலுவடையலாம். தென் தமிழகம் என்ற மாநிலத்தை உருவாக்கு வதற்கான நோக்கத்துடன் ஓர் அரசியல் கட்சி உண்டாக்கப்படாத போதும் ஏற்கனவே கொங்குநாடு முன்னேற்றப்பேரவை என்ற அரசியல் கட்சி செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. எனவே, மூன்றாவது மாநிலம் என்ற கோரிக்கை யும் எழ வாய்ப்புண்டு. கோயம்புத்தூர், ஈரோடு, நீலகிரி போன்ற மாவட்டங்களை உள்ளடக்கி மேற்கு தமிழகத்தில் இந்த கொங்கு நாடு முன்னேற்றப் பேரவையின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. தி.மு.கவுக்கு செல்வாக்கு மிகக் குறைந்த மாவட்டங்களாகவும் இவையே உள்ளன. எனவே, தி.மு.கவின் செல்வாக்கை ஊக்குவிக் கவே உலகத் தமிழர் மாநாட்டை எதிர்வரும் ஜனவரியில் அங்கு நடத்த தி.மு.க. தலைமை திட்டமிட்டிருப்ப தாகக் கூறப்படுகிறது. ஒருவேளை அதனை தனிமாநிலமாக்கி கனிமொழியிடம் ஒப்படைக்கும் திட்டமும் கலைஞரிடம் இருக்கலாம். காமராஜர், அண்ணா, எம்.ஜி.ஆர் என்போர் குடும்பம் பற்றிச் சிந்தியாது அரசியல் செய்தவர்கள். கலைஞரோ இவர்களுக்கு நேர்மாறாகக் குடும்பத்தையே அரசியலாக நடத்தி வருகிறார். கருணாநிதி குடும்பத்தின் சண்டையில் தமிழகம் துண்டுகளாகச் சிதறவுள்ளது வேடிக்கையான விடயம்தான். *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியிலிருந்து சோகத்தை சுமந்து வந்த மாணவர்கள் !

**அருள் மனோகரன்**

வன்னிப் போருக்குப் பின்னர் அகதிகள் பிரச்சினையே எல்லோருடைய கவனத்திலும் முழு இடத்தையும் பிடித்துள்ளது. இந்த அகதிப் பிரச்சினையினுள்ளே ஏராளம் துயரமிக்க சங்கதிகள் உண்டு. உறவுகளை இழந்தோர், உறவுகளைப் பிரிந்தோர், உடல் உறுப்புகளை இழந்தோர், தொழில் வாய்ப்புகளை இழந்தோர், கல்வியைத் தொடரமுடியாதோர் என பல வகைகளிலும் பாதிப்புகளையும் கவலைகளையுமுடைய சங்கதிகள் இவை.

மீள் குடியமர்வின் மூலமே இவற்றில் பலவற்றுக்கான தீர்வினைக்காண முடியும். அது உண்மையே. ஆனால், மீள் குடியமர்வு குறித்து எவராலும் ஒரு சரியான திட்ட வரைபு செய்ய இல்லாதவிடத்து சில தீர்வுகள், சில பரிகாரங்கள் நடப்பது வரவேற்கத்தக்கது.

அண்மையில் யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 57 மாணவர்கள் நலன்புரி முகாம்களில் இருந்து அழைத்து வரப்பட்டு கல்வியைத் தொடர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த மாணவர்களின் கதியும், கதையும் மிகவும் சோகமானதும் வியப்பானதுமாகும்.

இவர்களில் சிலர் ஏற்கனவே பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று இடையில் தொடர முடியாமல் போனவர்கள். சிலர் இறுதி ஆண்டு மாணவர்கள். வேறு சிலர் கடந்த ஆண்டில் கல்வியை ஆரம்பித்திருக்க வேண்டியவர்கள். இன்னும் சிலர் இந்த வருடம் ஆரம்பிக்கவுள்ளவர்கள். எல்லோரும் வன்னிப் போர் மற்றும் அதன் விளைவான நிலைமைகளினால் பெரும் இடைஞ்சற்பாடுகளில் சிக்கியிருந்தவர்கள். போதாக்குறைக்கு இடைத்தங்கல் முகாம் வாழ்க்கை வேறு. இப்போது யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வியைத் தொடரவும் ஆரம்பிக்கவும் உள்ளனர். இவர்கள் வவுனியா முகாம்களில் இருந்தே வந்துள்ளனர். இதைப்போல இன்னும் பல மாணவர்கள் புல்மோட்டை மற்றும் யாழ். மாவட்டத்தில் அமைந்துள்ள முகாம்களில் உள்ளனர். அவர்கள் எவரும் இதுவரை அழைத்துவரப்படவும் இல்லை. கல்வியைத் தொடரலாம் என்று உத்தரவாதப்படுத்தப்படவும் இல்லை.

இப்போது வவுனியாவிலிருந்து வந்திருக்கும் 57 மாணவர்கள் கல்வியைத் தொடருவதற்கு வாய்ப்புக் கிடைத்திருந்தாலும் அவர்கள் சந்திக்கின்ற பிரச்சினைகள் ஏராளம். முதலில் பலர் போர்க்காயங்களுக்கு உள்ளானவர்களாக இருக்கிறார்கள். இந்தக் காயங்கள் இரண்டு வகை. ஒன்று உடற்காயம், இரண்டாவது மனக்காயம். அதாவது உளரீதியான பாதிப்பு.

குறிப்பாக மருத்துவ பீடத்துக்குரிய மாணவர் ஒருவர் இரண்டு கால்களுமே இல்லாதிருக்கின்றார். வேறொரு மாணவர் நடக்க முடியாத நிலையிலிருக்கின்றார். வேறொரு மாணவர் பெற்றோரை இழந்திருக்கின்றார். இன்னொருவருக்கு குடும்பத்தில் யாருமே மிஞ்சவில்லை. எல்லோரையும் போர் தின்றுவிட்டது. சித்தங்கலங்கிய நிலையில் வேறுசிலர் சிகிச்சை பெற்று வருகின்றனர். இத்தகைய கடினமான நிலையிலேயே இவர்கள் தமது கல்வியைத் தொடரவுள்ளனர்.

இதன் பின்னாலுள்ள கதியும் நிலையும்தான் இங்கே முக்கியமானது. போரில் முழுமையாகப் பாதிக்கப்பட்ட இவர்கள், பின்னர் அகதிமுகாம்களில் தங்கவைக்கப்பட்டனர். போர் எல்லாவற்றையும் ஏற்கனவே தின்றுவிட்டது. போதாக்குறைக்கு அது அவர்களை எவ்வளவுக்கு உறிஞ்ச முடியுமோ அந்த அளவுக்கு உறிஞ்சிவிட்டது.

எனவே, 'வெறும் நடைபிணமாகி' வெளித்தள்ளப்பட்டுள்ள இவர்கள் கல்வியைத் தொடர்வதற்கு பொருளாதார வசதிகள் இல்லை; போதிய உடைகள் இல்லை; உறவினர்களுடன் தொடர்பு கொள்வதற்கான வசதிகள் இல்லை என்ற நிலையில் இருக்கின்றார்கள். பல்கலைக்கழக நிர்வாகம் இவர்களுக்கான உதவிகளுக்காக 'முதலுதவி' என்ற அளவில் சிறு உதவியை மட்டுமே அளிக்கும் நிலையில் உள்ளது. ஆனால், இவர்களின் தேவையோ பெரியது. நிலைமையோ மிகவும் சோகமானது. எனவே, இவர்களுக்கான உதவிகள் அதிகளவில் தேவைப்படுகின்றன.

இந்த மாணவர்களுக்கு பிரத்தியேகமான வகையில் உதவிகளை அரசாங்கம் செய்திருக்க வேண்டும். போரின் போதும் சரி, போர் ஓய்ந்த பின்னர் முகாம்களில் இருந்த போதும் சரி இவர்களுடைய குடும்பங்கள் உழைப்போ வருமானமோ இல்லாத நிலையிலேயே கடந்த இரண்டாண்டுகளாக இருந்தன. இப்போதும் அதுதான் நிலைமை. எனவே, குடும்பத்தினரிடமிருந்து எந்த உதவியும் பெற முடியாது. இது பற்றி அரசாங்கத்துக்கு எதுவுமே தெரியாததொன்றல்ல. இதே இடத்தில் சிங்கள மாணவர்கள் இருந்திருந்தால் அவர்களுக்கான உதவிகளையும் பிற ஏற்பாடுகளையும் அரசாங்கம் எவ்வாறு செய்திருக்கும் என்பது எல்லோருக்குமே தெரியும். இந்தவிதமான அணுகுமுறைதான் இலங்கையின் ஐக்கியத்துக்குச் சவாலான விடயங்களாகின்றன.



யாழ். பல்கலைக்கழகம்

வருங்காலத் தலைமுறையினரின் இதயங்களை வெல்வதற்கான வழிமுறைகளை உருவாக்காத வரையில் வெறும் வார்த்தைகளினால் எந்தப் பயனும் கிட்டிவிடாது. அரசாங்கத்தின் உதவிகள் கிட்டுமா இல்லையா என்பது ஒருபுறமிருக்க, இந்த மாணவர்களுக்கு உதவுவதற்கு தமிழ்ச் சமூகம் முன்வர வேண்டும். குறிப்பாக இந்த மாணவர்களில் சிலர் சிறு வயதிலேயே திருமணம் செய்து கொண்டவர்கள். போர்காரணமான மிக இளவயது திருமணங்களில் துணையை இழந்த மாணவிகளும் உள்ளனர், மாணவர்களும் உள்ளனர். இவை எல்லாவற்றுக்குமான உதவியாக தமிழ்த் தரப்புகள், தமிழ் அமைப்புகள் ஏதாவது செய்வது அவசியம். புலம் பெயர் மக்களோ மாணவர் தரப்புகளோ கூட இது குறித்து கனதியாக சிந்திப்பது தேவை.

இந்த மாணவர்களைப் போல, இன்னும் வேறு பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவானோரும் உள்ளனர். அவர்களின் நிலைமையும் இதுதான். இன்னும் பள்ளிக் கல்வி, கல்வியியற் கல்லூரிக் கற்கை என்று அங்கெல்லாம் சென்று படிக்கவேண்டியவர்களின் கதியும் இதேதான். எனவே, கல்வியை மதித்துப் போற்றும் பண்புள்ள நமது சமுதாயம் இவர்களின் கல்விக்கு உதவவேண்டும்.

'ஒவ்வொரு பிள்ளைக்கும் கல்வியை உறுதிப்படுத்த வேண்டும்' என்ற கோட்பாட்டுடன் இயங்கும் 'யுனிசெவ்' அமைப்பிடம் கூட இதற்கான - இந்த நிலைமைக்கான தீர்வு நோக்கிய வேலைத்திட்டம் இருப்பதாகத் தெரியவில்லை. அவ்வாறே 'சேவ் த சில்ரன்' அமைப்பும் உள்ளது.

ஆகவே, பிறரின் கைகளை நம்பியிருக்காமல், அவர்களுடைய கால்கள் எப்போது வருகை தரும் என்று காத்திருக்காமல் இந்த மாணவர்களின் கல்விக்கு உதவும் ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். இதற்குக் காலதாமதம் கூடாது. விரைவான நடவடிக்கையே அவசியம்.

தொடரும் துயரங்களிலிருந்து இவர்களை மீட்டெடுக்கும் உதவிப்பணி - மீட்புப்பணி தமிழ் மக்கள் அனைவருக்குமுண்டு. அதுவே தமிழ்த் தரப்பைப் பலப்படுத்தும். அதுவே தேவையும்.

காலத்தே செய்யும் பணியே காலத்தைக் கடந்தும் நிற்கும், காலத்தை உருவாக்கியும் விடும். ★

## தமிழ் எழுத்தாளர் ஒன்றிய புனரமைப்புக் கூட்டம்

தமிழ் எழுத்தாளர் ஒன்றிய புனரமைப்பு பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் கலாநிதி க.குணராசா தலைமையில் நடைபெறும்.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா மற்றும் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் ஆகியோர் சிறப்பு விருத்தினர்களாகவும் கலந்துகொள்வர்.

குடாநாட்டில் அமைந்துள்ள சகல இலக்கிய அமைப்புககள் மற்றும் இலக்கிய கர்த்தாக் களையும் கலந்துகொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளது. (1-160)

## நெல்லியடியில் இன்று 'விமலம்' நூல் வெளியீடு

நெல்லியடி 'மற்ஸ் சென்ரர்' கல்வி நிறுவன நிர்வாகி அமரர் சி.விமலராஜாவின் நினைவாக உருவாக்கப்பட்ட 'விமலம்' என்ற நூலின் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி தடங்கன் புளியடி முருகன் கல்யாண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிறுவன ஆசிரியர் சிவ முகுந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறை விரிவுரையாளர் த. அஜந்தகுமாரும் ஆய்வுரையை எழுத்தாளர் சு.குணேஸ்வரனும் ஏற்புரையை ஆ. பிரபானந்தனும் நிகழ்த்துவர்.

இந் நிகழ்வுக்கு ஆர்வமுடைய அனைவரையும் கலந்து கொள்ளும்படி விழா ஏற்பாட்டாளர்கள் வேண்டியுள்ளனர். (04)

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை பூபாலசிங்கம்



இணுவில் கிழக்கு, குமாரலிங்கம் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை பூபாலசிங்கம் நேற்று (03.10.2009) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர்களான செல்லத்துரை - இராசம்மாவின் அன்பு மகனும் நாகம்மாவின் அன்புக் கணவரும் அமரர்களான விசுவலிங்கம்-மீனாட்சி தம்பதியரின் மருமகனும் அரியரத்தினம் (அமரர்), பரராஜசிங்கம் (அமரர்), தனபாலசிங்கம், யோகநாதன் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), சிதம்பரநாதன், யோகேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் மயில்வாகனம் (இலங்கை மின்சார சபை), செல்லம்மா, சிவயோகம், கமலவேணி, புவனேஸ்வரி, பொன்னம்மா, கனகசபாபதி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), விசாலாட்சி (அமரர்), கனகம்மா, சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும் ரேவதி சந்திரா (ஜேர்மனி), கிருஸ்ணபாமா, யே ாகராணி, உமாபதி, செந்தில் (பொறியியலாளர், லண்டன்) ஆகியோரின் தகப்பனாரும் மகாலிங்கம் (ஜேர்மனி), சண்முகராசா, பாலச்சந்திரன் (வர்த்தகர்), டயானா (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் பிரி யா (ஜேர்மனி), பகீரதன் (ஜேர்மனி), விசாகினி, கஜேந்திரன் (பி ரான்ஸ்), மயூரதன், மகிந்தன், கஜனி, ரவீந்திரன், ராஜி ஆகியோரின் பேர னுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பாலச்சந்திரன்
(மருமகன்).

குமாரலிங்கம் வீதி,
இணுவில் கிழக்கு, இணுவில். (89529)

## ஆசிரியர் தின விழாக்கள்

யாழ்ப்பாணம், ஒக்.4

கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் ஆசிரியர் தின விழா நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெற உள்ளது.

பாடசாலை அபிவிருத்தி சங்கச் செயலாளர் மு.சந்திரலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக அமெரிக்க ஹவாய் ஆதீனத்தின் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் கலந்துகொள்வார்.

சிறப்பு விருத்தினராக ஓய்வுபெற்ற வங்கி முகாமையாளர் யோகேஸ்வரி சிவப்பிரகாசம் கலந்துகொள்வார்.

நிகழ்வில் பாடசாலையில் பணியாற்றும் அதிபர், ஆசிரியர்கள் மதிப்பளிக்கப்படுவர். (10)

* * *

கோப்பாய், ஒக்.4

கோப்பாய் தெற்கு றோ.க.த.க. பாடசாலையின் ஆசிரியர் நாள் நிகழ்வுகள் நாளை திங்கட்கிழமை ப.ப. 12.30 மணிக்கு அதிபர் [illegible] அடிகள் தலைமையில் நடைபெறும்.

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி சங்கரலிங்கம்



கொக்குவில் மேற்கு, சிவகுரு லேனைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி சங்கரலிங்கம் நேற்று (03.10.2009) காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா - கண்மணியின் மகளும், இணுவிலைச் சேர்ந்த சங்கரலிங்கத்தின் மனைவியும், சோதிலிங்கத்தின் (டென்மார்க்) அன்புத் தாயாரும், தனலட்சுமியின் மாமியாரும், சுஜித், சங்கீத், அஜித் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், நடராசா சீனியம்மா, அப்புத்துரை நாகலட்சுமி, மாணிக்கம் பூமணி, இராசரத்தினம் இரத்தினம், சுப்பையா வேதநாயகம், சிதம்பரநாதன் தயாநிதி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் மார்க்கண்டு கனகரத்தினம், செல்வரத்தினம் மகேஸ்வரி, மார்க்கண்டு சிவராசாதம்பி, மார்க்கண்டு கயிலாயம் தம்பி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (04.10.2009) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சுப்பையா வேதநாயகம்
(சகோதரன்)

சிவகுரு லேன்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில். (89532)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# துணைத் தூதுவரின் அபத்தப் பேச்சு

வவுனியாவில் ஒரு குறுகிய - சிறிய - நிலப்பரப்புக்குள் சுமார் மூன்று லட்சம் தமிழ் மக்கள் முடக்கப்பட்டு சிறை வைக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்களின் அவல நிலைமை குறித்தும், அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றமை சர்வதேச சட்டங்கள், நியமங்கள், வழமைகள், போன்றவற்றிற்கு முரணானது என்பது குறித்தும் சர்வதேச மட்டத்தில் கரிசனைக் குரல் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியுள்ளது. அமெரிக்கா உட்பட மேற்குலகு இந்தச் சிறைவைப்பைக் கடுமையாகக் கண்டிக்கின்றது. உலக நாடுகளின் பொது மன்றமான ஐ.நா. சபை பல மட்டங்களிலிருந்து அடுத்தடுத்து இவ்விடயம் குறித்து அறிவிப்புக்களை விடுத்து வருகின்றது.

கொடூரப் போரின் மத்தியில் மிக மோசமான யுத்தக் குற்றங்கள், அத்துமீறல்களை எதிர்கொண்டு, பேரழிவுகளைச் சந்தித்து, துயரத்தின் எல்லையில் சுருண்டு கிடக்கும் இந்த மக்களை, தடுத்து வைப்பு என்ற இந்த யுத்தத்தின் பின்னரான பெரும்குற்றம் மேலும் வதைக்கின்றது.

சுமார் மூன்று லட்சம் தமிழர்கள் இப்படிக் கூண்டோடு தடுத்து வைக்கப்பட்டு பேரவலத்துக்குள் தள்ளப்பட்டிருக்கின்ற கொடூரம் கண்டு உலகத் தமிழினம் கொதித்துப்போய் நிற்கின்றது. குறிப்பாக, இலங்கைத் தமிழர்களுக்கு தொப்புள் கொடி உறவாக விளங்கும் தமிழகத்தில் இவ் விடயம் பெரும் உணர்வைக் கிளறும் விவகாரமாக மாறியிருக்கின்றது.

யுத்தசமயத்தில் பல்லாயிரக்கணக்கில் வன்னியில் தமிழர்கள் கொன்றழிக்கப்பட்டபோது, அதைத் தடுத்து நிறுத்தத் தவறிய தமிழக மாநில அரசும், இந்திய மத்திய அரசும் சுமார் மூன்று லட்சம் தமிழர்கள் இப்படி நான்கரை மாதங்களுக்கு மேலாகச் சிறைவைக்கப்பட்டு, பேரவலத் துக்குள் ஆழ்த்தப்பட்டுக் குரூரமாக நடத்தப்படுவதையும் பார்த்துக்கொண்டு வாளாவிருக்கின்றன என்ற கோபாவேசம் தமிழகத்தில் கிளர்ந்து வருவது மறைக்கக்கூடியதேயல்ல.

இந்நிலைமையை எதிர்கொண்டு சமாளிப்பதற்காக, இலங்கைத் தமிழர்களின் நலன்குறித்துத் தாம் ஏதோ நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர் - கரிசனை காட்டுகின்றனர் - என்பதை வெளிப்படுத்துமாற்போன்ற ஆரவாரங்களில் தமிழக, இந்தியத் தலைவர்கள் - குறிப்பாகத் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியும், பிரதமர் மன்மோகன் சிங்கும் - அவ்வப்போது ஈடுபட்டு வருகின்றனர் என்பதும் தெரிந்த விடயமே.

அந்த வகையில் இப்போதைய பிந்திய நடவடிக்கை தான் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்றை வன்னி அகதிமுகாம்களுக்கு அனுப்பி அங்குள்ள நிலைமையை நேரில் கண்டறிந்து வர ஏற்பாடு செய்வது என்ற அறிவிப்பாகும். இந்த முயற்சியால், தமிழக, இந்திய ஆட்சியாளர்களுக்கு அரசியல் சுயலாபம் கிடைப்பதைத் தவிர, வேறு பலன் ஏதும் விளையுமா என்ற கேள்வியை இப்பத்தியில் சில தினங்களுக்கு முன்னர் வினவியிருந்தோம்.

வன்னியில் இப்படி சிறைப்பிடிக்கப்பட்டிருக்கும் மூன்று லட்சம் மக்களின் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் கூட அங்கு செல்ல அனுமதிக்கப்படவில்லை. சிறைக்கைதிகள் போல சிக்குண்டு கிடக்கும் இந்த மக்கள் தமது நாடாளுமன்ற உறுப்பினர்களைக்கூடச் சந்திக்க அனுமதிக்கப்படாமல் தடுக்கப்பட்டிருக்கும் இசசூழலில், இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவர்களைப் போய்ப் பார்த்து எதை வெட்டிப் பிடுங்கிவிடப் போகின்றார்கள் என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

சரி. அது இருந்துவிட்டுப் போகட்டும். ஆனால் அந்த முயற்சியையொட்டி, சென்னையில் உள்ள - இலங்கையின் - இந்தியாவுக்கான துணைத் தூதுவர் வடிவேல் கிருஷ்ணமூர்த்தி கூறியிருக்கும் கருத்துத்தான் தமிழ்பேசும் அனைவரையும் சீற்றத்துக்குள்ளும், விசனத்துக்குள்ளும் ஆழ்த்தியிருக்கின்றது. மலையகத் தமிழரான கிருஷ்ணமூர்த்தி, இலங்கை அரச ஊழியர். இராஜதந்திர சேவையில் பணியாற்றுபவர். தமது அரசுக்கு விசுவாசமாகவும், தமது அரசின் செயற்பாடுகளை நியாயப்படுத்தியும் நடக்கவேண்டிய நிலையில் அவர் இருக்கின்றார் என்பதை நாம் ஒப்புக்கொள்கின்றோம். ஆனால் அதிலும் ஒரு கண்ணியத்தைக் கடைப்பிடிக்க அவர் தவறக்கூடாது என்பதே நமது ஆதங்கம். அதுவும் உலகத் தமிழர்களின் மனச்சாட்சியையே - ஆன்மாவையே - உலுப்பி நிற்கும் இந்த அகதிகள் சிறை வைப்பு விவகாரம் குறித்துத் தாம் கருத்துத் தெரிவிக்கின்றோம் என்பதை எண்ணி, முன்னெச்சரிக்கையுடன் அவர் வார்த்தைகளை வெளியிட்டிருக்க வேண்டும். இப் போதும்கூட இந்தக் கருத்து அவரது வாயால் வெளி வந்தவை அல்ல என்ற மறுப்பு அவரிடமிருந்து வராதா என்ற எதிர்பார்ப்பும்கூட எமக்கு உண்டு.

வன்னி அகதிகளை இந்திய எம்.பிக்கள் குழு வந்து பார்வையிடும் என்ற செய்திகள் வெளியானசமயத்தில் "ஆள்கள் எல்லோரும் வந்து பார்வையிட்டுச் செல்வதற்கு வவுனியா அகதிமுகாம்கள் ஒன்றும் மிருகக்காட்சிச் சாலைகள் அல்ல" - என்று திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார் கிருஷ்ணமூர்த்தி.

துணைத் தூதுவர் அவர்களே! மிருகங்கள் அல்ல, அவற்றைவிடக் கேவலமான நிலையில் அந்த அகதிகள் அடைக்கப்பட்டுள்ளார்கள் - அடக்கப்பட்டுள்ளார்கள் - என்பதே உலகின் விசனம்.

இவ்வளவு குறுகிய இடத்துக்குள் மூன்று லட்சம் மக்களை, அவர்களின் சுதந்திரத்தைப் பறித்துத் தடுத்து வைப்பதற்கு உங்கள் அரசுக்கு எந்தச் சட்ட ரீதியான உரிமையும் கிடையாது. இது, அரசமைப்பு ஏற்பாடுகள் உறுதி செய்த அடிப்படை உரிமைகளை மீறும் அடாவடித்தனம். அதிகாரத் துஷ்பிரயோகம். சர்வதேச சட்ட நியமங்களை அத்துமீறும் அக்கிரமம். மிருகக் காட்சிச் சாலையில் மிருகங் களைத்தான் சிறைவைத்துப் பொதுமக்களின் பார்வைக்கு விடுவார்கள். இங்கு - வன்னியில் - குற்றம் இழைக்காத அப்பாவி மனிதர்களைப் பல்லாயிரக் கணக்கில் உங்கள் அரசு சிறைவைத்து அவர்களின் வாழ்வை சிதைத்து வருகின்றது.

இந்த அகதிகளை வெளியிற் சென்று பார்க்கக்கூடாது என்பதற்கு நீங்கள் கூறும் காரணமும் பொருத்தமாகத்தான் இருக்கின்றது.

மிருகக் காட்சிச் சாலைக்குச் சென்று அங்கு அடைக்கப்பட்ட மிருகங்களைப் பார்த்து, ரசித்து வருவோர், அந்த மிருகங்களை - அவற்றின் வாழ்க்கை முறையை - தோற்றத்தை - குடும்ப வாழ்வியலை - பார்த்த திருப்தியுடன் மீளுவர். ஆனால் வவுனியா அகதி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டு மனித மிருகங்களாக்கப்பட்டிருக்கும் அப்பாவித் தமிழர்களையும் பார்த்து, அவர்களின் பேரவலத்தைக் கண்டு மீளுவோர் குரூரத்தைத் தரிசித்து அதிர்ச்சியுடன் திரும்புவர். அதனால்தான் அங்குபோய் அந்த அகதிகளைப் பார்ப்பதை எதிர்க்கின்றாரோ துணைத் தூதர் கிருஷ்ணமூர்த்தி...?

# கட்டட ஒப்பந்தகாரர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதியுடன் பேச்சு

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

நல்லூர், ஒக். 4

ஒப்பந்தகாரர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதியுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப்படும் என சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அமைச்சின் யாழ்.அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பின்போது ஒப்பந்தகாரர்கள் தமக்கென ஒரு அமைப்பின் கீழ் செயற்பட்டு இணக்கப்பாட்டுடன் வேலைகளை முன்னெடுப்பதன் மூலம் பொதுமக்களுக்குப் பயனுள்ளதாக வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

ஒப்பந்தகாரர் முன்வைத்த கோரிக்கைகள் வருமாறு:

* ஒப்பந்தகாரருக்கு நிர்மாண உத்தரவாத நிதியம் ஊடாக நிதி வழங்க மாகாணசபைத் திணைக்களம் உதவியளிக்க வேண்டும்.
* முருகைக் கற்கள், கோளான் கற்கள் என்பவற்றைக் கிண்டியெடுக்க சட்டபூர்வமான அனுமதி தேவை.
* ஒப்பந்தகாரர்கள் தேவையான பொருள்களை வெளிமாவட்டங்களில் இருந்து எடுத்துவர அனுமதித்தல்
* நிர்மாண வேலைகளுக்குத் தேவையான நிதியை வங்கிகளூடாக இலகு கடனில் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்.
* தேசிய இயந்திர சாதன நிறுவனத்தின் (நிமோ) கிளை ஒன்றை யாழ்ப்பாணத்தில் திறந்து கனரக இயந்திரங்களைப் பயன்படுத்தக் கூடியதாக ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந்தக் கோரிக்கைகள் தொடர்பாக:

ஜனாதிபதியைச் சந்திக்க ஒரு குழுவினரை வரும்படியும் ஜனாதிபதியுடன் பேசி கோரிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். (1-111)

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சாதனை படைத்த மாணவர்களுக்கு மாகாணக்கல்விப் பணிப்பாளர் பாராட்டு

யாழ்ப்பாணம், ஒக்.4

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சாதனை படைத்த வடக்கு மாகாண மாணவர்கள் இருவரையும் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா வாழ்த்திப் பாராட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :-

தமிழ் மொழிமூல பரீட்சார்த்திகளில் 192 புள்ளிகளைப் பெற்று தேசிய ரீதியில் முதலிடம்பெற்ற லோகேஸ்வரன் ஸ்ரீகர்சனை வடமாகாணக் கல்வித்திணைக்களத்தின் சார்பில் மனதாரப் பாராட்டுகின்றேன்.

இவருடைய சாதனைக்கு உறுதுணையாக இருந்த இவரின் பெற்றோரையும், சிறப்பான வழிகாட்டல்களை வழங்கிய வலிகாமவலயத்தைச் சேர்ந்த வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள் ஆகியோரையும் பாராட்டுகின்றேன்.

இதேபோல் தேசிய ரீதியில் 191 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட வவுனியா தெற்கு வலயத்தைச் சேர்ந்த பண்டாரிக்குளம் விபுலானந்தாக் கல்லூரி மாணவன் சச்சிதானந்தம் கௌரீசனையும் பாராட்டுகின்றேன்-என்றுள்ளது. (1)

# குடியேற்ற உத்தியோகத்தர் பதவிக்கு 18 பேர் நேர்முகப்பரீட்சைக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.4

வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால் குடியேற்ற உத்தியோகத்தர் III பதவிக்கு ஆள்சேர்ப்பதற்கான நேர்முகப்பரீட்சைக்கு 18 பேர் அழைக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் 14 ஆம் திகதி காலை 9 .30 மணிக்கு யாழ். பிரதி விவசாயப் பணிப்பாளர்(விரி) பணிமனையில் இந்த நேர்முகப் பரீட்சை இடம்பெறவுள்ளது.

இந்த நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்ட போதிலும் அக் கடிதங்கள் கிடைக்காதவர்களும் உரிய திகதியில் நேர்முகப் பரீட்சைக்கு சமுமகளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

மேலதிக விவரங்களுக்கு கீழ்க் காணும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம். 026 3263782, 0263266509.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளவர்களின் விவரம் வருமாறு:-

செல்வி காத்தியா ஞானசோதியன் - நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை, செல்வி வினோதா திருநாவுக்கரசு - முதலாம் கட்டை வீதி, சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி, ஜீவரத்தினம் லவஜீவ் - இல.9, காரைகாட்டு வீதி, வண்ணார்பண்ணை, செல்வி சிவாஜினி சிவலிங்கம் - சுன்னாகம் மேற்கு, சுன்னாகம், செல்வி சுபேதா தவராசா - டச்சு றோட், சாவகச்சேரி வடக்கு, மீசாலை, செல்வி சுவர்ணா நாகேந்திரன் - இளவாலை வடக்கு, இளவாலை, செல்வி சுதர்சினி அரசலிங்கம் - 'கோகுலம்', சந்தை வீதி, மானிப்பாய், செல்வி பமித்திரா பொன்னம்பலம் - ' பிரசாந்தி இல்லம்', மானிப்பாய் வீதி, ஆறுகால் மடம், ஆனைக்கோட்டை, திருமதி அஞ்சனா தேவகுமார் - 'நிலாவில்', மாறாம்புலம், அல்வாய் வடமேற்கு, அல்வாய், திருமதி திருவதனி தேவானந் - 10/6ஏ, வளாக வீதி, திருநெல்வேலி, செல்வி நித்தியா கந்தசாமி - இடைக்குறிச்சி கிழக்கு, வரணி, செல்வி நிராஜினி பாலகிருஸ்ணன் - சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய், திருமதி அபிரா திவாகரன் - 46, (20) அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம், செல்வி தாரணி பாலசுப்பிரமணியம் - அணிஞ்சில்காடு, பொலிகண்டி கிழக்கு, வல்வெட்டித்துறை, சிதம்பரநாதன் மயூரன் - முதலாம் ஒழுங்கை, அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகம், திருமதி கிரிஜா நிசாந்தன் - மே/பா ஆ. மகேந்திரன், சங்கரத்தை, வட்டுக்கோட்டை, செல்வி வினோதா சிவசுப்பிரமணியம் - வாரியத்தனை, கரவெட்டி மத்தி, கரவெட்டி, செல்வி சுபாஜினி வேலுப்பிள்ளை - மே/பா திருமதி ச.ஆறுமுகராசா, பிரம்படி லேன், கொக்குவில் கிழக்கு. (1)

# வலிகாமம் வலய ஆசிரியர்களின் தடகளப் போட்டிகள் இன்று

வலி.வடக்கு, ஒக்.04

வடக்கின் வசந்தம் துரித கல்வி முன்னேற்ற செயற்திட்டத்தின் கீழ் நடைபெறும் விளையாட்டுத் தொடரில் வலிகாமம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட கல்விக் கோட்டங்களுக்கு இடையேயான ஆசிரியர்களுக்கான தடகளப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இன்றைய போட்டிகளில் ஆண்கள், பெண்களுக்கான 100 மீற்றர், 200 மீற்றர், 400மீற்றர், 800மீற்றர், 1500 மீற்றர் ஓட்டப்போட்டிகளுடன் 4×100 மீற்றர், 4×200மீற்றர், 4×400 மீற்றர் அஞ்சல் ஓட்டப் போட்டிகளும் நடைபெறவுள்ளன. (50-86)

# நாளை

| | |
|---|---|
| புரட்டாதி 19 | 05.10.2009 |
| | திங்கட்கிழமை |
| திதி: | பிரதமை |
| | பி.ப. 12.04 வரை |
| நட்சத்திரம்: | ரேவதி |
| | பி.ப. 12.33 வரை |
| சுபநேரம்: | 12.02 - 0. 32 |
| ராகுகாலம்: | 07.32 - 09.02 |

# புரட்டாதி 31ஆம் நாள் சனிக்கிழமையே தீபாவளி

## விளக்குகிறார் வாக்கிய பஞ்சாங்க பிரசுர கர்த்தா

இவ்வருடம் புரட்டாதி 31ஆம் திகதி சனிக்கிழமையே தீபாவளி. புரட்டாதிச் சனி, அமாவாசை விரதம், கேதாரகௌரி விரதம் , வாக்கிய பஞ்சாங்கத்தின் பிரகாரம் புரட்டாதி 31ஆம் நாள் சனிக்கிழமை இரவு 36நாடி 42 விநாடியில் (மணி இரவு 8.43 இல்) ஐப்பசி மாதம் பிறக்கின்றது. அன்று சூரிய அஸ்தமனத்தின் பின்பு மாதம் பிறப்பதால் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையே ஐப்பசி மாதப்பிறப்பு. இதனை அனைவரும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

இது தெரியாது புரட்டாதியில் தீபாவளி வரலாமா? புரட்டாதி 31ஆம் நாள் வரலாமா? என்று ஏன் இந்தக் குழப்பம் ? 22.09.2009, 02.10.2009, 3.10.2009 ஆகிய திகதிகளில் வெளியான உதயன் பத்திரிகைகளில் இது பற்றி வாசகர்கள் குழப்பமடைவதாக தெரிவிக்கிறார்கள். கணிப்பில் தவறு என்று கூறுகிறார்கள். பரகிதம் போன்ற புத்தகங்களில் மாதப்பிறப்புக் கணிப்பு பற்றி உதாரணத்துடன் இருக்கிறது.அதை வைத்து கணித்துப் பார்க்கலாமே? இது போக, 22.09.2009 உதயன் பத்திரிகையில் 300 வருடங்களுக்குப் பின்பு புரட்டாதியில் தீபாவளி என்ற தலைப்பில் புரட்டாதியில் தீபாவளி அபூர்வமானது என்று சான்றோர்கள் கூறியிருப்பதாக செய்தி குறிப்பில் வெளிவந்தது குறிப்பிடத்தக்கது.

மேலும் எமது வாக்கியப் பஞ்சாங்கத்தில் புரட்டாதியில் தீபாவளி கொண்டாடிய வருடங்கள் சில 1990,1925,1944. இதை விட இவ்வருடம் புரட்டாதியில் இந்தியாவில் வெளிவரும் பல பஞ்சாங்கங்கள் புரட்டாதியில் தீபாவளி என்று தெரிவிக்கின்றன. அதன் பெயர்கள் வருமாறு : சபரி சுத்த திருக்கணித பஞ்சாங்கம், ஆற்காடு கா.வே. சீதாராமையர் சர்வமுகூர்த்த பஞ்சாங்கம், ஸ்ரீ வைகானஸ சுத்த வாக்கிய சர்வமுகூர்த்த பஞ்சாங்கம், பாம்பு பஞ்சாங்கம், திருநெல்வேலி வாக்கிய பஞ்சாங்கம், ஸ்ரீ ரங்கம் கோயில் வாக்கிய பஞ்சாங்கம். இப்பஞ்சாங்கங்களில் புரட்டாதி 31ஆம் நாள் சனிக்கிழமையே தீபாவளி என்று தெரிவித்திருக்கிறார்கள். இதன் நகல் பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளன.

ஆகவே இனியும் சைவப்பெருமக்கள் குழப்பமடையாது புரட்டாதி 31ஆம் நாள் புரட்டாதி 5ஆம் சனிக்கிழமையே **புரட்டாதிச் சனி, தீபாவளி, அமாவாசை விரதம், கேதார கௌரிவிரதம்** அனுஷடிக்க வேண்டும் என்பதையும் ஐப்பசி மாதப்பிறப்பு 18.10.2009 ஞாயிற்றுக்கிழமையே என்பதையும் தெரிவிக்கிறோம்.

வெ.இரகுநாதஐயர்.
சோதிட பரிபாலனமடம், கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தளம் நகரத்தில் நேற்று மினி சூறாவளி 15 பேர் கடுங்காயம்; வீடுகள் சேதம்



கொழும்பு, ஒக்.4

புத்தளம் நகரத்தில் நேற்றுப் பிற்பகல் வீசியமினி சூறாவளியால் 600 க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளதுடன், 15 பேர் வரை கடும் காயமுற்ற நிலையில் புத்தளம் தள வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் 1.45 மணி அளவில் பெய்த கடும் மழையினையடுத்து திடீரென வீசிய காற்றினால் வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்களின் கூரைகள் தூக்கி வீசப்பட்டன. பாரிய மரங்கள் பல வீதிகளிலும். வீடுகளிலும் சரிந்து வீழ்ந்தன. முச்சக்கர வண்டிகள்,மோட்டார் சைக்கிள்கள் மற்றும் துவிச்சக்கர வண்டிகள் என்பன சேதத்துக்குள்ளாகியுள்ளன.

புத்தளம் கடற்கரை வீதி,மஸ்ஜித் வீதி. மரைக்கார்; வீதி,வான் வீதி, நுர் நகர் பகுதி, சவிவபுரம் போன்ற பகுதிகளிலேயே இந்தப் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக புத்தளம் பிரதேச செயலாளர் ஏ.சி.எம்.நபீல் தெரிவித்தார்.

இதே வேளை தற்போது ஏற்பட்டுள்ள இந்த நிலையினையடுத்து கால் நடை வளத்துறை பிரதி அமைச்சர் கே.எ.பாயிஸ், மீள்குடியேற்ற, அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் ரிசாத் பதியுதீனுடன் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கினார்.

அதனையடுத்து அமைச்சர் ரிசாத் பதியுதீன் கொழும்பலிருந்து உடனடியாக புத்தளத்துக்கு வருகைத்தந்து பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டதுடன், சேத விவரங்களை சேகரிக்குமாறு புத்தளம் மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர்களுக்கு பணிப்புரை வழங்கினார்.

# காற்றினால் கூடாரங்கள் சரிந்து விழுந்தன; மாற்று ஏற்பாடுகள் இல்லாததால் அகதிகள் சிரமம்

கொழும்பு, ஒக்.04

வவுனியாவில் கடந்த சில நாள்களாக வீசும், பலத்த காற்றுக் காரணமாக, செட்டிக்குளம் முகாமில் அமைக்கப்பட்டுள்ள கூடாரங்களில் சரிந்து விழுந்து, பயன் பெற முடியாத நிலையில் உள்ள சுமார் 25 தொடக்கம் 30 வரையான கூடாரங்கள் இதுவரை திருத்தி அமைக்கப்படவில்லை. மாற்று ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை. இதனால் அந்தக் கூடாரங்களில் வாழ்க்கை நடத்தும் இடம் பெயர்ந்த மக்கள் பெரும் இன்னல்களை எதிர் கொள்கின்றனர். என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதுதொடர்பாக செட்டிக்குளம் முகாம் மக்கள் பி.பி.சிக்கு கருத்துத் தெரிவிக்கையில் இதுவரைக்கும் எந்த மாற்று நடவடிக்கையும் எடுக்கவில்லை. இங்கு சமைக்க முடியாதுள்ளது. கூடாரங்களுக்கு வெளியில் வைத்துத்தான் சமைக்க முடியும். உணவுப் பொருள்களில் மண்ணும், தூசிகளும் விழுகின்றன. நாங்கள் இப்போது கூடாரங்களுக்கு வெளியில் தான் இருக்கிறோம். இதனால் நிறையப்பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். தண்ணீர் வசதியில்லை கழிவு நீர் வாய்க்கால் அசுத்தமாகியுள்ளது. கடுமையான காற்றினால் முகாம், புழுதி மண்டலமாக உள்ளது. மழை பெய்தாலும் இங்கு இருக்க முடியாது. – என்றனர்.

இந்தப்பிரச்சனை தொடர்பாக அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கூறியதாவது :-

சரிந்த கூடாரங்களை சீரமைக்கும் பொறுப்பு அந்தக் கூடாரங்களை அமைத்த நிறுவனத்தினிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளது. அதேவேளை மழை பெய்யக்கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதால் மழை நீர் தேங்கும் சாத்தியம் அதிகமாகவுள்ளது, தாழ்வான பகுதியிலுள்ள கூடாரங்களில் உள்ள சுமார் 10,000 பேரை புதிதாக அமைக்கப்பட்ட 2 நிவாரணக்கிரமங்களுக்கு இன்னும் ஓரிரு நாள்களில் இடமாற்றவுள்ளோம்.

அத்தோடு அவர்களை உறவினர்களிடம் செல்வதற்கும் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. குறிப்பாக பல்கலைக்கழக மாணவர்கள் இதில் உள்ளடக்கப்படுவர் - என்றார். (அ-7)

புத்தகம் கட்டுதல்
பல்கலைக்கழக ஆய்வுக் நூல்கள் சிறந்த முறையில் ரைப்செற்றிங், பைண்டிங் செய்து கொள்ள நாடுங்கள்.
ராஜ் கொம்பியூட்டர் பிறிண்டிங் சென்ரர்
10, இராமநாதன் வீதி (பரமேஸ்வராச் சந்தி)

## ஆசிரியர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம் ஒக்.04

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் நாளை திங்கட்கிழமை ஆசிரியர் தினம் முகிழ் நிலை ஆசிரியர்களினால் கொண்டாடப்படவுள்ளது. அன்றைய தினம் கல்வியியலாளர் கௌரவிப்பும் ''படி'' சஞ்சிகையும் வெளியிடப்படவுள்ளது. நிகழ்வின் தலைவராக பீடாதிபதி எஸ்.கே.யோகநாதனும், பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் மா.சின்னத்தம்பி அவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

## சரண் அடைந்த..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெயர்ந்தோருக்கான ஐக்கிய நாடுகள் நிறுவனம்( ஐ. ஓ.எம்.) இதற்கான அனுசரணையை வழங்கியுள்ளது. அத்துடன் யு.என்.டி.பி. நிதி உதவி வழங்கியுள்ளது.

## தனித்திருந்த..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவத்தில் கொல்லப்பட்ட கருணாகரனின் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ-1-78)

## அகதிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வுக்கு இலங்கை அரசாங்கம் தேவையான ஏற்பாடுகளையும் நடவடிக்கையும் மேற்கொண்டு வருகிறது. மக்களின் மீள்குடியமர்வை உறுதி செய்துவருகின்றது என்று பஸில் ராஜபக்ஷ ஆணையாளருக்கு எடுத்துக் கூறினார்.

ஐரோப்பிய ஒன்றியம் இந்தச் செயற்பாட்டுக்கு தேவையான உதவிகளை வழங்கி வருவதாக அவர் ஒன்றிய ஆணையாளர் பஸிலிடம் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் பெல்ஜியம் இலங்கைத் தூதுவர் ரவீந்திர ஆரியசிங்க, திறைசேரிச் செயலாளர் பி.வி.ஜெயசுந்தர ஆகியோர் கலந்துகொண்டனர். (1)

## முகாம்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது பற்றி அவர் மேலும் உதயனுக்கு தெரிவித்தாவது:-

'மனிக்பாம்' முகாமில் தங்கியிருப்பவர்களில் கர்ப்பிணிப் பெண்கள் விடுவிக்கப்பட்டு பஸ்கள் மூலம் ஏற்றப்பட்டு வவுனியா பஸ் நிலையப் பகுதியில் இறக்கப்படுகின்றனர். அவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். அங்கு செல்வதற்கு போக்குவரத்து வசதிகள் செய்யப்படவில்லை. ஒரு சிலர் தமக்குத் தெரிந்தவர்கள் வீடுகளுக்கு சென்றுள்ளனர். போக்கிடமின்றி அந்தரிப்பவர்களை நகரசபை மற்றும் ஆலயங்களின் நிர்வாகிகள் பராமரித்து வருகின்றனர்.

யாழ்ப்பாணத்துக்கு படைத்தரப்பினரால் அவர்கள் செல்வதற்கு உரிய பயண அனுமதி வழங்கப்படாமையே அவர்கள் பஸ்களில் யாழ்ப்பாணம் செல்ல முடியாத நிலையில் தவிக்க நேர்ந்துள்ளது.

அவர்களின் நிலைமை குறித்து உயர் மட்டத்திற்கு எடுத்துக் கூறியுள்ளோம் -என்றார். (அ-1)

## தமிழ் இளைஞர்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தத் தவறியதை அடுத்தே கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## நிறைவேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளதாக கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சி வட்டாரங்களை மேற்கோள்காட்டி வெளியிடப்பட்டுள்ள செய்தியில் உத்தேச பிரேரணைக்கு ஜே.வி. பியின் ஆதரவைப் பெறுவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிப்பது சம்பந்தமாக ஆராயும் விசேட குழுவில் ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி (மங்கள), சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜனநாயக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் அங் கம் வகிக்கின்றன.

## வன்னி மக்களின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பில் விரைவில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும் வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவும் கலந்துரையாட உள்ளனர்.

இந்தியாவின் நாடாளுமன்ற குழு ஒன்றை இலங்கை அனுப்பி வைப்பது என்ற கோரிக்கை குறித்து செய்தியாளர்கள் ப.சிதம்பரத்திடம் கேள்வி எழுப்பினர். இதற்குப் பதிலளித்த சிதம்பரம் அவ்வாறான ஒரு திட்டம் குறித்து இந்திய மத்திய அரசாங்கம் ஆலோசனை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தார்.

தமிழகத்தில் உள்ள 1.5 லட்சம் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு இந்திய பிரஜாவுரிமை வழங்கப்பட வேண்டும் என திராவிட முன்னேற்றக் கழகம் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி கோரிக்கை விடுத்திருந்தது. இது தொடர்பில் தமிழக முதல்வர் மு. கருணாநிதியினால் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் துரித பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார். (அ-சி)

## ஐ.நா. சாசனத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் ஹெகலிய இது குறித்து விவரித்ததாவது:-

ஜி.எஸ்.பி பிளஸ் சலுகை இலங்கைக்கு கிடைக்கக் கூடாது என்பதற்கான பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதன் ஓர் அங்கமாக ஐக்கிய நாடுகள் சாசனத்தின் 27 ஆவது பிரிவில் நாட்டில் முன்னெடுக்கப்பட்ட மனிதாபிமான நடவடிக்கைகளையும் ஐரோப்பிய ஒன்றியம் புகுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொள்கின்றது.

பயங்கரவாதத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மனிதாபிமான நடவடிக்கைக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. இவ்வாறானதொரு நிலையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த முயற்சிகளுக்கு அரசாங்கம் ஒருபோதும் அனுமதிக்காது. அது நாட்டின் இறைமையை பாதிக்கும்.

ஜி.எஸ்.பி பிளஸ் சலுகையானது ஜனாதிபதிக்கோ அல்லது தனிநபருக்கோ உரித்தான பிரச்சினையில்லை. நாட்டிற்கு எதிரான பிரச்சினையாகும். சலுகையை வழங்குவதற்காக இதுவரையிலும் கடைப்பிடிக்கப்பட்ட முறைமைக்குள் புதிய காரணத்தையும் புகுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கு நாம் இடமளிக்கமாட்டோம்.

நாட்டின்இறைமை மற்றும் ஒருமைப்பாட்டை பாதுகாக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும். ஐக்கிய நாடுகள் சாசனத்தின் 27 ஆம் பிரிவில் மனித உரிமைகள் பேணல், ஊழல் மோசடிகள் மற்றும் தொழிலாளர் பாதுகாப்பு தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் அதற்கு புதிய அம்சங்களில் ஒன்றான இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட மனிதாபிமான நடவடிக்கைகளையும் முன்னெடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சலுகையை வழங்குவதற்கு யுத்தம் மற்றும் பயங்கரவாதத்தை தோற்கடிப்பதற்காக முன்னெடுக்கப்பட்ட மனிதாபிமான நடவடிக்கைக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை. இவ்வாறான நிலையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சாசனத்திற்குள் புதிய காரணத்தை புகுத்துவதற்கு முயற்சிக்கப்படுவதை வன்மையாக கண்டிக்கின்றோம் - என்றார். (அ)

Net Cafe, Communications
உரிமையாளர்களிற்கு...
உங்களிற்குத் தேவையான Net Call இற்குரிய pep 2, Accounts, Credits போன்றவற்றை இணைத்து ஐரோப்பா, கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர் போன்ற 40 இற்கும் மேற்பட்ட நாடுகளிற்கு இலவசமாக உரையாடுவதற்கான வசதிகள் செய்து தரப்படும்.
Net Cafe உரிமையாளர்கள் விசேட விலைக்கழிவுடன் கணனிகளை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் Broad Band வசதிகளை வீட்டில் வைத்திருப்பவர்களிற்கும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள வசதிகள் செய்து தரப்படும்.
ஒரு வருட உத்தரவாதத்துடன் கணனி, கணனி சார்ந்த உபகரணங்கள் அனைத்தும் மேலும் விலைக் குறைப்புச் செய்யப்பட்டுள்ளன.
NALIN Information Technologies Pvt Ltd
44/3A, மணல் தரை லேன் (சுந்தரம் மருந்தகம் அருகில்)
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 2221166, 0777667974.

Luxon Communication
இப்பொழுது ஈச்சமோட்டையில் broadband இணைப்புடன் internet Broswing மணித்தியாலத்திற்கு 50/= ரூபா மட்டுமே.
அத்துடன் இதர சேவைகளான Internet calls. Local calls, face to face calls,Fax,Laminating,Printing,Photocopy,
Net2phone,Callspeak,Call2cents,voipcheap,deltathree போன்ற Net call dollars களையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம் luxon Communication.
வாடிக்கையாளர்களுக்கு இன்னுமொரு நற்செய்தி வெளிநாட்டில் இருந்து உங்கள் உறவுகள் அனுப்பும் பணத்தினை இலகுவாக பெற்றுக்கொள்ள வெஸ்டர்ன் யுனியன் வசதியும் எம்மிடம் உண்டு என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.
Email;-luxoncom@yahoo.com
60,Eachchamoddai Road,Jaffna
T.P:-021-222-6897, Fax:-021-222-6169.
WESTERN UNION

யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்
FedEx Express
உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப்பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்
விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை
குறைந்த கட்டணத்திலான உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P- 2227835
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
TCN EXPRESS
28, Nelson Place, Colombo -06
இப்பொழுது ! வாடிக்கையாளரின் நலன்கருதி
லண்டன், சுவிஸ், பிரான்ஸ் நாடுகளுக்கு 3 கிலோவுக்கு குறையாத பொதிகளிற்கு 1Kg 550/=ரூபா வீதமும், கனடாவுக்கான 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 550/= ரூபா வரையான விசேட சலுகை
ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகளை பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் ... கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.10.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# மாகாண மட்ட தமிழ்த்தினப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள்

மாகாண மட்டத் தமிழ்தினப் போட்டிகள் நேற்று யாழ். வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி ஆகியவற்றில் ஆரம்பமாகின.

வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இருந்து வந்தவர்களும் இந்தப் போட்டிகளில் பங்கேற்றனர்.

நேற்று இடம்பெற்ற போட்டிகளில் வெற்றிபெற்றோர் விவரம் வருமாறு:-

★ ஆக்கம் எழுத்து - 1ஆம் பிரிவு - அபிராமி ரகுதாஸ் (யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி), றெ. ஸ்றெபனி குலாஸ் (மன்/ சென்மேரிஸ் பெண்கள் வித்தியாலயம்), மங்களேஸ்வரன் கிஷாந்தினி (வ/ தவசிகுளம் அ.த.க பாடசாலை)

★ கட்டுரை வரைதல்

2 ஆம் பிரிவு - குமாரசிங்கம் ரதீபா (யா/ மட்டுவில் கமலாசினி வித்தியாசாலை), தவநாதன் பிறிடோ (வ/விபுலானந்தாக் கல்லூரி), ச. ஜெல்சியன் ராஜ் (மன் / புனித லூசியா ம.வி.)

3 ஆம் பிரிவு - யசோதரா பாலசுப்பிரமணியம் (யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்), பூவேந்திரன் புவிதா (வ/ புதுக்குளம் ம.வி), அ. றிபாயா (மன்/ அல்மினா முஸ்லிம் ம.வி.)

★ கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல் -

4ஆம் பிரிவு - இரவீந்திரராசா ராசபிரவிந்தன் (யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பகீரதி மகேந்திரன் (வ/ இலங்கை திருச்சபை த.க.பா), ஜெறோமி கிளமென்ற் (மன்/ எழுத்தூர் றோ.க.த.க)

★ தமிழியற் கட்டுரை இலக்கியம் நயத்தல் -

5ஆம் பிரிவு - கமலேந்திரன் கவியரஷன் (வ/ வவுனியா தமிழ் ம.ம.வி), கஜலக்ஸி விவேகானந்தராசா (யா/ கனகரத்தினம் ம.ம.வி), தர்சினி துரைசிங்கம் (மன்/ முருங்கன் ம.வி)

★ இலக்கணப் போட்டி

4ஆம் பிரிவு - தர்சிகா செல்வராஜா (யா/ வட இந்து மகளிர் கல்லூரி), ஜெகநாதன் திவ்வியா (வ/ புதுக்குளம் ம.வி), வின்சன் டெலக்டன் குரூஸ் (மன்/ புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி)

5ஆம் பிரிவு - நித்தியானந்தன் கீர்த்தனா (யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி), டக்ஷனா கெங்கதரன் (வ/ இறம்பைக்குளம் மகளிர் ம.வி), பாத்திமா இயாசா இப்ராகிம் சாகித் (மன்/ அல். அஸ்கர் ம.வி)

★ திறனாய்வுப் போட்டி

5ஆம் பிரிவு - பிரதர்ஸனா சௌந்தரராஜன் (யா/ யூனியன் கல்லூரி), றேமன் கூரேதாஸ் ஸ்ரெயினர் மார்க் (மன்/ புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி), மனோரஞ்சினி மனோகரன் (வ/ பூந்தோட்டம் ம.வி)

★ குறுநாடக ஆக்கம்

4ஆம் பிரிவு - மர்லின் தர்சினி யோசப் (யா/ திருக்குடும்ப கன்னியர்மடம்), பிரமியா நவரட்ணம் (வ/சைப்பிரகாச மகளிர் கல்லூரி), நசீரா அப்துல் ரசாக் (மன்/ கரிசல் றோ.க.த.க)

5ஆம் பிரிவு - மதுரிக்கா சேதுகாவலர் (வ/ சைப்பிரகாச மகளிர் கல்லூரி), ஜெயதர்சினி மரியதாஸ் (யா/ அருணோதயாக் கல்லூரி), மாதவி விஜயரத்தினம் (மன்/ உயிலங்குளம் றோ.க.த.க)

★ கவிதையாக்கம்

4ஆம் பிரிவு - கிருஜிகா கணபதிப்பிள்ளை (யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி), இராசலிங்கம் பிரதீபா (மன்/ கட்டை அடம்பன் றோ.க.த.க.பா), இராஜமணி லக்ஷனா (வ/ பூம்புகர் கண்ணகி வித்தியாலயம்)

5ஆம் பிரிவு - அம்பிகாநிதி கோகுலன் (யா/ நெல்லியடி ம.ம.வி), குகதாஸ் டனிஸ்லஸ் (மன்/ அல்மினா முஸ்லிம் மகாவித்தியாலயம்), இரட்ணேஸ்வரன் சுஜாந்தன் (வ/ புதுக்குளம் ம.வி)

★ சிறுகதை ஆக்கம்

4 ஆம் பிரிவு - சுகுமாரி சிறிபாலன் (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), ஜெயராசசேகரன் தர்ஷியா (வ/கடச்சூரி கருவேப்பங்குளம் அ.த.க.பா), சகாய நாதன் றொஜா கிளின்ரன் குலாஸ் (மன்/ பற்றிமா ம.ம.வி.)-

5 ஆம் பிரிவு - அர்ஷிகா லேகராஜா (யா/ யூனியன் கல்லூரி), நிஷாந்தினி தேவராசா (வ/ இறம்பைக் குளம் மகளிர் ம.வி), இம்மனுவேல் ரஞ்சித் முறாய்ஸ் (மன்/ புனித ஆனாள் ம.ம.வி)

★ வாசிப்பு

1ஆம் பிரிவு - மிலெனி கிறிசாந்தி (மன்/ புனித சவேரியார் பெண்கள் கல்லூரி), சு. செந்தூரன் (வ/ வவுனியா தமிழ் ம.ம.வி), கஜிபா பிரதீபன் (யா/ சுன்னாகம் நகேஸ்வரி வித்தியாலயம்)

2ஆம் பிரிவு - நிரோஜினி சிதம்பரநாதன் (யா/ அரணோதயாக் கல்லூரி), தொ. அபிஷேகா (மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரி), வ.யதுர்சன் (வ/பூம்புகார் கண்ணகி வித்தியாலயம்)

★ ஆக்கத்திறன் வெளிப்பாடு

1ஆம் பிரிவு - துளசிகா மூர்த்தி (யா/ இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை), த. வினோசன் (வ/புதுக்குளம் வித்தியாலயம்), மா. டிவைன்சி பர்னாந்து (மன்/ சென்.மேரிஸ் பெண்கள் வித்தியாலயம்)

★ பேச்சு

1 ஆம் பிரிவு - பே. மயூரி (வ/ இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி), காந்தரூபன் உகேஷ் (மன்/ சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி), மேதா முத்துக்குமார் (யா/இந்து ஆரம்பப் பாடசாலை)

2 ஆம் பிரிவு - மோகனதாரணி மகேந்திரநாதன் (யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி), கீர்த்திகா நிலாந்தினி பத்திநாதன் (மன்/ சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி), ஜெ. தனுஜா (வ/ கிடச்சூரி கருவேப்பங்குளம் அ.த.க.பா)

3ஆம் பிரிவு - இராவீந்திரன் சஞ்ஜிவ் (யா/கொடிகமாம் திருநாவுக்கரசு ம.வி), பு. சாமினி (வ/ கிடச்சூரி கருவேப்பங்குளம் அ.த.க.பா), ம.க. மாறி மொய்ரா (மன்/ புனித சவேரியார் பெண்கள் கல்லூரி),

4ஆம் பிரிவு - சி. சாருகா (வ/இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி), ஆன். நீவின் நர்மதா (மன்/ இலகடிப்பிட்டி றோ.க. த.க.பா), திருமகள் சிலுவைதாசன் (யா/ வேம்படி மகளிர் கல்லூரி),

5 ஆம் பிரிவு - ச. வினோஜா (மன்/ புனித சவேரியார் பெண்கள் கல்லூரி), பொ. நிருபிதா (வ/ விபுலானந்தாக் கல்லூரி), வண்ணமயில் நிரோஷன் (யா/ மத்திய கல்லூரி)

★ பாவோதல் -

1ஆம் பிரிவு - வி. அனுசியா (மன்/ சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி), ஜெ. டயனிகா (வ/ கிடச்சூரி கருவேப்பங் குளம் அ.த.க.பா), மதுராங்கனி நந்தகோபால் (யா/ இந்து ஆரம்பப் பாடசாலை),

2 ஆம் பிரிவு - த. அபிராமிதன் (வ/ கல்மடு ம.வி), றோ. ஜனோலியா (மன்/ சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி), அமிர்தவர்சினி அமிர்தலிங்கம் (யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி),

3 ஆம் பிரிவு - தயானி மகேந்திரராஜா (யா/ ஆனைக்கோட்டை றோ.க.பா), யோ. சிகான் குரூஸ் (மன்/ பத்திமா ம.ம.வி), ந. சிபிஷா (வ/ இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி)

4 ஆம் பிரிவு - கோபிகா செல்வக்குமாரன் (யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி); துளசிகா கைலைநாதன் (மன்/ சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி), சோ. ஜென்சி (வ/ தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்),

5ஆம் பிரிவு - தெ. தட்சாயினி (வ/ வவுனியா தமிழ் ம.ம.வி), அருள் நிலா அருட்செல்வம் (யா/வட இந்து மகளிர் கல்லூரி), ச. மேரி றோசலின் (மன்/ புனித சவேரியார் பெண்கள் கல்லூரி)

★ இசையும், அசைவும்

1 ஆம் பிரிவு - பவித்திரா குமரகுருபரன் (யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை), சி. சாஹித்தியா (வ/ சைவப்பிரகாசா மகளிர் கல்லூரி), ச. றெறன்சியா (மன்/கட்டையடம்பன் றோ.க.த.க.)

★ இசை தனி

இரண்டாம் பிரிவு-கீர்த்திகா இரங்கநாதன் (யா/ புத்தூர் சோமாஸ் கந்தா கல்லூரி), செ.குகதாஸ் (வ/இந்துக் கல்லூரி), அ.கிறிஷா மேரி (மன். புனித சவேரியார் பெண்கள் கல்லூரி),

மூன்றாம் பிரிவு - சிவராசா கஜேந்திரன் (யா/ ஹாட்லிக் கல்லூரி), அ.ஜோன்சன் (வ.தணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்), செ.அஸ்வர்யா (மன். சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி)-

நான்காம் பிரிவு - மயூரதி குகனேஸ்வரன் (யா/இந்து மகளிர் கல்லூரி), த.சர்மிளரூபன் (வ/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), ஜே.செபமாலை றெவ்வல் (மன். புனித ஆனாள் மத்திய மகா வித்தியாலயம்)-

ஐந்தாம் பிரிவு -சி.உசேனி (வ. சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), ரஞ்சினி வைரவன் ( யா/ விக்ரோறியாக் கல்லூரி), நீ.நிதர்சினி(மன்/ புனித சவேரியார் பெண்கள் கல்லூரி) -

★ நடனம் தனி

இரண்டாம் பிரிவு -சி.அபித்திரா (இந்து மகளிர் கல்லூரி), வி.ஆருதி (வ.இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி), பொ.ஆன். நித்தியா(மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரி),

மூன்றாம் பிரிவு - சிறிதரா வரதராசா (யா/ வேம்படி கல்லூரி), ஜனுசியா உதயகுமார் (மன்/ சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி), பா.சுகன்ஜா (வ.சைவப்பிரகாச மகளிர் கல்லூரி)-

நான்காம் பிரிவு - சிறி. மகிந்தபேசன் (வ.வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), ஆரணி செல்வேந்திரகுமார் (யா/ உடுவில் மகளிர் கல்லூரி), லோ.ந. ஆன். ஷறோமிதா (மன்/ புனித சவேரியார் பெண்கள் கல்லூரி)-

ஐந்தாம் பிரிவு - கணேசலிங்கம் பவன் (யா/ இணுவில் மத்திய கல்லூரி), சி.சோபிகா (வ/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), ச.அருள் மொழி குரூஸ் (மன்/ புனித சவேரியார் பெண்கள் கல்லூரி),

★ முஸ்லிம் நிகழ்ச்சி

திறந்தபோட்டி -வ.முஸ்லிம் மகா வித்தியாலயம், மன். புதுக்குடியிருப்பு அ.மு.க.பா.

★ சிங்கள மாணவர்களுக்கான தமிழ் வாசிப்பு

விசேட பிரிவு 1- ரஜிந்த பிரகாஸ் நித்தியா (வ.காமினி மகா வித்தியாலயம்)

★ சிங்கள மாணவர்களுக்கான தமிழ் பேச்சு

விசேட பிரிவு 1 - சர்மிளா வீரசேகர (வ. காமினி மகா வித்தியாலயம்)-

★ சிங்கள மாணவர்களுக்கான தமிழ் உறுப்பெழுத்துப் போட்டி

விசேட பிரிவு 1- பி.கே. கீதாஞ்சலி மதுசானி கணேசமூர்த்தி (வ. காமினி மகா வித்தியாலயம்)

விசேட பிரிவு 2- ஆர்.எம். சாருகா பிரியதர்சினி உபாலி ஜெயதிலக (வ. காமினி மகா வித்தியாலயம்)

★ நாட்டுக்கூத்து - சிந்து நடை

திறந்த போட்டி- யா/ அருணோதயக் கல்லூரி, வ.கல்மடு மகாவித்தியாலயம், மன். மோட்டைக்கடை அ.த.க.பா.

★ நாட்டுக் கூத்து - இசைநாடகம்

திறந்தபோட்டி - யா/ இணுவில் மத்திய கல்லூரி, யா/ திருக்குடும்ப கன்னியர் மடம்,

★ நாட்டுக்கூத்து தென்மோடி

திறந்த போட்டி -மன்/ புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி,யா/ கைதடி நாவற்குழி அ.த.க. வித்தியாலயம்

★ நாட்டுகூத்து வடமோடி

திறந்தபோட்டி -மன்/ உயிலங்குளம் றோ.க.த.க. வித்தியாலயம்,

★ விசேட கூத்து

திறந்து போட்டி - மன்/ சென். மேரிஸ் பெண்கள் வித்தியாலயம், வ. இலுப்பைக் குளம் றோ.க.த.க., யா/ பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி.

# ஆஸியிலுள்ள 9 இலங்கையர்களை நாடு கடத்த அந்நாட்டு அரசு ஏற்பாடு

ஆஸ்திரேலிய அரசு ஒன்பது இலங்கையர்களை நாடு கடத்தவுள்ளது - என்று இலங்கைக்கான ஆஸ்திரேலியத் தூதுவர் சேனக வல்கம்பாய தெரிவித்துள்ளார்.

இவர்கள் அனைவரும் சிங்களவர் என்றும், அகதிகள் இல்லையென்றும், வேலைவாய்ப்பைப் பெற்று கொள்வதற்காகவே ஆஸ்திரேலியாவிற்குள் வந்தனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவர்கள் பிரதமர் கெவின் ரூட் அரசு பதவியேற்றதன் பின்னர் பலவந்தமாகத் திருப்பியனுப்பப்பட்டு அடைக்கலம் கோரியோர் என ஆஸ்திரேலிய செய்தித்தாள் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இவர்கள் கடந்த வியாழக்கிழமை இரவு கிறிஸ்மஸ் தீவில் இருந்து பேர்த் நகருக்கு அழைத்து வரப்படவிருந்தார்கள். குறித்த ஒன்பது பேரும் கடந்த நவம்பர் மாதம் ஆஸ்திரேலியாவிற்குள் சட்டவிரோதமாக பிரவேசித்தன் பின்னர் கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள்.

இவர்கள் 12 பேர் அடங்கிய குழுவினருடன் ஆஸ்திரேலியாவிற்குள் பிரவேசித்தனர். எனினும் இவர்களில் இருவர் சுயமாகவே இலங்கைக்குத் திரும்பினர்.

இந்தநிலையில் நாடு கடத்தப்பட வுள்ள 9 பேரின் உயிருக்கும் இலங்கை யில் ஆபத்து எதுவும் ஏற்படப் போவதில்லையென ஆஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் கிரிஸ் இவான்ஸ் தெரிவித்துள்ளார்.

இவர்கள் அகதிகள் இல்லையென்றும் வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்காகவே ஆஸ்திரேலியாவிற்குள் வந்தனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் அடைக்கலம் கோரியோரின் சட்டத்தரணியான இயன் ரின்டவுல் தகவல் தெரிவிக்கையில் -

தாம் நாடு திரும்பினால் தமது உயிருக்கு ஆபத்து ஏற்படுமென ஒன்பது பேரில் உள்ளடங்கியுள்ள சரத் தென்னக்கோன் என்பவர் அச்சம் வெளியிட்டுள்ளார் என குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இந்த 9 பேரும் தாம் நாடு கடத்தப்படுவதற்கு எதிராக மனுத்தாக்கல் செய்த போதும் அது நிராகரிக்கப்பட்டது.

# கே.பிக்கு 600 வங்கிக் கணக்குகள்!

## அமைச்சர் ரம்புக்வெல தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 04

அரசால் தற்போது தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்ற கே.பி. என்றழைக்கப்படும் குமரன் பத்மநாதனுக்கு 600 வங்கிக் கணக்குகள் இருக்கின்றன - என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி அமைச்சரும் தேசிய பாதுகாப்பிற்கான அரசின் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பிற்கான ஊடக மத்திய நிலையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு செய்தியாளர் கேட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

கைதுசெய்யப்பட்டு தடுத்துவைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள கே.பியை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டுள்ளதா - என்று செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர்-

கே.பி.யிடம் தற்போது விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவருக்கு சுமார் 600 வங்கிக் கணக்குகள் இருக்கின் றன என்பது கண்டறியப்பட்டுள்ளது. விசாரணைகள் யாவும் நிறைவடைந்ததன் பின்னர் அவர் மீது நடவடிக்கைகள் எடுக்கப் படும் என்றார்.

# நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக்.4

கலாநிதி செ.சந்திரசேகரத்தின் 'சீனா - இந்தியா பொருளாதார அபிவிருத்தி ஓர் ஒப்பிட்டு ஆய்வு' என்னும் நூலின் வெளியீட்டு விழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யாழ் பல்கலைக்கழக நூலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இளம் பொறியியலாளர் மன்றத் தலைவர் கு.குணசீலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பொருளியற் துறைத் தலைவர் என். பேரின்பநாதன் வெளியீட்டுரையையும் பொருளியற் துறைத் தலைவர் பேராசிரியர் வி.பி. சிவநாதன், அரச அ[illegible]வியற்றுறைத் தலைவர் பேராசிரியர் அ[illegible]. மாணிக்கவாசகர் ஆகியோர் ஆய்வு[illegible]ளையும் நிகழ்த்துவர்.(1)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 70 ஆயிரம் பனம் விதைகள் நடுகைத் திட்டம்

யாழ்ப்பாணம், ஒக் 4

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 70 ஆயிரம் பனம் விதைகள் நடப் படவுள்ளன.

வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் ம.ஜெகூ இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

முதற்கட்டமாக நவாலி தெற்கு கொத்துக்கட்டி பரந்த நிலப்பரப்பில் (கல்லுண்டாய்) 5 ஆயிரம் மரம் பனம் விதை நடுகைத் திட்டத்தை அவர் ஆரம்பித்து வைத்தார்.

நவாலி தெற்கு கிராம அதிகாரி கு.எழிற்செல்வன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் நவாலி தெற்கு ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர் யெ.பே.அருமைநாயகம், உதவிப் பிரதேச செயலர் திருமதி எ.அன்ரன் யோகநாயகம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பனை மரங்கள் மீள்நடுகைத் திட்டத்தின் மூலம் 25 கிராம அலு வலர் பிரிவிலும் பனை நடுகை இடம்பெறும் எனத் தெரிவிக்கப் பட்டது.

இதேவேளை -

ஏனைய பிரதேச செயலாளர் பிரிவிலும் மேற்படி திட்டம் துரிதகதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (50-302)

STUDY IN EUROPE
MBBS/MD
Lugansk State Medical University
Ukraine (உக்கிரேன்) - East Europe
ஸ்ரீ லங்கா Medical Councilயினால் அங்கீகரிக்கப்பட்டது
With O/Ls 7 Years
With A/Ls 6 Years
இவ்வருடத்திற்கான First Batch மாணவர்கள் யாவரும் Ukraine VISA ஐ பெற்றுவிட்டனர்.
எமது நிறுவனத்தின் மூலம் அனுப்பப்பட்ட St.John's College Jaffna, St. Patricks College Jaffna, Holy Family Convent Jaffna, St. Michaels College Batticaloa, St.Mary's Convent Trinco, Vavuniya Vidyalam, Royal College Colombo, Hindu College Colombo, Hindu Ladies College Colombo, Ramanathan Ladies College Colombo Isipathana College Colombo ஆகிய கல்லூரிகளின் பழைய மாணவர்கள் தற்பொழுது Medical Degree (MBBS) கற்கின்றனர்.
Next Batch Starting : 15th October
www.lugmedi.com
Tel : (தமிழில்) 0777 767 818 / 4512591
Scholars Information Center
2nd floor, No.50, Galle Road, Colombo 06.

## சர்வதேச முதியோர்தின விழாவின் நான்காம் நாள் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஒக் 4

வடக்கு மாகாண சமூக சேவை கள் திணைக்களமும் கைதடி அரச முதியோர் இல்லமும் இணைந்து நடத்தும் சர்வதேச முதியோர்தின விழாவின் நான்காம் நாள் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கைதடி அரச முதியோர் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இல்ல அத்தியட்சகர் என்.இராசலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், யாழ்.பல்கலைக்கழகக் கலைப் பீடாதி பதி பேராசிரியர் என். ஞானக்குமாரன் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள் வார்.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழகசித்த மருத்துவத் துறை டாக்டர் திருமதி சிவஞான மலர் பஞ்சராசா, யாழ்.மரக்கூட்டுத் தாபனப் பிரதேச முகாமையாளர் சு. ஸ்ரீஸ்கந்தராசா, மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் த.ஞானவேல் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

கே.என்.கணபதிப் பிள்ளை 'இராமாயணம்'என்னும் தலைப்பில் கதா பிரசங்கம் நிகழ்த்தவுள்ளார்.

இந்த நிகழ்வில் மறைந்த முதியவர்கள் ஞாபகமாக மரக் கன்றுகள் நடும் நிகழ்வும்இடம்பெறும். (50-204-224)

## இன்றைய ஆட்டம்

வலி. வடக்கு,ஒக்.04

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபர் பி.எஸ். குமாரசுவாமி ஞாபகார்த்தமாக ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தினால் யாழ். மாவட்ட கிரிக்கட் அணிகளுக்கு இடையே நடத்தப்படும் 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும். ஆட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ். பற்றீசியன் விளையாட்டுக்கழகம் மோதும். (50-86)


STUDY IN UK
ADMISSION WITHOUT IELTS
JAN / FEB INTAKE IS IN PROCESS
April 1ஆம் திகதிக்குப் பின் நடைமுறைக்கு வந்துள்ள புதியவிசா நடைமுறையின் கீழ்
UK Visa Processing
வெற்றிகரமாக செய்து தரப்படும்.
மறுக்கப்பட்ட விசா தொடர்பில் சகல நாடுகளுக்குமான
Appeal/Administrative Review
அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளால் மிகத்திறமையான முறையில் செய்து தரப்படும்.
Head Office: 30-1/14, W.A.De Silva Mawatha, (Above Hotel Saravana Bavan) Colombo 6. Tel:0112500207
Eisc EXPRESS
INTERNATIONAL STUDIES & CONSULTANTS
107, Kashthuriyar Road, Jaffna.
Tel: 021 222 4550
E-mail:eisc_2007@yahoo,com Web:expresslanka.com
Contact : Selva : 0714 299 935 Robin : 0777 222 422

யாழ் நகரில் நம்பமுடியாத கட்டணக்கழிவில்
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்
Post Graduate Diploma In Management (Pre.MBA)
காலம் 9 மாதங்கள் (MBA final year in UK / London)
To Whom :பட்டதாரிகள், வர்த்தக வியாபார பட்டதாரி அல்லாதவர்கள், உயர்தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்கள் (HNDM, HNDA முடித்தவர்கள்)
HND in Business Management - Edexcel
HND in Computing - Edexcel
HND in Quantity Surveying - Edexcel
காலம் 18 மாதங்கள் (Bsc final year in UK / London)
Admission Requirements : 2 passes in G.C.E. (A/L) in any subject and 6 passes inclusive of two credit passes for English and Mathematics in G.C.E (O/L) examination or Success full completion of BCHS Access programming.
Diploma In Hospitality Management (Hotel Management)
இவ் 6 மாதக் கற்கை நெறியினை முடித்தவர்களுக்குஅடுத்த இரண்டு வருட பட்டப்படிப்பு லண்டனில்
காலம் 6 மாதங்கள்
அனைத்துப் பாடநெறிகளுக்குமான புதியபிரிவுகள் ஆரம்பிக்கப்படுகின்றன
Batch 4 07.10.2009 Batch 5 10.10.2009 Batch 6 18.10.2009
எமது நிறுவனத்தின் அனைத்துக் கற்கைநெறிகளுக்கும் சர்வதேச தரம் கொண்ட சான்றிதழ்கள் வழங்கப்படும்.
Access Programming (Foundation Degree Programme ) காலம் 6 மாதங்கள்
O/L முடித்த மாணவர்கள் அல்லது A/L யில் நல்ல பெறுபேறுகள் அல்லாதவர்களும் இப்பாட நெறியினைப் பூர்த்தி செய்து Higher National Diploma போன்ற கற்கை நெறிகளைக் கற்று, பட்டதாரி ஆகுவதற்கான முன்னோடிப் பாடநெறி
Diploma in English Advanced Diploma in English காலம் 6 மாதங்கள்
மாணவர்கள் ஆங்கிலத்தில் தங்களின் உயர்கல்வியினை இலகுவாக தொடரவும், ஆங்கிலத்தில் சரளமாக உரையாடுவதற்கும் ஏற்றவிதமாய் தயாரிக்கப்பட்டுள்ளது.
எமது நிறுவனத்தில் கல்வி கற்று வெளியேறும் மாணவர்களுக்கு 100 % Student Visa பெற்றுக் கொள்வதற்கு அனுபவம் வாய்ந்த எமது சட்டத்தரணிகளால் உத்தரவாதம் வழங்கப்படும்
BCHS
No.15, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna.
HotLines: 0773501499 / 0777222422 / 0714299935
E-mail: info@bchs.lk

## வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் இன்று இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம்,ஒக்.03

வல்லிபுர ஆழ்வாரைத் தரிசிக்க வரும் அடியார்கள் இரத்த தானம் செய்வதற்கு ஏதுவாக ஆலய வடக்கு வீதியில் இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இரத்ததானம் செய்ய விரும்பு பவர்கள் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9மணியிலிருந்து இரத்ததானம் செய்ய முன் வருமாறு யாழ். இரத்த வங்கி அதிகாரி கேட்டுள்ளார்.

Educational Consultant / Agents Wanted
கொழும்பில் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக Overseas Higher Educational Consultants ஆக UK, USA, Ukraine, Romania, India, Switzerland, Malaysia, Singapore ஆகிய நாடுகளை சேர்ந்த பல University/Colleges இன் ஏக பிரதிநிதிகளாக இயங்கும் எமது நிறுவனத்திற்கு
யாழ்ப்பாணத்தில் Agent தேவை.
ஓர் பட்டதாரி/ஓய்வு பெற்ற ஆசிரியர் விரும்பதக்கது. யாழ் நகரில் இயங்கும் Office/Tutory/ வீடு வைத்திருப்பவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.
Peter Selvarajah - 0777-767 818
E-mail : scholinfo@yahoo.com
Scholars Information Center
2nd floor, No.50, Galle Road, Colombo 06.

## மரண அறிவித்தல்

### திருமதி சிவபாக்கியம் குமாரசுவாமி

உடுவில் கிழக்கு, வேதாரணியர் வளவைப் பிறப்பிடமாகவும் தற்போது லண்டனில் வதியும் திருமதி சிவபாக்கியம் குமாரசுவாமி (இளைப்பாறிய ஆசிரியை, இராமநாதன் கல்லூரி) 30.09.2009 அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் அமரர் பொ. ச. குமாரசுவாமி (பி.எஸ்.-முன்னாள் அதிபர், யாழ் இந்துக்கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும் ரோகிணி, கல்யாணி, தர்மினி ஆகியோரின் அருமைத் தாயாரும், ராஜ் குமார், கதிர்காமநாதன், ஜெயபாலன் ஆகியோரின் அன்பு மாமியாரும், அஞ்சுகன், பகவதி, பிரசன்னா, பிரனீதா, கிருத்திகா, நயனேஷ் ஆகியோரின் ஆசை அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 11.10.2009 அன்று லண்டனில் நடைபெறும். அன்றையதினம் பிற்பகல் மூன்று மணியாளவில் அவரின் உடுவில் இல்லத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இடம்பெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

வேதாரணியர் வளவு,
உடுவில் கிழக்கு, சுன்னாகம். (89537)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்



### ஐயம்பிள்ளை ஏரம்பமூர்த்தி

(உரிமையாளர், Aquila (Pvt)Ltd., Amariwills Lanka (Pvt)Ltd.) )

காரைநகர் , சக்கலாவோடையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை ஏரம்பமூர்த்தி 01.10.2009 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி ஐயம்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வரும் பாலசிங்கம் - அன்னமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் டாக்டர் செல்வரத்தினம், கணேசன், சோதிநாதன், தவமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவஞானம் லோகேஸ்வரி, இராசலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 83/7, W.A.சில்வா மாவத்தையில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (05.10.2009) திங்கட்கிழமை காலை 9 மணியளவில் இல்லத்தில் இருந்து பொரளை ஜெயரத்தின மலர்ச் சாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு இறுதி ஆராதனைகள் நடைபெற்று பி.ப. 3 மணியளவில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பா.சிவஞானம்,
சக்கலாவோடை,
காரைநகர்.
தொ.பே.: 0112 505603

தகவல்:
மனைவி, உற்றார்,
உறவினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தபால் மூல ஆங்கில பாடநெறி ENGLISH CORSE

நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்தவாறே எம்முடன் இணைந்து ஆங்கிலத்தை சரளமாகவும் தெளிவாகவும் கற்றுக் கொள்ள முடியும்

* கிளாஸ் போகும் காலம் நேரம் மீதம் / வீண் கட்டணங்கள் இல்லை
* துரித காலம் என்பதால் 1 மாதத்தில் பாடநெறியை முடிப்பதால் பயன் இல்லை
* அடிப்படையில் இருந்தே கற்றுக்கொடுக்கப்படும்

முதல் இணையும் 500 மாணவ / மாணவிகளுக்கு மாத்திரமே Tigo Sim ஒன்று இலவசம்

பாடநெறியில் இணையும் அனைவருக்கும்

அழகிய பேக் ஒன்றும் Tigo Sim (தொலைபேசி இணைப்பு) ஒன்றும் வழங்கப்படும்

இந்த DIPLOMA சான்றிதழ் உங்கள் கல்வித்துறை, மற்றும் தொழில் வாய்ப்புக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு துணையாக அமையும்

மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 20/= பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்

## UNION EDUCATIONAL INSTITUTE

P.O. BOX 143, KANDY, SRI LANKA. TEL: 0817 918 981 / 0773 123 523

மாற்று வழிகளிலோ, மறைமுகமான கட்டணங்களோ அறவிடப்படமாட்டாது.


# ஆசிரியர் தின மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், ஒக்.4

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் தினத்தை முன்னிட்டு மெய்வன்மைப் போட்டி நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. ஏற்கனவே விண்ணப்பித்த ஆசிரியர்களை சமுகமளிக்குமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (201)

# சைக்கிள் வழங்கும் நிகழ்வு

நவாலி, ஒக்.4

கட்டுடை முதியோர் நலன் காக்கும் கழகம் நோயினால் பாதிக்கப்பட்ட ஒரு முதியவருக்கு மூன்று சில்லுச் சைக்கிள் வழங்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.30 மணிக்கு கழகத் தலைவர் ச.சிவகுமாரன் தலைமையில் கட்டுடை சைவ வித்தியாசாலையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராகச் சுன்னாகம் றோட்டரிக் கழகத் தலைவர் சோ.உருத்திரன் கலந்துகொள்வார். (203-100)

# விவசாய, ஒருங்கிணைப்பு குழுக் கூட்டங்கள்

வலி.கிழக்கு பிரதேச செயலக பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் விவசாயக் குழுக் கூட்டமும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (203-72)

## அறிவித்தல்

### தலையாழி அருள் மிகு ஞானவைரவர் ஆலயம்

சபாபதி வீதி, தலையாழி, கோக்குவில்.

மேற்படி ஆலய உரிமையாளராகிய கனகரத்தினம் ஆனந்தகுமாரராஜா ஆகிய நான், 05.10.2009ஆம் திகதியில் இருந்து எனது உறுதி உரிமைப்படி ஆலய நிர்வாகத்தைப் பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்பதை வழிபடுநர்களுக்கு அறியத்தருகிறேன்.05.10.2009 முதல் ஆலயம் தொடர்பான சகல தேவைகளையும் என்னுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கனகரத்தினம் ஆனந்தகுமாரராஜா
ஆலய உரிமையாளர்,
சபாபதி வீதி, தலையாழி,
கொக்குவில்.

(89519)

## யா/ பிரான்பற்று கலைமகள் வித்தியாலயத்தின்
# கண்ணீர் அஞ்சலி



எமது வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அவர்களின் கனிஷ்ட புத்திரன்

**செல்வன் வி.சுதர்ஸனின்**

திடீர் மரணச்செய்திகேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

யா/பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம், பண்டத்தரிப்பு. (89525)
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

## வீடு விற்பனைக்கு

சுண்டுக்குளி, குருசோ வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 0776146434

(89417)

## தேங்காய்ச் சிரட்டை தேவை

நியாயமான விலைக்கு பெற்றுக்கொள்ளப்படும்.

தொடர்பு :- 0773717369

(89523)

## மரண அறிவித்தல்

**தொம்மைப்பிள்ளை இம்மனுவேல் விஜயதெய்வேந்திரன்**

ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் பாண்டியந்தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட தொம்மைப்பிள்ளை இம்மனுவேல் விஜய தெய்வேந்திரன் (குணம்) அவர்கள் 03.10.2009 அன்று கொழும்பில் காலமானார். அன்னாரின் இறுதிச் சடங்கு பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

41.ஈச்சமோட்டை றோட், சுண்டுக்குளி. (895149)
தகவல்: Dr.ஆனந்தராஜா லோறன்ஸ்.

# கண்ணீர் அஞ்சலி



வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அவர்களின் பாசமிகு புதல்வன்

**செல்வன் வி.சுதர்ஸன்**

அவர்களின்அகால மரணச்செய்திகேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு, அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம்சாந்தி

யா/சுதுமலை தெற்கு அ.த.க.பாடசாலை,
சுதுமலை, மானிப்பாய். (89459)
அதிபர், ஆசிரியர்கள்.

# கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர்
ப.விக்னேஸ்வரன்
அவர்களின் பாசமிகு புதல்வன்

**செல்வன் வி.சுதர்ஸன்**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



யா/மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை,
பாடசாலைச் சமூகம் மானிப்பாய்.

(சி/561388)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக்.4

யாழ்.சர்வதேச மார்க்சிய குழுவின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். வேம்படி வீதியில் அமைந்துள்ள அகவிழிநிலையத்தில் சொ.சிவபாலன் தலைமையில் 'சமகால அரசியல்' என்னும் தலைப்பில் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. (204)

# திருவிழாத் திருப்பலி

சித்தங்கேணி, ஒக்.4

பண்டத்தரிப்பு புனித செபமாலை அன்னையின் வருடாந்த திருவிழா திருப்பலி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு பண்டத்தரிப்பு பங்குத்தந்தை அருட்பணி.ம.ஜெகநாட்ணம் அடிகளார் தலைமையில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

(203-112)

# Mathuram Institute

Ducth Road, Irupalai, Kopay.

## மதுரம் இன்ஸ்ரிரியூட்

டச்சு வீதி, இருபாலை, கோப்பாய்.

## பரிசுத் தினம் ~ 2009

இடம் : நிறுவன பிரதான மண்டபம்
காலம் : இன்று (04.10.2009) ஞாயிறு காலை 9.00 மணி
தலைவர் : திரு. S.K கிருபாகரன் (நிர்வாக இயக்குனர்)
பிரதம விருந்தினர் : கலைநேசன் C.A மோகன்றாஸ் (பிரதேச செயலர், கோப்பாய்)

| G.C.E. O/L 2008 | | G.C.E. A/L 2008 |
|---|---|---|
| 1. எஸ்.கணேஸ்பரன் | 1. ஆர்.துளசிகா | 1.ஆர். கார்த்தீபன் |
| 2. பி. சுதர்சன் | 2. பி.மிஷாந் | 2. ஜே. சரண்யா |
| 3. பி. கிருசாயி | 3. என். தர்மினி | |
| 4. பி. ஆதித்யன் | 4. ரி. டிலாசிகா | |
| 5. ஏ. ஈஸ்வரன் | 5. கே. பிரபாலினி | |
| 6. எஸ். அன்ரோயின் | 6. கே. ஆதித்தன் | |
| 7. கே. கிருசாந்தன் | 7. ஜே. கோகுலதீபன் | |
| 8. ரி. வசீகரன் | 8. ஜே. சுலோஜனா | |
| 9. ஆர். துவாரகா | 9. செல்வி. ஜே. யாழினி | |
| 10. பி. பவித்திரா | | |
| 11. ரி. கல்பனா | | |
| 12. எல். அட்சரா | | |
| 13. என். தாரணி | | |

இவர்களுடன் ஏனைய சித்தியடைந்த மாணவர்களையும், தவணை, இடைத்தவணைப் பரீட்சைகளில் (2008) அதிஉயர் புள்ளி பெற்று பரிசு பெறும் மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மாலை 2 மணிமுதல் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம் பெறும்

இவ்விழாச் சிறக்க அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
நிர்வாக இயக்குனர்,
ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்.

# முதலாம் ஆண்டு நினைவு

தோற்றம்
16 * 11 * 1938



மறைவு
15 * 10 * 2008

## அமரர் நடேசு இராசரத்தினம் (N.R)

(முன்னாள் இ.போ.ச. நடத்துநர் , பருத்தித்துறை)
மாறாதவுன் நினைவுகளும்
(திதி :- பிரதமை 04. 10. 2009)

நிலையிழந்து போவோமென்று நினைத்துமே இருக்கவில்லை
தலைமகனாய் இருந்தெம்மைத் தாங்கியும் வாழ்ந்தவரே!
அலையற்ற கடலெனவே ஆழ்ந்தோமே சோகத்தில்
மலையெனவே இருக்குதையா மாறாதவுன் நினைவுகளும்
எமது குடும்பத் தலைவரின் ஆத்மா சாந்திபெற
ஆலடிவாழ் ஐங்கரனைப் பிரார்த்திக்கின்றோம்
சாந்தி!!! சாந்தி!!! சாந்தி!!!

(இ/561393)

இராஜகங்கை,
கவிஞர் செல்லையா வீதி, அல்வாய்.

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.


After A/L

மல்டிமீடியா பயிற்சிகள்

DVP Diploma in Digital Video Production

ADDP Adv. Diploma in Digital Pre-Press



ஆரம்ப நிலையில் உள்ளவர்களுக்கு
MS Office
DTP (Type Setting)
Web Design
Computerised Accounting
Duration: 3 Months

New Batches on 5th ,7th ,9th October

காலம்: 3 மாதங்கள்
100% செய்முறைப் பயிற்சி
இலவச பாடநூல்கள்

டலி ஒரிஜினல் சான்றிதழ் எம்மிடமிருந்து மட்டுமே !

Don't Settle for Less

2 in 1 Offer

Tally 9

VAT | P/L A/C | Balance Sheet | Payroll | Inventory | Audit
ERP Concept | POS | Excise

" Certified Computer Accountant " மற்றும் Tally நிறுவனம் வழங்கும் இரு சான்றிதழ்களைப் பெற்றிடுங்கள்

The World Largest Tally Academy

ASIAN - CSC COMPUTER EDUCATION

26, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P: 021-222 5677

நெல்லியடி கொடிகாமம் வீதி, நெல்லியடி. T.P : 021-3734088, 077-3122198


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.மத்திய கல்லூரி ஆரம்பப் பாடசாலையில் 2009 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 157 புள்ளிகளைப்பெற்று சித்தியடைந்த குணநேசன் விமலாம்பிகை தம்பதிகளின் செல்வப் புதல்வன்

**செல்வன் கு.நவனீதன்**

அவர்களை அப்பா, அம்மா, அக்கா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, பெரியப்பா குடும்பம், சின்னமாமா, பெரியமாமா குடும்பம், இத்தாலியில் வசிக்கும் பெரியமாமா மாமி குடும்பம், சுவிஸில் வசிக்கும் சின்னமாமா மாமி குடும்பத்தினர் சகல செல்வங்களும் பெற்று யாழ்.சாந்தையர்மடம் கற்பக விநாயகர் அருள்பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர். அத்துடன் இவர் கல்வி பயின்ற பாடசாலை அதிபருக்கும் கல்வி கற்ற ஆசிரியர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

92, சீனிவாசகம் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

தகவல்:
நா.குணரத்தினம்
(அப்பப்பா).

## விநியோகஸ்தர்கள் தேவை (Distributers)

கொழும்பைத் தலைமைக் காரியாலயமாகக் கொண்டு இயங்கி வரும் நிறுவனத்திற்கு விநியோகஸ்தர்கள் தேவை. அனைத்து ஆவணங்களுடன் 05.10.2009 (திங்கள்) அன்று முற்பகல் 9.30 தொடக்கம் 1.30 க்குள் யாழ்.அலுவலகத்திற்கு நேரடியாக சமுகமளிக்கவும்.

ஒட்டோ சாரதி தேவை

சாரதி அனுமதிப் பத்திரத்துடனும் அனைத்து ஆவணங்களுடனும் சமுகமளிக்கவும்.

உதவியாளர்கள் தேவை (Helpers) (இருபாலாரும்)

முன் அனுபவம் இல்லாதவர்கள் பயிற்சி அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்

நியூ ஆரோக்கியா
இல. 50, கனகசபை ஒழுங்கை,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P - 0777229092 H.T - 0114550515
Head Office No.16 ½, E.S பெர்னான்டோ மாவத்தை, கொழும்பு - 06
Tel. 0114550515

## DIGITAL ELECTRONICS
### Authorized Dealers of Brown & Co. plc.

சென்ற மாதம் (செப்ரெம்பர்) பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்

| | வாடிக்கையாளர் விவரம் | பற்றுச் சீட்டு இல. | பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு : | Top World நல்லூர், யாழ். | 0037 | 3000.00 |
| 2ஆம் பரிசு : | Ruban Electricals கண்டி வீதி, கொடிகாமம். | 1222 | 2000.00 |
| 3ஆம் பரிசு : | கலைமகள் பிறிண்டர்ஸ் திருநெல்வேலி, யாழ். | 0057 | 1000.00 |

Brown & Company plc (O/A/D-IBS)இன்

அங்கீகரிக்கப்பட்ட ஏக முகவர்:-
டிஜிரல் எலக்ரோனிக்ஸ்,
62/16,ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஸ்ரான்லி வீதி, கொமர்ஷல் வங்கி அருகாமை.)
T.PHONE - 021 222 4040

(ஜி/561397)


## மரண அறிவித்தல்

### திருமதி தனபாக்கியம் முடிசிங்கராசா
(நல்லையா ரீச்சர் - ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்)



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனபாக்கியம் முடிசிங்கராசா 02.10.2009 வெள்ளிக்கிழமை நோர்வேயில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா - இராசம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சங்கரப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற முடிசிங்கராசாவின் அன்பு மனைவியும் சிவமதி (கனடா), சிவதர்சினி (நோர்வே), அருட்செல்வி (கனடா), சிவசங்கர் ஆகியோரின் பாசமிகு தாயாரும் கமலவண்ணன் (கனடா), ஜெகன்மோகன் (நோர்வே), தேவப்பிரியன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் நிரூஜன், நிவேதா, பிரியங்கா, பிரீத்தா, பிரவீன், சுலக்ஷா, சுலக்ஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற ஈஸ்வரி மற்றும் மகேஸ்வரி, விஜயகுலசேகரி, புனிதவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.10.2009 செவ்வாய்க்கிழமை நோர்வேயில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீதிமன்ற வீதி, மல்லாகம்.
021 321 4060
நோர்வே
T.P.: 004722656211

தகவல்:
செ.ரகுநாதன் (மருமகன்)
மு.சிவசங்கர் (மகன்)

## உடுவில் மகளிர் கல்லூரியில் நாளை ஒன்று கூடுமாறு மாணவர், ஆசிரியர்களுக்கு அழைப்பு
### அமைச்சர் டக்ளஸ் விடுத்துள்ளார்

யாழ்ப்பாணம், ஒக்.04

உடுவில் மகளிர் கல்லூரியில் பயிலும் மாணவிகளின் பிரச்சினைக்குத் தீர்வை தெரிவிக்கும் வகையில் கல்லூரியின் மாணவிகள், ஆசிரியர்கள் மற்றும் இவ்விடயம் தொடர்பில் அக்கறையுள்ள அனைவரையும் நாளை திங்கட்கிழமைகாலை கல்லூரிக்குச் சமுகமளிக்குமாறு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அழைப்பு விடுத்துள்ளார்.

உடுவில் மகளிர் கல்லூரி விவகாரம் தொடர்பில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மிகுந்த அக்கறையுடன் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கிடையில் இணக்கப்பாட்டுடன் ஓர் நல்ல முடிவைக் கொண்டுவர வேண்டும். என்றும் எக்காரணம் கொண்டும் மாணவிகளின் கல்வி நடவடிக்கைகளுக்கு இடையூறுகள் ஏற்படக் கூடாது என்றும் தொடர்ந்து பாடுபட்டு வருகின்றார். - என்று அமைச்சின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1)


### வீடு விற்பனைக்கு

மின்சாரசபை வீதி, சுன்னாகத்தில் உள்ள 4 பரப்புக் காணியுடன் 3 அறைகள், குசினி, கிணற்றுடன் வீடு விற்பனைக் குண்டு.
தொடர்பு:
இ.கிருஷ்ணர்
சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.
T.P: 0213219614

## விற்பனைக்கு

வெளிநாட்டில் பாவித்த நல்ல நிலையில் உள்ள
25" SHARP / 25" JVC FLAT - TV - 18,000
KEN WOOD - DTS AMP - 14,000
KENWOOD STEREO AMB - 10,000
YAMAHA - 110V AMB - 7,000
MEMOREX DVD RECORDER - 800

தொடர்புக்கு :
187/3,யூனியன் லேன்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(89536) T.P 0772417949

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக் கோழி மிகக் குறைந்த விலையில் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம்.
A.S.S. பாம்,
தியேட்டர் வீதி, இணுவில் கிழக்கு, இணுவில்.

## விசேட மலிவு விற்பனை

யப்பானில் மறுசீரமைக்கப்பட்ட குளிர்சாதனப் பெட்டி, வாசிங் மெசின், T.V., கெசட் பிளேயர், மோட்டார் சைக்கிள் என்பன அதிரடி மலிவு விலையில் உத்தரவாதத்துடன் விற்பனையாகிறன.

ஸ்ரீநாராயணா ஸ்ரோர்ஸ்
மானிப்பாய் சந்தையருகில்.

## வேலைக்கு ஆள்தேவை

வீட்டு வேலைக்கும் சுகவீனமான பெண்ணை பராமரிப்பதற்காகவும் பெண் முழு நேரப் பராமரிப்பாளர் தேவை. தங்குமிட வசதி, உணவு வசதி உண்டு.
தொடர்புக்கு :- 077 6333133

## தவறிவிட்டது

உயரப்புலம், ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் திருக்கேதீஸ்வரன் என்பவருடைய அடையாள அட்டை (800143730V) யாழ். நகரப் பகுதியில் 24.09.2009 அன்று தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். 077 6648678

## வேலையாள்கள் தேவை

எமது நிறுவனத்திற்கு கணக்காளர், விற்பனையாளர், போட்டோப் பிரதி எடுப்பவர், தொலைபேசி இயக்குநர், கொம்பியூட்டரில் கணக்கியல், ரைப்பிங் வேலைகள் தெரிந்தவர்கள் (பெண்கள் மட்டும்) வேலை பழகுபவர்களும் விரும்பத்தக்கது நாளை (05.10.2009) திங்கட்கிழமை காலை நேரில் வரவும்.

சன்லைற் ரைக் கிளினர்ஸ்
இல.23, மின்சார நிலைய வீதி,
(பஸ் நிலையம் முன்பாக)
யாழ்ப்பாணம்.

## வேலைவாய்ப்பு

1) பிரபல புத்தக வெளியீட்டு நிறுவனத்தின் விநியோகக் கணக்குகளை யாழ்.குடாநாட்டின் பல பகுதி பாடசாலைகளிற்கும் சென்று சரிபார்க்கக் கூடியவர் தேவை.
♦ இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
♦ ஓய்வுபெற்றவருக்கு முன்னுரிமை
2) கணனி ரைப் செற்றிங் செய்யக்கூடியவர் தேவை (பெண்)
♦ நல்ல தேர்ச்சி முன் அனுபவம் உள்ளவர்களுக்கு ரூபா 7000 - 10000 வரை சம்பளம்

அழையுங்கள்
SPEED MARKETING SYSTEM
0718474325, 0772395783


## மரண அறிவித்தல்கள்

### திருமதி கந்தையா பிள்ளையம்மா



இல.05, இராமநாதன் வீதி, நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும், தற்போது இல.186, யாழ். வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா பிள்ளையம்மா கடந்த (02.10.2009) வெள்ளிக்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் சி.கந்தையா (இளைப்பாறிய ஆசிரியர், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை) அவர்களின் அன்பு மனைவியும் சற்குணநாதன் (சட்டத்தரணி அவுஸ்திரேலியா), சறோஜினிதேவி (டென்மார்க்), வசந்தாதேவி (மானிப்பாய்), காலஞ்சென்ற சுலோசனாதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும், இராஜமலர், இந்திரசேனன், அரியபுத்திரன் (தொழில் நுட்ப உத்தியோகத்தர், யாழ். மாநகர சபை) ஆகியோரின் அன்பு மாமியாரும், நர்மதா, விஜிதா (அவுஸ்திரேலியா), தக்ஷியா (லண்டன்), கஜேந்திரன், இராஜசேனன், நிஷாந்தி, பிரகாஷ் (டென்மார்க்), பிரதாபன் (பிரான்ஸ்), பிரியதருஷன் (லண்டன்), பிரியகாஷன் (கொழும்பு), தனுஜா, அஜித்தா ஆகியோரின் பேர்த்தியும். சகீஷா (அவுஸ்திரேலியா), அனோஸ் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் காலஞ்சென்ற நாகராஜா மற்றும் பாலசுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.10.2009) திங்கட்கிழமை மானிப்பாயிலுள்ள மகளின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப 10 மணியளவில் தகனக்கிரியைக்காக பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

186, யாழ். வீதி,
மானிப்பாய்.
021 321 9250

தகவல்:
வ.அரியபுத்திரன் (மருமகன்).

### தங்கராசா மனோகரன்

யாழ்ப்பாணம், நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி, கச்சாய் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா மனோகரன் (02.10.2009) வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் தங்கராசா - காலஞ்சென்ற அமிர்தவள்ளி தம்பதியரின் அன்பு மகனும் காயத்திரியின் பாசமிகு கணவரும் மிதூர்சன், கவாஸ்கரன் (றிபேக்கல்லூரி மாணவர்கள்), பானுகா (சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலசுந்தரம் (ஓய்வுபெற்ற உதவிக் கல்விப்பணிப்பாளர், தென்மராட்சி வலயம்), புஸ்பமலர் தம்பதியரின் அன்பு மருமகனும் கல்பனா (லண்டன்), துஸ்யந்தி (கனடா), சரத்சந்தர் (கனடா), சாருலதா (கொழும்பு) உதயசங்கர் ஆகியோரின் அத்தானும், உதயதாஸ் (கனடா), சூரியபாலன்(லண்டன்), கதாயுதன் (கொழும்பு) ஆகியோரின் சகலனும், தயாபரன், நந்தினி, சாந்தினி, வசந்தகுமாரன் (வவுனியா), காலஞ்சென்ற அஜந்தகுமாரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் குகராணி, ஜெயக்குமார் (மலேசியா), பரமேஸ்வரன் (மலேசியா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.10.2009) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சாய் வீதி,
சாவகச்சேரி.
T.P.: 0776785085

தகவல் :
மனைவி, பிள்ளைகள்

### செல்லப்பா கனகரத்தினம் (சவாரிக் கனகர்)

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் ஆதிமயிலிட்டியை வசிப்பிடமாகவும் தற்போது தெல்லிப்பழையில் வசித்தவருமான செல்லப்பா கனகரத்தினம் நேற்று (03.10.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் செல்லப்பா - சம்பரம் தம்பதியினரின் அன்பு மகனும், பொன்னம்மாவின் அன்புக் கணவரும் , பாலகிருஷ்ணன் (சிமெந்துக் கூட்டுத்தாபனம்), பாலசௌந்தரி (விசாலாட்சி வித்தியாசாலை), பாலறஞ்சினி, கமலாதேவி (கைதடி - முத்துக்குமார சுவாமி ம.வி), விமலாதேவி (அருணோதயாக் கல்லூரி), சோதிமலர் (சென்.மேரிஸ் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நேசமலர் (பிரதேச செயலகம் - மன்னார்), ஈஸ்வரன் (சுகாதாரத் திணைக்களம்), வரதராஜன், கோபாலகிருஷ்ணன், இராசேந்திரம், நவநீதகிருஷ்ணன் (யாழ். இந்துக் கல்லூரி) ஆகியோரின் மாமனாரும், பாநிதி, திசாந், மகிழ்யா, பரிமளன், டினாந்தி, நதீஸ்வரன், விகிர்தன், பானுஜா, பானுஜன், யகிர்தன், துவிகாந், ஷஞ்சயன், சங்கீதை ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (5.10.2009) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காகப் பூதவுடல் தெந்தனை கட்டுப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வவுணாவத்தை சைவப்பிரகாச
பாடசாலை ஒழுங்கை,
தெல்லிப்பழை.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org